பக்கங்கள்: இருபது

Registered as a Newspaper

22 AUG 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

விலை ரூபா 8 - 00

மலை: 8 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி6 சனிக்கிழமை [22 - 08 - 1998] SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம்:12

# அரசு - புலிகள் மீது பிரிட்டன் அழுத்தம் கொடுக்க வேண்டும்!

## தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் தூதுவரிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 22

**தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரை நிறுத்துமாறும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணுமாறும் இலங்கை அரசாங்கம் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் பிரிட்டிஷ் அரசாங்கம் அழுத்தம் கொண்டுவர வேண்டும்.**

யாழ்ப்பாணம் மாநகர சபை, பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் தத்தமுக்கு நேற்று அளித்த வரவேற்பின்போது சபையில் அங்கம் வகிக்கும் கட்சிப் பிரதிநிதிகள் அவரிடம் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த பிரிட்டிஷ் தூதுவருக்கு, நேற்று முற்பகல் யாழ். மாநகரசபையில் அடக்கமான முறையில் வரவேற்பளிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மக்களின்கலாசார முறைப்படி சிறந்த வகையில் வரவேற்பு வழங்கத் தாம் திட்டமிட்டபோதிலும் தூதுவர் அதனை விரும்பாமையால் அடக்கமான முறையில் வரவேற்புபசாரம் ஒழுங்கு செய்யப்பட்டதாக யாழ். மாநகர முதல்வர் பொன். சிவபாலன் தமது வரவேற்புரையில் தெரிவித்தார்.

மாநகரசபைக்கு பிரிட்டிஷ் தூதுவர் வந்து சேர்ந்ததும் மாநகர முதல்வரும், ஆணையாளர் வி. பி. பாலசிங்கமும் மலர் மாலைகள் அணிவித்து வரவேற்றனர். ஈ. பி. டி. பி. சார்பில் வி. கே. ஜெகன், புளொட் சார்பில் செ. கிருபைராஜா, ஈ. பி. ஆர். எல். எவ். சார்பில் த. சுபத்திரன் ஆகியோர் ரோஜா மலர்களைக் கொடுத்து வரவேற்றனர்

மாநகர முதல்வரின் கூடத்தில் அவரது தலைமை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 19 இலங்கையரை ஜப்பான் திருப்பி அனுப்பியது!

### பொலீஸார் தீவிர விசாரணை

கொழும்பு, ஒக. 22

படகுகள் மூலம் சட்ட விரோதமாக ஜப்பானுக்குள் நுழைய முயன்றதாகக் கூறப்படும் 19 இலங்கையர்கள் நேற்று முன்தினம் இரவு கொழும்புக்கு நாடு கடத்தப்பட்டனர்.

இவர்கள் கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததும், அங்கு அவர்கள் பொலீஸாரினால் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

விசாரணையைத் தொடர்ந்து வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

மேற்படி நபர்களை நாடு கடத்துவதற்கு ஏற்பட்ட செலவை செலுத்திய பின்னரே அவர்களை உறவினர்கள் அழைத்துச் செல்லலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

# பிரதேச செயலகங்களுக்கு நிதி இதுவரை ரூபா 1 கோடி மட்டுமே!

## வடக்கு - கிழக்கு அபிவிருத்தியில் பாதிப்பு ஏற்படலாம்

கொழும்பு, ஓகஸ்ட் 22

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வருடம் 17 கோடியே 90 லட்சம் ரூபாவை அரசாங்கம் வழங்கி வந்தது.

ஆனால் இந்த ஆண்டு இதுவரை இந்தப் பணிக்காக ஒரு கோடி ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:—

வடக்கு — கிழக்கில் உள்ள 179 பிரதேசச் செயலகங்களுக்கும் தலா 10 லட்சம் ரூபா வீதம் அபிவிருத்திப் பணிகளுக்கு மாகாண சபை வழங்கி வருகிறது.

இவ்வருடமும் பிரதேசச் செயலகங்கள் அபிவிருத்தி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### போரதீவில் தேடுதல்:

## குண்டுத் தாக்குதல் சந்தேக நபர் கைது

கொழும்பு, ஓக. 22

தென்பகுதிகளில் கடந்த சில மாதங்களில் ரெலிகொம் மற்றும் மின்மாற்றிகள் மீதான குண்டுத் தாக்குதல்களுக்கு காரணமானவர் எனச் சந்தேகிக்கப்படுப் மூர்த்தி என்பவரை பொலீஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

அதிரடிப்படையின் உதவியுடன் பேலிய கொடையில் இருந்து சென்ற விசேட பொலீஸ் குழுவினர் மட்டக்களப்பு போரதீவில் தேடுதல் நடத்தி மேற்படி நபரைக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தென்பகுதிகளில் இடம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ரூ. 8 கோடியுடன் தப்பிச் சென்ற ஹொங்கொங் வாசி

கொழும்பு, ஓக. 22

கொழும்பில் உள்ள வங்கி ஒன்றில் இருந்து 8 கோடி ரூபாவை கடனாகப் பெற்ற ஹொங்கொங் வாசி ஒருவர் நாட்டை விட்டுத் தப்பி ஓடி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நபர் பிரபல

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சம்மாந்துறையில் மின்மாற்றி தகர்ப்பு

### ரூ. 20 லட்சம் அரசுக்கு இழப்பு

மட்டக்களப்பு, ஓக. 22

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறைச் சந்தியில் நேற்று முன்தினம் இரவு அதிசக்தி வாய்ந்த மின்மாற்றி ஒன்று சேதமாக்கப்பட்டுள்ளது.

மின்மாற்றி மீது தாக்குதல் மேற்கொண்ட நபர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் எம். நஸீம் (27 வயது) என்ற வியாபாரி பலியானார்.

இச்சம்பவத்தில் ஊர்காவல் படை வீரர் உட்பட 4 பேர் காயமடைந்தனர்.

மின்மாற்றி சேதமாக்கப்பட்டுள்ளதால் சுமார் 4 ஆயிரம் மின்பாவனையாளர்களின் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. மின்மாற்றிக்கு ஏற்பட்ட சேதம் ரூபா 20 லட்சம் என இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

(இ-14-21)

## நாடாளுமன்றை பகிஷ்கரிக்க ஈ.பி.ஆர்.எல்.எவ். அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 22

தமிழ் மக்களைப் பாதிக்கும் வகையில் அரசாங்கம் தற்போது மேற்கொண்டு வரும் நிவாரண வெட்டு மற்றும் பிரின்ஸஸ் காஷ் கப்பல் மீதான தாக்குதல், எரிபொருளுக்கான பங்கீட்டு முறை முதலியன குறித்து அரசாங்கம் திட்டவட்டமான தீர்வினைத் தரும் வரை வடக்கு — கிழக்கு மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்தல் வேண்டும். இவ்வாறு ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் எம். பிக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வேண்டுகோள் தொடர்பான மகஜர் நேற்று முன்தினம் சகல எம். பிக்களுக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விமான மூலமாக மட்டுமே தற்போது தபால் சேவை

### கப்பல் திருத்தப்படவில்லை

கொழும்பு, ஓக. 22

வடபகுதி தபால் பொதிகளை ஏற்றிச் செல்வதில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற செஞ்சிலுவைச் சர்வதேசக் கபபல் பழுதடைந்துள்ளதால் வடபகுதிக்கும் கொழும்புக்கும் இடையிலான தபால் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் கப்பல் பழுதடைந்து தற்சமயம் வடபகுதிக்குக் கொண்டு வரப்பட்டு திருத்தவேலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திருத்த வேலைகள் முடிவடைய இன்னும் இருவாரங்கள் செல்லும் என எதிர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறப்பு விழாவும் பாராட்டு விழாவும்

யாழ்ப்பாணம், ஓக. 22

முற்றிலும் புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப் பட்டு, பூர்த்தியடைந்துள்ள புன்னாலைக்கட்டுவன் கணேச சனசமூக நிலையத்தின் திறப்புவிழாவும், சமாதான நீதிவான் சு. செல்லப்பாவின் பாராட்டு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

திறப்புவிழா வைபவத்தை அடுத்து விழா நிகழ்வுகள் விக்கினேஸ்வரா மணி மண்டபத்தில் க. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ரீ. வீ. கிருஷ்ணசாமி கலந்து கொள்வார்.

விழாவின் இறுதியில் பட்டிமன்றம் நடைபெற உள்ளது.

(இ-15)

# இளைஞர் தவறுவிடுவது இயல்பு

# ஆனால் திருந்துவதே அறிவுடைமை

## பக்தர்கள் முன் மாநகர மேயர் உரை

யாழ்ப்பாணம், ஓக. 22

திருவிழாக் காலங்களில் ஆலய வீதிகளில் ஆயுதப் படையினரின் உத்தியோக பூர்வமான நடமாட்டம் இருக்கக் கூடாது என்பதில் அவதானமாகச் செயற்பட்டோம். ஆனால் எமது இளைஞர்களில் ஒரு பகுதியினர் நடந்து கொண்ட முறை திருவிழாக் காலத்தின் இறுதிக் கட்டத்தில் பொலீஸ் நிலையம் ஒன்றை அமைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இளம் தலைமுறையினரே தவறுவிடுவது இயல்பு. அதனைத் திருத்திக் கொள்வதே அறிவுடைமையாகும். நடந்தவை நடந்தவையாகப் போகட்டும். இனி நடப்பவை நல்லனவாக அமையட்டும்.

இவ்வாறு யாழ். மாநகர மேயர் பொன். சிவபாலன் நேற்று நல்லூர் தீர்த்த உற்சவ வைபவத்தில் கலந்து கொண்டு பக்தர்கள் முன் உரையாற்றும் போது கூறினார்.

அவர் மேலும் அங்கு கூறியதாவது;-

ஆலயம் என்பது பக்தி மணம் பரிமளிக்கும் ஒரு புனிதஸ்தலம். தன் புனிதத்தை பாதுகாக்க வேண்டியது நம் அனைவரினதும் கடமை ஆகும். நாங்கள் பெரு நம்பிக்கை வைத்திருக்கும் இளைஞர்கள் வருங்கால சமுதாயத்தைப் படைக்க வேண்டிய இளைஞர்கள், இரத்தத்தால் தியாக வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் இளைஞர்களின் தியாகத்தை கண்டும இத்தகைய தீய வழிகளில் செல்கிறார்களே என்று எண்ணும் போது யாரை நோவது எனத்தெரியவில்லை.

பெருமளவில் நல்லூருக்கு வருகை தந்த மக்களின் சுகாதார குடி தண்ணீர் வசதிகளையும் மற்றும் வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டியது யாழ். மாநகராட்சி மன்றத்தின் தலையான பணி மாத்திரமல்ல, தார்மீகக் கடமையும் ஆகும்.

மாநகராட்சி மன்றத்தின் முதல்வர் தொடக்கம் கடைநிலை ஊழியர் வரை அனைவரும் இக் கைங்கரியத்தில் தம்மை ஈடுபடுத்தி பணி புரிந்து வருகிறார்கள்.

குடி தண்ணீர் விநியோகம் போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கு வேண்டிய உதவிகளை அளித்த தொண்டு நிறுவனங்களுக்கும் வீதி ஒழுங்கு பராமரிப்பு பணிக்கு உறுதுணையாக நின்ற நிறுவனங்களுக்கும் பலவிதமான உதவிகள் புரிந்த அனைவருக்கும் மாநகராட்சிமன்றத்தின் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இப்படி அவர் கூறினார்.

(இ-5-30)


**WANTED FOR RENT**

Large house withen 1 Kilometre
of Jaffna Kachcheri.

Reply to:

Mrs. WAXSON RATNAM,
22, SOMASUNDARAM AVE.
Chundikuli.

( 58552 )


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண் மீது மரம் வளர்த்து
நிழல் தந்த செம்மல்
மக்கள நன்னெறி நிற்க
அற நூல்கள் தந்த வள்ளல்

அமரர்

**க. கனகராசா**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

**சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து)**
**சுன்னாகம்.**

21-08-98 (சி/4633)

## யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம்

## அறிவித்தல்

எமது சங்கம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி தொடர்பாக நாளை பிற்பகல் இடம்பெற விருந்த அணி ஒழுங்குத் தெரிவு ஒத்திவைக்கப்பட்டு அடுத்த சனிக்கிழமை 29 - 08 - 1998 பிற்பகல் 4. 00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் என அறியத் தருகின்றோம்.

செயலாளர்,
யா. மா. கி. சங்கம்.

21-08-1998 (சி/4635)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா இராசேந்திரம்

(ஒப்வுபெற்ற P. H F. A. AMC)

தபால்கந்தோர் வீதி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா இராசேந்திரம் 21 - 08 - 98 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் உரும்பிராயைச் சேர்ந்த பரமேஸ்வரியின் அன்புக் கணவராவர். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி இ பரமேஸ்வரி
(பேபி - மனைவி)

(சி/4634)

### சுப்பிரமணியம்பிள்ளை சண்முகரத்தினம் (ஆனந்தி)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், இரத்தினம் அவன்யூ கொக்குவில் மேற்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம்பிள்ளை சண்முகரத்தினம் (ஆனந்தி) 21-08-98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து சுப்பிரமணியம்பிள்ளை — சிவகாமியம்மை தம்பதிகளின் அன்புப் புதல்வனும், சரஸ்வதியின் பெறாமகனும், சோதிவடிவேற்பிள்ளை (காப்புறுதி அமைப்பாளர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), குமாரதேவி (கொழும்பு), பாலச்சந்திரன் (சவூதி), மகேஸ்வரி தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்முகசுந்தரம் (கொழும்பு), கமலராணி, கலாவதி ஆகியோரின் மைத்துனரும், வனஜா, செந்தில்குமரன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21-08-1998 இல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்—

தகவல்:
சு. சோதி
(சகோதரன்)

இரத்தினம் வளவு,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(58563)


**நாகம்ஸ் சினிமா**

சுன்னாகம்
25 - 08 - 98 வரை
சுப்பர் ஸ்ரார் ரஜனி
நக்மா நடித்த
**பாட்ஷா**
திரைப்படக் கூட்டுத்தாபன ( ரீல்ஸ் ) படம்.
காட்சிகள்:- 10-30, 2-30
(58386)

**லிபேட்டி தியேட்டர்**

அச்சுவேலி.
இன்று மட்டும்
விஜய், சுவலட்சுமி,
சார்லி, சங்கவி நடித்த
**நிலாவே வா**
(புதிய வெளியீடு)
ஞாயிறு முதல்
அஜித்குமார், கார்த்திக்
ரோஜா, மணிவண்ணன்
உன்னிடத்தில்
என்னைக்கொடுத்தேன்
(புத்தம் புதிய வெளியீடு)
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No: 070-212223
(58486)

**ராஜா டாக்கீஸ்**

யாழ்ப்பாணம்.
இறுதி வாரமாக
சிவாஜி - ராதா
ஜனகராஜ்-வடிவுக்கரசி
சத்தியராஜ் நடித்த
**முதல் மரியாதை**
25 - 08 - 98 முதல்
ரஜனி, மீனா
சரத்பாபு நடித்த
**முத்து**
10-30 — 2-00. 6-00
(புதிய நேரம்)
(சி/4560)

**சிவா**

வெண் திரை
சிவன் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
விவிங்டன்,
கௌசல்யா, விவேக்
நடிக்கும்
சூப்பர் குட் பிலிம்ஸ்
**சொல்லாமலே..**
(புதிய வெளியீடு)
தினசரி 10-30. 2-30
(சி/4636)

விவசாயப்
பெருமக்களுக்கு
**ஒரு நற்செய்தி**

குரக்கன், சோயா
மொத்தமாகக் கொள்வனவு செய்கிறோம்.
விவரங்களுக்கு
தொடர்பு கொள்க:
**அண்ணாபாம்**
இணுவில்.
(சி/ 4624)


## கொக்குவில் லயன்ஸ் கழகம்

ஊனமுற்றோர் புனர்வாழ்வுக் கழகத்தின்
உதவியுடன்

## இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் வைபவம்.

காலம்: 23-08-1998 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9.00 மணி
இடம்: கிராம முன்னேற்றச்சங்க மண்டபம்
(ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு)

பிரதம விருந்தினர்:
Dr. S. சிவராஜா (AROD President)

சிறப்பு விருந்தினர்கள்:
Lion S.S. அருளானந்தம் (Region Chairmen)
Lion A. தங்கேஸ்வரன் (Regional Coordinator)

கௌரவ விருந்தினர்கள்:
Lion B. தில்லைநாதன் (Immpast Region Chairman)
Lion Dr. K. குகபாலன்
Lion K. தணிகாசலம்
Lion ஞானராஜா
Lion B. விஜயகுமார்
Lion S. பத்மநாதன்
Lion Dr. V. தியாகராஜா
Lion S.S. ராமகிருஷ்ணன்
Lion C. பாலகிருஷ்ணன்
Lion S P. சிவஞானம்
Lion K.T. சிவபாதம்

பிராந்தியம் 8 இன் தலைவர், செயலாளர், பொருளாளரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மூக்குக்கண்ணாடியை இலவசமாகப் பெற்றுக் கொள்ள வருபவர்கள் உறுதிக்கடிதங்கள் தலைவர் அல்லது செயலாளரிடம் ஒப்படைத்தவர்கள் மட்டும் இந்நிகழ்வுக்கு வரவும். வரும்போது அழைப்பிதழ் கடிதத்தையும் தேசிய அடையாள அட்டையையும் கொண்டு வரவும்.

நன்றி.

- செயலாளர்

லயன்ஸ் கழகம்,
கொக்குவில்.

விளம்பர அன்பளிப்பு:
**பராசக்தி அரைக்கும் ஆலை**
ஆடியபாத வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(சி/4632)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிரடி அரங்கு

இந்தப் பத்தியில் மீண்டும் மீண்டும் குறிப்பிட்ட ஒரு விடயத்தைத் திரும்பவும் குறிப்பிட வேண்டியுள்ளது.

வடக்கு–கிழக்கு மாகாண மட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஆறாம் திகதி வரை திருகோணமலையில் நடத்துவதற்குத் திரும்பவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது — வழமை போல் யாழ். மாவட்டத்திலிருந்து இப்போட்டிகளுள் பங்கு பற்ற வேண்டிய ஐந்நூறுக்கும் அதிகமான பாடசாலை வீரர்களுக்கு அப்போட்டிகளில் பங்குபற்றுவதற்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் ஏதும் இன்னும் நடந்ததாகத் தெரியவில்லை. இன்னும் ஒன்பது நாள்களே உள்ளன. இனி மேல் வழி ஏற்படுத்திக் கொடுக்க வாய்ப்புகள் பெரிதும் இல்லை.

அதாவது வடபகுதிப் பாடசாலை வீரர்கள் பங்கு பற்றுவதற்கான வாய்ப்பைக் கவனத்தில் எடுக்காமலேயே வழமை போல் இம்முறையும் இப்போட்டியை நடத்தி முடிப்பதற்கு மீண்டும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கு சிங்கள அரசியல்வாதிகளும், இனத் தீவிரவாதிகளும் கங்கணம் கட்டி நிற்கின்றனர். ஆனால், அதற்கு முன்னரே மாகாண அமைச்சு அதிகாரிகள் வடக்கை விட்டு விட்டு கிழக்கைப் பிரித்து எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள் போல் உள்ளதே!

பெயர்தான் வடக்கு—கிழக்கு மாகாண விளையாட்டுப்போட்டி. ஆனால் வவுனியாவைத் தவிர (அதுவும் அங்கிருந்து எத்தனை பேர் பங்குபற்றுவார்கள் என்று தெரியவில்லை) வடமாகாணத்தின் வேறு எந்தப் பகுதியிலிருந்தாவது பாடசாலை வீரர்கள் அதில் பங்குபற்றும் வாய்ப்பு இல்லை. யாழ்ப்பாணத்திலிருந்தாவது கணிசமான வீரரைப் பங்குபற்ற வாய்ப்பளித்திருக்கலாம்.

தற்போது யாழ்ப்பாணத்தில் வந்து நிற்கும் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு இது சமர்ப்பணம். அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களுடன் நெருங்கிப் பணிபுரியவர் அவர். அதற்காக அடிக்கடி பல இடங்களுக்கும் பறந்து திரிபவர். தமது தொடர்புகளைப் பயன்படுத்தி — இந்தத் தொண்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு— அவர்களின் உதவியுடன்-யாழ்ப்பாணத்துப்பாடசாலை வீரர்களும் போட்டியில் பங்கு பற்றுவதற்காகப் பறந்து செல்லும் (விமானத்தில் செல்லும்) வசதியைப் பெற்றுக் கொடுக்கக் கூடாதா?

அது கூட முடியாவிட்டால், யாழ். பாடசாலை வீரர்கள் — அவர்களின் விளையாட்டு நிகழ்வுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் — மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றாமலேயே தேசியமட்டப் போட்டியில் பங்குபெற்றுவதற்கு மாகாண அதிகாரிகள் அனுமதிப்பார்களா?

★ ★ ★ ★ ★

கடந்த வாரம் வரணி நாவற்காடு பிள்ளையார் ஆலயம் ஒன்றில் நடந்த சம்பவம் இது:-

அந்த ஆலயத்தில் அதிகாலை 4 மணிக்கு ஆலய மணி ஒலித்தது தொடர்பாக அந்த ஆலயத்தின் பூசகரான சுப்பிரமணியம் கஜேந்திரசர்மா (வயது 15) என்பவர் அருகிலிருந்த முகாமுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். மறுநாள் வரும்படி பணிக்கப்பட்டார். மறுநாள் காலை பூஜைக்குப் புறப்பட்ட பூசகர் மதியம் வரை வீடுதிரும்பாததால் அவரைத் தேடிச்சென்ற பெற்றோர் ஆலய உள்மண்டபத்தில் கயிற்றில் தூங்கிய நிலையில் அவர் சடலமாகத் தொங்குவதைக் கண்டனர். மரண விசாரணையின் போது தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

பூசகரின் சடலத்தில் காயங்கள் காணப்பட்டதாகவும்—

முதல்நாள் விசாரணையின் போது அவை ஏற்பட்டிருக்கலாம் எனவும் — அப்பகுதி பொதுமக்களில் சிலர் பேசிக்கொண்டனர். வேறு சிலர் வேறுமாதிரியாகக் கருத்து வெளியிட்டனர். பிரேத பரிசோதனை நடத்தப்பட்டதா? அதன் விவரம் என்ன? — என்பவை போன்ற விடயங்கள் தெரியவில்லை.

★ ★ ★ ★ ★

யாழ்ப்பாணத்தில் உள்ள தேசியக் கல்லூரிகளுக்கு என ஒரு தொகை புத்தம் புதிய கதிரை, மேசைகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

ஒரு தேசியக் கல்லூரிக்கு உயர்தர, இடைத்தர வகுப்பு மாணவர்களுக்கு என எண்பது கதிரை, மேசை சோடிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

கல்லூரி அதிபர் கல்வித் திணைக்களத்திற்குப் போனார். ''எங்கள் கல்லூரிக்குத் தேவையான கதிரை, மேசைகள் உள்ளன. எமக்கு இவை தேவையில்லை'' — என்று எழுதிக் கொடுத்து விட்டு வந்து விட்டார். இந்தக் காலத்தில் இப்படியும் ஓர் அதிபரா என்று மூக்கில் விரலை வைக்கின்றார்கள் விடயம் தெரிந்தவர்கள்.

இந்தத் தகவலைக் கேள்விப்பட்ட மற்றொரு தேசியக் கல்லூரி அதிபர் திணைக்களத்துக்கு வாகனத்தில் ஏறி பறந்து சென்றார். முன்னைய அதிபரின் மனம் மாறுவதற்கு முன்னர்— அல்லது வேறு யாரும் திருத்திமாற்றுவதற்கு முன்னர்—அந்த எண்பது கதிரை மேசைகளும் தங்களுக்குத் தேவை என்று கூறி, தமது பாடசாலைக்கு அள்ளிக் கொண்டு வந்து விட்டார் இந்த அதிபர்.

இப்படி ஓர் அதிபர்; அப்படி ஓர் அதிபர்!

★ ★ ★ ★ ★

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் கணிசமான பகுதியில் சைக்கிள்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த வீதி நெருக்கமான பல வர்த்தக நிலையங்கள் அமைந்த பகுதியாகும். இத் தடையினால் பல வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். பல வர்த்தகர்கள் பல லட்சம் ரூபாவை செலவழித்து நகரில் வேறு இடங்களுக்கு தமது வர்த்தக மையத்தை பகுதியாகவேனும் மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

பாதுகாப்புக் காரணமாகவே போக்குவரத்துத் தடை என்கிறார்கள். ஆனால் வேறு ஒழுங்கைகளால் மோட்டார் சைக்கிள்களும் ஏனைய வாகனங்களும் சுழித்துக் கொண்டு இந்த வீதிக்கு வந்து செல்லத் தவறுவதில்லை. அதைப்பார்க்கும் போது உண்மையில் பாதுகாப்புத்தான் காரணமா என்பதில் சந்தேகம் எழுகின்றது.

வர்த்தகர்கள் இன்னொரு விடயத்தையும் ஆவலோடு எதிர் பார்க்கின்றார்கள். யாழ். வர்த்தக மையத்தில் ஒரு பகுதி போக்குவரத்துக்கு தடுக்கப்பட்டிருப்பது குறித்து இங்குள்ள தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு என்னவென்பதுதான் அது. குறிப்பாக யாழ். நகரத்தை மாநகர சபையிலும் நாடாளுமன்றத்திலும் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் நிலைப்பாட்டைத்தான் பல வர்த்தகர்களும் எதிர்பார்ப்பதாகத் தெரிகின்றது.

★ ★ ★ ★ ★

நல்லூர் உற்சவ காலத்தில் வேதனையான சம்பவங்கள் இடம்பெறுவது குறித்து இப் பத்தியில் இருதடவைகள் குறிப்பிட்டிருந்தோம். இந்த ரவுடித்தனத்தின் உச்சக்கட்டம்நேற்று தீர்த்தத்திருவிழாவின் போது அரங்கேறியது. சுவாமி தீர்த்தமாட முன்னரே தீர்த்தக் கேணிக்குள் பல பக்த 'கோடி'கள் தீர்த்தமாடப் புறப்பட்டு விட்டனர். முருகனின் தீர்த்தோற்சவத்தைப் பார்த்து பரவசமடைய வந்த இளம் பெண்கள் மீது தீர்த்தக் கேணி நீரை வாரி இறைக்க அவர்கள் காட்டிய சிரமம்—அப்பப்பா...! 'ஷொப்பிங்' பையில் தண்ணீரைக் கொண்டு வந்து வீசி இறைத்த இளசுகளின் வீரம் வியக்கத்தக்கது! [?].

நல்லூர்த் திருவிழா காலத்தில் ஊரடங்கு தளர்த்தப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் மாறி நடந்தது. நேரத்துடன் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது.

இது குறித்து படை அதிகாரி ஒருவரிடம் கேட்ட போது, 'உற்சவம் 6.00 மணிக்கும் 6.30 மணிக்கும் முடிந்து விடுவதாக கோவில் நிர்வாகம் கூறுகின்றது. அதற்கு பின்னர் ஆலயச் சுற்றாடலில் மக்களுக்கு என்ன வேலை? என்றும் அவர்கள் கேட்கின்றார்கள். எனவே தான் கோயில் உற்சவத்தை இந்த ஊரடங்கு நேர மாற்றம் பாதிக்காது என முடிவெடுத்தோம்' — என்று அவர் பதில் கூறினார்.

நல்லூர் உற்சவம் யாழ். மக்களைப் பொறுத்த வரை வெறும் ஆலய பூஜை— மகோற்சவம்— மட்டுமல்ல. இது குடாநாட்டு மக்களைப் பொறுத்த வரை ஒரு தேசியத் திருவிழா. கோயில் பூஜைக்கு அப்பாலும் சிலவிடயங்கள் உள்ளன. கதாப்பிரசங்கங்கள், கதா கலாட்சேபங்கள், தெய்வீக அருளுரைகள், இசையரங்குகள், சமய அறிவுப் போட்டிகள், பஜனைகள் போன்ற சைவத் தமிழ் விழுமியங்களை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் கோயில் சுற்றாடலில் வருடா வருடம்— நீண்டகாலமாக— நடந்து வருகின்றன. அவை கோயில் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் நிகழா விட்டாலும், அவையும் அவை போன்ற ஏனைய நிகழ்வுகளும் சைவத்தமிழ் மக்களைப் பொறுத்தவரை திருவிழாவின் பகுதியே. அவற்றைக் குழப்பும் விதத்தில் — பூஜையை மட்டும் முதன்மைப்படுத்தி— கருத்து வெளியிடுவது குறுகிய மனப்பான்மையையே காட்டுகின்றது, எமது சமய விழாக்கள் குறித்து விளக்கமற்ற படை அதிகாரிகளைத் தவறாக வழிநடத்தும் செயலே இது.

—மின்னல்

## அஞ்சலிக் கூட்டம்

நியாயசிரோமணி அமரர் சி. சுப்பிரமணிய சாஸ்திரிகளுக்கு சர்வதேச இந்துமத குருபீடமும், பிராமண சமாஜமும் இணைந்து நடத்தும் நினைவஞ்சலிக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீமான் தம்பையா சத்திரத்தில் ஸ்ரீஜயப்பதாசன் சாம்பசிவ சிவாச்சாரியர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-8)

## விதை நெல் வழங்குவதாக உறுதி

விவசாயிகளுக்குத் தேவையான விதை நெல் மற்றும் மரக்கறி விதைகளை விரைவில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வதாகப் பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் யாழ். மாவட்ட வதிவிடப் பிரதிநிதி செல்ரன் செலிபிக் உறுதியளித்துள்ளார்.

கந்தரோடை விவசாயிகள் தோட்டச் செய்கையாளர்களுடனான கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்கால கால போகத்துக்குத் தேவையான குறுகிய கால விதைநெல் பெற்றுத் தரப்படும் என அவர் கூறினார்.

கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கந்தரோடை விவசாயிகள், கிராம சேவையாளர், அதிபர், ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

திரு. செல்ரன் செலிபிக் யாழ்ப்பாண பிரதேசத்தின் விவசாயம் சம்பந்தமான தேவைகள், குறைபாடுகள் பற்றி கலந்துரையாடலின் போது கேட்டு அறிந்து கொண்டார்.

கந்தரோடைப் பகுதியில் உள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்யவும், பட்டினியொழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், கால்நடை வளர்ப்புக்கு உதவியளிக்கவும், பழமரச் செய்கையை ஊக்குவிக்கவும், பழங்களில் இருந்து ஜாம் வகைகளைச் செய்வதற்கு பயிற்சி அளிக்கவும், பாடசாலை மாணவர்களுக்கு உதவிபுரியவும் இவ்வாண்டுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-152)

## முச்சக்கர வண்டி

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன ஆதரவில் பெறப்பட்ட முச்சக்கர வண்டிகளை யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. தலைவர் டி. ஆர். அருமைநாயகம் பாஷையூரைச் சேர்ந்த கால் ஊனமுற்ற மூவருக்கு வழங்கியுள்ளார். (இ-8-109)

### யாழ். றோட்டறிக் கழக ஏற்பாட்டில்

# புத்தூர் மேற்கு கலைமதி கிராமத்தில் 42 தம்பதியருக்கு திருமணப்பதிவு

யாழ்ப்பாணம், ஒக். 22

புத்தூர் மேற்கு கலைமதி கிராமத்தில் ஏற்கனவே திருமணம் புரிந்தும் அதனைச் சட்ட ரீதியாகப் பதிவு செய்யாமல் வசித்து வரும் 42 தம்பதியினருக்கு சட்ட ரீதியான திருமணப்பதிவு செய்யப்பட உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். றோட்டறிக் கழகம் மேற்கொண்டுள்ளது.

இவர்களுக்கு சட்ட பூர்வ திருமணப் பதிவை மேற்கொள்ளும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு புத்தூர் மேற்கு கலைமதி சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

சட்ட ரீதியாக திருமணப் பதிவை மேற்கொள்ளாத மேற்படி தம்பதியினரின் பிள்ளைகளின் கல்வி வசதி கருதி இந்த சமூக சேவை நிகழ்ச்சியை யாழ். றோட்டறிக் கழகம் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாய மருத்துவத்துறை மாணவர்களின் உத[illegible] (ஐ)

### கப்பல் அழிப்பினால்

# தென்மராட்சி வர்த்தகருக்கு ரூபா 15 கோடி இழப்பு!

அண்மையில் முல்லைத்தீவுக் கடலில் தாக்கி அழிக்கப்பட்ட 'பிரின்ஸஸ் காஷ்' கப்பலில் பொருள்களை ஏற்றிய தென்மராட்சி பகுதி வர்த்தகர்களுக்கு 15 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிறுவனத்தின் ஊடாக குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் விநியோகிப்பதற்காகஎடுத்து வரப்பட்ட பொருள்கள் இதில் அடங்கும்.

மோட்டார் சைக்கிள்கள் அதற்கான உதிரிப்பாகங்கள்' பாட்டா பாதணிகள், புடைவைகள், அலங்காரப் பொருள்கள், கலர் ரி. வீக்கள், நீரிறைக்கும் இயந்திரங்கள், சிமெந்து, வாகன ரயர்கள், அலுமினியப் பொருள்கள், தேங்காய் எண்ணெய், மின்சார உபகரணங்கள், மருந்து வகைகள், காகிதாதிகள் உட்பட பல பொருள்கள் இவ் வர்த்தகர்களுக்கு அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

தருமலிங்கம் அருமைரத்தினம் ஆகிய எனது 442040257V இலக்க தேசிய அடையாள அட்டை, விசேட அடையாளஅட்டை, யாழ்.மாநகரசபைஅட்டை, பாஸ் ஆகியன கண்டி வீதிக்கும், நக்காவீதிக்கும் இடையில் தவறிவிட்டன; கண்டெடுத்தவர்கள் யாழ். மாநகரசபையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (58551)

துரைராசா ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (302431990 V) நல்லூரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 93, சிவன் பண்ணை வீதி, கொட்டடி என்ற விலாசத்திற்கு அனுப்பி உதவவும். [*8542]

### விற்பனைக்கு

1½ மாதம் பூர்த்தியான சிறந்த இன அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தரன் மின்னேற்றல், நவாலி றோட், ஆனைக்கோட்டை. [58466]

### வீடு விற்பனைக்கு

192/1, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள ஐந்து பரப்பு காணியைக் கொண்ட வசதியான வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு; J. J. அற்புதராஜா, 25, சோமசுந்தரம் அவெனியு, சுண்டுக்குளி. [58535]

### இலகு திருமணசேவை

37 வயது அச்சுவினி உதயச் செவ்வாய் MSc U K இல் உத்தியோகம் Sponser உண்டு. (2 ஆம் மாதம் விவாகரத்து பெற்றவருக்கு) மணப்பெண் தேவை. தொடர்பு: ஞாயிறு துரைவிமலா 958/8, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார்கோயிலடி. [58537)

### ENGLISH, MATHS

ஆண்டு 6 – O/L வரை Distinction, Credit பெறுபேறுடைய ஆரம்பத்திலிருந்து Paper class வரையும் Spoken English உம் கற்பிக்கப்படும்; ஆசிரியர் 85. சிவன் கோயிலடி சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி, [58502]

### O/ L MATHS

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக்கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (58533)

### SPOKEN ENGLISH

சுவையாக இலக்கணம் இன்றி ஆங்கிலம் பயில திங்கள் தவிர்ந்த ஏனைய நாள்கள் காலை 10இல் இருந்து வகுப்புகள் நடைபெறுகின்றது. ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி 426 (302), காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். [58529]

### விண்ணப்பப் படிவம்

N C. E ஆங்கிலப் பரீட்சைக்கான படிவம் விற்பனையாகின்றது. மேலதிக விவரங்களை எமது ஸ்தாபனத்தில் பார்வையிடலாம். நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். [58530]

### கார் விற்பனைக்கு

சிரேஷ்ட தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியலாளரின் சொந்தப் பாவனையிலிருந்த நல்லநிலையில் உள்ள பெற்றோல்மொறிஸ் ஒக்ஸ்போட் நீலநிற8 சிறிமூவாயிரம் தொடரிலக்க இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி. குணராஜா, 465, K K.S. றோட், யாழ்ப்பாணம்; (தட்டாதெருச் சந்திக்கு அருகில் உள்ள மூன்றாம் ஒழுங்கையில்); [58492]

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 31 விசாக நட்சத்திரமுடைய B. Com பட்டதாரி ஆசிரியைக்கு தகுந்த மணமகன் தேவை [ அரச உத்தியோகம் விரும்பத்தக்கது]. சீதனம் வழங்கப்படும்; கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்; இல. 773, மே/ பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (58528)

### புறோயிலர் விற்பனை

புறோயிலர் கோழி இங்கு விற்பனைக்குண்டு. அருள் ஆச்சிரமம்,05, கோயில்வீதி, யாழ்ப்பாணம்; [58547]

---

உ
அம்பாள் துணை

## சித்திரத்தேர் வெள்ளோட்டப் பெருவிழா

வடமராட்சி கரணவாய் வடக்கு,

## நவிண்டில் குளவியடி அம்பாள் ஆலயம்

நாள்: 1998 - 08 - 24 ஆவணி மாதம் ( 8 ஆம் திகதி) திங்கட்கிழமை

நேரம்: காலை 11. 00 - 1 00 வரையுள்ள சுபவேளை

சித்திரத்தேர் நிர்மாணம்:

ஆறுமுகம் சிற்பாலயம் திருநெல்வேலி
ஸதபதி ஆ ஜீவரட்ணம் அவர்கள்.

அனைவரும் வந்து இவ்விழாவில் கலந்து அம்பாளின் அருளைப் பெற்று ஏகும் வண்ணம் வேண்டுகின்றோம்;

தேர்த் திருவிழா உபயகாரர்:

திருமதி மயில்வாகனம் நாகேஸ்வரி.
திரு. மயில்வாகனம் குகதாசன் குடும்பம்;
திரு. மயில்வாகனம் சண்முகதாஸன் குடும்பம்;
திரு. மயில்வாகனம் யோகதாசன் குடும்பம்;
திரு. மயில்வர்கனம் கிருஷ்ணதாசன்.
திரு. தெய்வேந்திரன் வசந்தா குடும்பம்;
திரு. ஜெயக்குமார் சாரதா குடும்பம்;

(58544) கரணவாய் வடக்கு, நவிண்டில்.

---


உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 6ஆம் நாள் (22-08-98) சனிக்கிழமை (இலங்கை நேரம்– 23-08-98 ஞாயிற்றுக்கிழமை காலை 6 00 மணி முதல் 8-00 மணி வரை) அமிர்த சித்தயோகம் கூடிய சுபதினத்தில் மாலை 8-00 மணிக்கு மேல் 10-00 மணிக்குள் வரும் மீன லக்கின சுபவேளையில்

திரு. திருமதி
யோகநாதன்
தம்பதிகளின் புத்திரன்
திருநிறை செல்வன்
**ரத்னாகரன்**
அவர்களுக்கும்



திரு. (திருமதி அமரர்)
சுப்பிரமணியம்
தம்பதிகளின் புத்திரி
திருநிறை செல்வி
**ஸ்ரீரூபினி**
(Dip. in Dance Jaffna Campus)
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு
கனடாவில் TORONTO 10865 BAYVIEW AVE RICHMOND HILL
ஆலயதிருமண மண்டபத்தில்

திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி யோகநாதன்
140 1/3, நியூ செட்டிதெரு.
கொழும்பு - 13,

திரு. சு. சுப்பிரமணியம்
ஸ்ரீ பவனம்
[illegible]

(58549)

---

## YARL HALL கல்வி நிலையம்

[ 93A, பிரதான வீதி யாழ்ப்பாணம் ]
25 ஆண்டுகால இணையற்ற
கல்விச் சேவையில்

இரா. செல்வவடிவேல்

★ வகுப்புகள் யாவும் 24 – 08 – 98 முதல் வழமையான நேர அட்டவணையில் நடைபெறும்;
[58525]

---

வடபிராந்திய இந்துப் பேரவை

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

22-08-98 (பூங்காவனத் திருவிழாவன்று)

**பிற்பகல் 2.00 மணி நல்லை ஆதீனத்தில்**

தலைமை: கலாபூஷணம், சங்கீதபூஷணம் ப. சந்திரசேகரம

திருமுறை ஓதுதல்: சிவத்திரு என். நவரத்தினம்

கந்தன் கனியமுதங்கள்
(நல்லூர்க் கந்தன் துதிப்பாடல்கள்)

நிகழ்த்துபவர்: சிவத்திரு. க. ஆனந்தராசா (அனைதாசன் ஆசிரியர்)

ஆர்மோனியம்: த. சற்குருநாதன்

மிருதங்கம்: ஆ. கோகுலன்

**பிற்பகல் 6.00 மணி அறுபத்துமூவர்மடம்**

பிரம்மஸ்ரீ காரை. கு. சிவராஜசர்மா
அவர்களின்

மகாபாரத முத்துக்கள் தொடர் சொற்பொழிவில்
''துரியோதன வதம்''
எனும் தலைப்பில் சொற்பொழிவு நடைபெறும்.

சமய அலுவல்கள் பிரிவு,
வடபிராந்திய இந்துப் பேரவை.

அன்பளிப்பு:

## விக்னா ரியூசன் சென்ரர்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/ 4628)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சந்திரமதி தட்சணாமூர்த்தி அவர்களின்
அன்பு மாமனார்

## அமரர் V. S. சுப்பிரமணியம்

அவர்கள் 18-08-1998 இல் மரணமானதையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரின் இழப்பினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்;

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை,
கைதடி.

(58522)

---

## எமது துயரம் தோய்ந்த அஞ்சலி

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ் வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக வான்''
என்ற குறளுக்கு இலக்கணமாய் அமைந்து,

சமஸ்கிருத மொழியிலும், சிவாகம தத்துவத்திலும்,
வேதமோதும் அந்தணர்க்கோர் கலங்கரை
விளக்காய், வழி காட்டியாய்த் திகழ்ந்த

வித்தியாசாகரம், நியாய சிரோமணி
பிரம்மஸ்ரீ

## கி. சுப்பிரம்மண்ய சாஸ்திரிகளின்

மறைவிற்கு எமதுருக்கமான அஞ்சலிகள்!

அமரரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்கள்! அமரரின் ஆத்மா ஆரூரன் திருவடியில சாந்தியடைவதாகுக!!

பரிபாலன சபையோர்
அருள்மிகு
ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார்
தேவஸ்தானம்,
நீர்வேலி.

(58554)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. தெற்கில் குளங்கள், வீதிகள்

# ரூ.6 லட்சம் செலவில் அபிவிருத்தி!

வலிகாமம் தெற்கு, 22

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவின் இவ்வருடத்துக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி ஒதுக்கீட்டின் கீழ் 5 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு யாழ். செயலகம் அனுமதி வழங்கியுள்ளது.

மேலும் மீதியாக உள்ள 4 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாபெறுமதியான வேலைத் திட்டங்களை மறுபரிசீலனை செய்யும்படியும் செயலகம் அறிவித்துள்ளது.

யாழ். செயலகம் அனுமதி வழங்கியுள்ள நிதி ஒதுக்கீட்டின்கீழ் வீதிகள் திருத்தம், குளங்கள் புனரமைப்பு, கொல்களங்கள் புனரமைப்பு போன்ற வேலைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

பிரதேசசபையின் பொறுப்பில் மல்வம் கொல்கள நிலையம், கொத்தியாலடி கொல்களநிலையம் ஆகியவற்றின் புனரமைப்புவேலைகள் தலா 50 ஆயிரம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும்.

75 ஆயிரம் ரூபா செலவில் ஏழாலை இலந்தை கட்டி வைரவர் கோயில் வீதியும், 70 ஆயிரம் ரூபா செலவில் உடுவில் டச்சுவீதியும் சம்பந்தப்பட்ட பிரதேசசபைகளின் பொறுப்பில் திருத்தம் செய்யப்பட உள்ளன.

சங்குவேலி கரப்பிட்டியா குளம் வீதி ஒரு லட்சம் ரூபா செலவிலும், உடுவில் மீனாட்சி அம்பாள் விவசாய வீதி 40 ஆயிரம் ரூபா செலவிலும், சங்குவேலி அந்திரான் விவசாயவீதி 60 ஆயிரம் ரூபா செலவிலும், உடுவில் கமநல கேந்திர நிலையத்தின் மேற்பார்வையிலும் புனரமைக்கப்பட உள்ளன.

(ஐ-152)

## புதுக்குடியிருப்பில்

# நிவாரண வெட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

வவுனியா, ஒக, 22

இடம்பெயர்ந்த மககளின் நிவாரணத்தைக் குறைக்கும் நடவடிக்கையைக் கண்டித்து நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பிலுள்ள முல்லைத்தீவு அரசாங்க செயலகத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஏழு மணி நேரம் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையான இடம்பெயர்ந்த மக்கள் கலந்துகொண்டனர்.

காலை 6 மணியளவில் இடம்பெயர்ந்தோர் குடியிருப்புக்களில் வாழும் மக்கள் ஊர்வலமாகச் சென்று அரச செயலகத்தின் முன் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டம் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெற்றது.

நிவாரணக் குறைப்பினாலும், தடையினாலும் இடம்பெயர்ந்த மக்கள் ஒரு நேர உணவுக்கே கஷ்டப்படும் நிலை உருவாகியுள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் சார்பில் அரச அதிபருக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களில் அனேகர் பெண்களாவர். இவர்கள் தமது குழந்தைகளை கையில் ஏந்திய வண்ணம் கொடிய வெயிலில் நின்றதாக இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிபபகுதியில் இருந்து வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை தற்போது வன்னிப்பகுதிக்கு விஜயம் செய்துள்ள யாழ். மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய தோமஸ்சௌந்தரநாயகம்ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களை நேரில் சந்தித்து அவர்களின் முறைப்பாட்டைக் கேட்டறிந்தார் எனவும் —

வன்னி மக்கள் படும் கஷ்டங்கள் குறித்து உலக அமைப்புக்களுக்கு தாம் தெரியப்படுத்துவதாக உறுதியளித்தார் எனவும் —

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ-7)

# ரயில்வே கடவை ஊழியருக்கு

யாழ்ப்பாணம், ஒக. 22

காங்கேசன்துறையிலிருந்து கொடிகாமம் வரையுள்ள புகையிரத கடவைகளில் பாதுகாவலர்களாக பணி புரிந்தவர்கள் அனைவரையும் எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் காலை 10 மணிக்கு வேம்படியிலுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அலுவலகத்துக்கு சமுகந் தருமாறு வே. தங்கராசா கேட்டுள்ளார்.

(ஐ-8)

# திருமலையில் தாக்குதல்

திருகோணமலை மாவட்டத்தில் கடந்தவியாழனன்று இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் படையினர் விடுதலைப் புலிகளின் தாக்குதல் ஒன்றை முறியடித்தனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்தச் சண்டையின் போது 10 விடுதலைப் புலிகளும் இரண்டு படையினரும் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-9-21)

# சந்நிதி முருகனுக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஒக. 22

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த உற்சவகால நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளன.

மஹோற்சவ தினங்களில் செல்வச்சந்நிதி ஆலயச் சுற்றாடலிலுள்ள மடங்களில் முற்பகல் 11 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரையும் அன்னதானம் வழங்கப்படும்.

உற்சவ காலங்களில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் ஆச்சிரம மண்டபத்தில் தெய்வீகக் கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளனர்.

செல்வச்சந்நிதி ஆலய தேர்த்திருவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமையும், தீர்த்தத்திருவிழா மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

(ஐ-8-30-173)

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஒக. 22

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 5. 30 மணி முதல் 7 மணிவரை ஒழுங்கு செய்துள்ள தெய்வீக இசையரங்கில் இன்று சனிக்கிழமை எஸ். பத்மலிங்கம், ஆர். குகானந்தன் ஆகியோரின் இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகும். (ஐ-8-30)

★ ★ ★

நல்லைக்கந்தன் உற்சவத்தையிட்டு வடபிராந்திய இந்துப் பேரவையினர் ஆதரவில் அறுபத்துமூவர் திருமடத்தில் மாலை 6 மணி முதல் 7 மணிவரை காரை. த. சிவராஜசர்மா நிகழ்த்தி வரும் மகாபாரத முத்துக்கள் எனும் தெய்வீகச் சொற்பொழிவில் இன்று சனிக்கிழமை 'துரியோதனவதம்' என்ற தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

(ஐ-8-30)

★ ★ ★

நல்லூர் மஹாற்சவ காலத்தில் சி. வை. நித்தியனந்தசர்மா முத்துவிநாயகர் ஆலயத்தில் மாலை 5. 15 மணி முதல் நிகழ்த்தி வரும் தெய்வீக இசைச் சொற்பொழிவில் இன்று சனிக்கிழமை 'இராம இராவணயுத்தம்' என்ற தலைப்பில் பிரசங்கம் நடைபெறும்.

(ஐ-4-30)

## சந்நிதியில் இன்று

யாழ்ப்பாணம், ஒக. 22

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய மஹாற்சவ காலத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் தெய்வீக கலை நிகழ்ச்சிகளில் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு என். வீ. எம். நவரத்தினத்தின் இன்னிசைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

(ஐ-8)

## நியமனம்

கொழும்புத்துறை, ஒக. 22

யாழ். மதுவரி நிலையத்தின் பொறுப்பதிகாரியாக சு. செந்தூர்செல்வன் அண்மையில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(இ-30)

# அல்லல் நீக்க வள்ளல் முருகன் பாதம் பதித்த செல்வச்சந்நிதி

> தொண்டைமானாறு அருள்மிகு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகுகிறது.

தண்டையும் சிலம்பும் திகழும் செவ்வேட் திருக்குமரன் திருவடிகளை மனதிற் பதித்து மருவும் அடியார்கள் மண்ணில் விளையாடச் செல்வச் சந்நிதித் திருத்தலத்தில் முருகன் குடிகொண்டமை அடியார்கள் பண்டு தொட்டுப் பயின்றுவந்த புண்ணியத்தின் விளைவேயாகும்.

செல்வச் சந்நிதி வரலாறு கூறும் ஐதீகக் கதைகளை நோக்குவோம்—

அல்லல் போக்கி அருவினைகள் தான் போக்கித் தொல்லை வந்த உறுபிணி யாவும் போக்கும் ஒப்பற்ற மாமணியாம் மயில்வாகனன்; தேவர் துயர் தீர்க்கவும், கொடிய அவுணர் தமை அழிக்கவும் செந்திலம் பதியின் கண்ணின்றும் வீரமகேந்திரபுரி விளைந்த காலை ஈழத் திருநாட்டின் வடபாலமைந்த வல்லியாற்றங்கரையோரம் வந்தபோது மாலைக் காலமாகியது. சந்திப் பூசை செய்து குமரனடி பரவ தேவர் குழாம் விரும்பியது. ஆங்கோரிடத்தில் அழகன் முருகனை அமரச் செய்து சந்திக்காலப் பூஜை வழிபாடாற்றி முருகனருள் பெற்றுய்தனர்.

வள்ளல் முருகன் பாதம் பதித்த கற்பாறையில் ஐயன் அடிகமலச்சுவடுகள் தடமாய் பதிந்து விட்டன. பாதச் சுவடுகளைக் கண்ணுற்ற ஊரவர்கள் அத் திருவடிப்பதிவை வணங்கித் துதித்து வரலாயினர். நெடும்பாதையோரம் நிமலன் புதல்வன் பாதச் சுவடுகள் பதிந்து பக்தர்கள் பூசித்து வந்தமையால் பால முருகன் ஆங்கே அற்புதங்கள் பல நிகழ்த்திக் காட்டியருளினார். சந்திப் பூசை செய்தமையால் இவ்விடம் "சந்நிதி" என்று ஆயிற்று. தொண்டைமானால் அகழப் பெற்றமையால் வல்லியாறு பிற்காலத்தில் தொண்டைமானாறு எனப் பெயர் பெற்றது.

அகத்தியர் ஆணைப்படி கதிர்காமம் (ஓமகூடம்) தரிசிக்க வந்த சிகண்டி எனும் முனிவர் பெருமான் அத் திருத் தலத்தருகே பக்தர்க

**வ. குமாரசாமிஐயர்**

ளைத் துன்புறுத்திய யானையைக் கொல்ல நினைந்து வெற்றிலை ஒன்றைக் கரத்தெடுத்து வெற்றி வேலவனை வணங்கி யானைமீது வீசியெறிந்தார். வெற்றிலை வேலவன் கை வேலாகி யானையைச் சிதைக்க அவ்விடத்தில் கந்தர்வன் ஒருவன் தோன்றினான். தோன்றிய கந்தர்வன் முனிவர் பிரானை வணங்கி வியாழ பகவானால் பெற்ற சாபத்தை நீக்கிய மைக்காக வந்தனை செய்து வான்வழி ஏகினான் வட திசை நோக்கி.

வானவழியேகியவன் வல்லியாற்றங்கரை வந்தபோது வானவரும் மண்ணவரும் பரவும் பதியொன்று இருப்பதனைக்கண்ணுற்று அவ்விடம்மானுட உருவுடன் கீழே வந்தான். கதிரமலைக் கந்தன் அவனுக்கு உள் நின்றுணர்த்த அவ்விடத்தில் தங்கி திருவடித்தாமரைகட்குப் பூசனை புரியலானான். தனது நாமம் முருகர்நாகர் என்பதாகவும் கதிர்காமத்திலிருந்து வந்ததாகவும் கூறி வழிபாடுகள் செய்து வரலானார்.

பக்திப்பரவசராய் முருகனின் திருவருளை வியந்து வணங்கி அத்திருத்தலத்தில் சமாதி கைகூடி செவ்வேட் குமரன் திருவடியடைந்தார். அச்சமாதியின்மேல் அமைந்த பூவரசவிருட்சம் இன்றும் சந்நிதியின் தலவிருட்சமாகத் திகழ்கின்றது. இப்பூவரச விருட்சத்தின் நிழலிலமர்ந்து அடியவர்கள் முருகனைத் தொழுதேத்த நிஷ்டைகை கூடி ஞானிகள் சித்தர்கள் ஆயினர்.

காலங்கள் சென்றன. சமாதியருகே முருகன் திவ்விய லீலைகள் புரியலானான். பாதையருகே செல்லும் அடியவர்கள் சிறுவன் ஒருவனின் ஆடல்களை அவ்வப்போது காணலாயினர். இடைச் சிறுவனாக அக் காட்டில் தோன்றுவான் முத்துக்குமரன். பசித்தவன் போல் பாசாங்கு செய்வான் பக்தர்களைக் கண்டால். தேடினால் கிடைக்கமாட்டான். மாலொடு நான்முகனும் காணாமலரடிகள் மண்ணில் [illegible] விளையாடியமை பன்றோ! மகத்துவம் மிக்கதாய் செல்வச்சந்நிதி இன்றும் பொலிவுறுகிறது.

★

## உடுவில் பெரியகுளத்தில்

# சலவைத் தொழிலாளர் தொழில் செய்ய வசதிகள்

வலிகாமம் தெற்கு, ஒக. 22

உடுவில் பெரியகுளம் புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் வேளையில், அக் குளத்தில் நீண்டகாலமாக துணிகள் தோய்த்து வரும் இப் பகுதியைச் சேர்ந்த சலவைத் தொழிலாளர்களின் நலன் கருதி அவர்களுக்குத் தேவையான பலவசதிகள் செய்து கொடுக்கப்பட உள்ளன.

கந்தரோடை கிராம சேவையாளர் திருநாவுக்கரசு மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக இத்தொழிலாளர்களுக்குத் தேவையானவசதிகளைச் செய்து கொடுக்க அகதிகள் புனர்வாழ்வுநிறுவனம் முன்வந்துள்ளது.

சலவைத் தொழிலை இலகுவாக மேற்கொள்வதற்கும், மாரிகாலத்தில் குளம் நிரம்பியுள்ள வேளையில் கிணற்றில் இருந்து நீரை நிரப்பி துணிகளை தோய்ப்பதற்கு வசதியாக பல தொட்டிகளை அமைத்துக் கொடுக்கவும், ஏற்கனவே பழுதடைந்திருக்கின்ற தொட்டிகளை புனரமைப்புச் செய்து கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் சலவைத் தொழிலாளர்கள் கிணற்றிலிருந்து நீரை தொட்டிகளில் நிரப்புவதற்கு வசதியாக நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றையும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வழங்க உள்ளது.

(ஐ-152)

## பஸ் நிலையங்கள் புனரமைப்பு

சுதுமலை, ஒக. 22

வலிகாமம் தென்மேற்குப் பகுதிகளிலுள்ள பஸ் தரிப்பு நிலையங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

சண்டிலிப்பாய், உடுவில் வீதி, மானிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள பஸ் தரிப்பு நிலையங்களுக்கும் பச்சை வர்ணம் பூசப்பட்டு வருகின்றது.

(ஐ-8-139)

## புதிய மாடிக் கட்டடம்

வடமராட்சி, ஒக. 22

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் 55 இலட்சம் ரூபா செலவில் புதிய மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு வரும் இக் கட்டடத்தின் வேலைகள் யாவும் இம் மாத முடிவுக்குள் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ ஆப்கன், சூடான் மீது

# அமெரிக்கா குண்டு வீச்சு!

வாஷிங்டன், ஒக. 22

**கிழக்கு ஆபிரிக்காவில் அமெரிக்கத் தூதரகங்கள் மீது அண்மையில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக—**

**ஆப்கானிஸ்தானிலும், சூடானிலும் உள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகளின் முகாம்கள் மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளது.**

250-க்கும் அதிகமானோரைப் பலி கொண்ட கென்ய, தன்சானிய குண்டுத் தாக்குதல்களுடன் மேற்படி முகாம்களில் இருந்து செயற்படும் பயங்கரவாதிகள் நேரடியாகத் தொடர்பு கொண்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் விசேட வானொலி உரை மூலம் அறிவித்தார்.

அரேபியக் கடலிலும் செங்கடலிலும் நிலை கொண்டுள்ள அமெரிக்கக் கடற்படைக் கப்பல்களில் இருந்து ஏவுகணைகள் மூலம் இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இரு நாடுகள் மீதும் 75 'குருஸ்' ஏவுகணைகள் ஏவப்பட்டன.

பஞ்சம் தலைவிரித்தாடும் மத்திய ஆபிரிக்க நாடான சூடானின் தலைநகர் காட்டூமின் வடபகுதியில் உள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றின் மீது 5 ஏவுகணைகள் வீசப்பட்டதாக சூடான் உள்துறை அமைச்சர் அப்துல் ரஹீம் முஹமட் ஹுசேய்ன் தெரிவித்தார். இரசாயன நச்சு ஆயுதங்கள் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு வந்ததாக கிளின்ரன் நிர்வாகம் கூறியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் எல்லையோரம் சவுதி கோடீஸ்வரர் பின் லாடன் தலைமையிலான பயங்கரவாத நடவடிக்கைகள் இடம் பெறுவதாகக் கூறப்படும் பயிற்சி முகாம்கள் அமைந்துள்ள ஆறு இடங்கள் தாக்குதலுக்கு இலக்கானதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

(ஐ-8)

# 15 ஆப்கன் பொதுமக்கள் பலி!

## தலிபான் அமைப்பு கடும்கண்டனம்!!

வாஷிங்டன், ஒக. 22

கிழக்கு ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடத்திய திடீர் ஏவுகணைத் தாக்குதலில் சிக்கி 15 அப்பாவிப் பொதுமக்கள் பலியானதாக ஆப்கன் இஸ்லாமிய செய்தி நிறுவனம் தெரிவித்தது.

பாகிஸ்தான் எல்லையில் உள்ள கிராமம் ஒன்றில் இவர்கள் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் இந்த தாக்குதலை தலிபான் அமைப்பு கண்டித்துள்ளது. ஆப்கானிஸ்தானின் அப்பாவி மக்களுக்கு எதிரான நடவடிக்கை இது என்று தலிபான் தலைவர் முல்லர் முஹமட் ஓமர் கண்டித்தார்.

ஆப்கன் தலைநகர் காபூலிலும், கன்டேகர் என்னும் நகரில் உள்ள தலிபான் அமைப்பின் தலைமையகத்துக்கு வெளியிலும் நூற்றுக் கணக்கான மக்கள் திரண்டு அமெரிக்கத் தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சூடான் தலைநகர் மீதான தாக்குதலில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

(ஐ-8)

## காபூலில் அமெரிக்க எதிர்ப்புணர்வு! பாகிஸ்தானில் படைகள் உஷார்!!

காபூல், ஒக. 22

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடத்திய திடீர் ஏவுகணைத் தாக்குதலை அடுத்து ஆப்கானியர்களிடையே அமெரிக்க எதிர்ப்புணர்வு கிளம்பியுள்ளதால் தலைநகர் காபூலில் பதற்ற நிலை உருவாகியுள்ளது.

ஐ. நா. ஊழியர்கள் பயணஞ் செய்த வாகனம் ஒன்று நேற்றுக் காலை காபூல் வீதி ஒன்றில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதில் பிரான்ஸ், இத்தாலி நாடுகளைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர். இவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவினரால் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இச் சம்பவத்தை அடுத்து வெளிநாட்டுப் பிரஜைகள் பலர் காபூலில் இருந்து வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

அமெரிக்காவின் இத் தாக்குதலானது ஆப்கானிஸ்தான் சிவில் யுத்தத்தில் அதன் நேரடித் தலையீட்டையே காட்டுவதாக அவதானிகள் தெரிவித்தனர்.

அயல் நாடான பாகிஸ்தானில் படையினர் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக பிந்திக் கிடைத்த ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. இஸ்லாமாபாத்தில் அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட இஸ்லாமிய இயக்கங்கள் தயாராகி வருவதை அடுத்தே அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஐ)

## கிளின்டன் மீதான கவனத்தை திசை திருப்பும் தாக்குதலா?

லண்டன், ஒக. 22

மொனீக்கா லுவின்ஸ்கி விவகாரத்தால் அமெரிக்க அதிபரின் நற்பெயருக்கு ஏற்பட்டிருக்கும் அவமானத்தில் இருந்து உலகின் கவனத்தைத் திசை திருப்பவே ஆப்கானிஸ்தான் மீதும், சூடான் மீதும் அமெரிக்கா திடீர்த் தாக்குதல்களை நடத்தியுள்ளதா?

அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதல்களைக் கண்டிக்கும் ஆய்வாளர்கள் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானிலும், சூடானிலும் பயங்கரவாத ஆதரவு முகாம்கள் என கிளின்ரன் நிர்வாகம் கூறும் இடங்கள் மீது அமெரிக்கா நடத்தியுள்ள திடீர்த்தாக்குதல்கள் உலக அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

இத் தாக்குதல்கள் குறித்து பல்வேறு கருத்துக்களும் கண்டனங்களும் வெளியாகி வருகின்றன.

மொனீக்கா லுவின்ஸ்கியுடன் முறைகேடான பாலியல் தொடர்பு வைத்திருந்ததை அதிபர் கிளின்ரன் ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து அமெரிக்கர்கள் மத்தியிலும் உலக மக்களிடையேயும் கிளின்ரனின் செல்வாக்குச் சரிந்து வருகிறது. இந்நிலையில் தம் மீதான் உலகின் கவனத்தை திசை திருப்பவே இத்தாக்குதல்களை நடத்த கிளின்ரன் உத்தரவிட்டார் என்று அவதானிகள் கூறுகின்றனர்.

முன்னரும் அமெரிக்க அதிபர் மீதான பாலியல் விவகாரம் சூடுபிடித்த சமயங்களில் அமெரிக்க நிர்வாகம் வளைகுடாவில் நெருக்கடிகளை ஏற்படுத்தி யுத்த நிலைமைகளை உருவாக்கி உலகின் கவனத்தைத் திசைதிருப்பி வந்ததை சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(ஐ)

## சவுதி கோடீஸ்வரரே தாக்குதலின் இலக்கு!

வாஷிங்டன், ஒக 22

அமெரிக்கத் தூதரகங்கள் மீதான குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரி என நம்பப்படும் சவுதி கோடீஸ்வரர் ஒஸமா பின் லாடனை (Ossama Bin Laden) இலக்கு வைத்தே ஆப்கானிஸ்தான் நிலைகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியிருக்கிறது.

அமெரிக்காவுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளின் பின்னணியில் இருந்து செயற்படுவதாக அமெரிக்கா நம்பும் சவுதி அரேபியக் கோடீஸ்வரரான பின் லாடென் ஆப்கானிஸ்தானில் தலைமறைவாக இருந்து செயற்பட்டு வருகிறார்.

தலிபான் உட்பட உலகில் உள்ள முக்கிய இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புக்களின் பிரதான நிதியாளர் எனக் கருதப்படும் அவரை விசாரணைக்காகத் தம்மிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்கா தலிபான் அமைப்பிடம் கோரி இருந்தது. ஆனால் அமெரிக்காவின் வேண்டுகோளை தலிபான் தலைவர் நிராகரித்து விட்டார்.

(ஐ)

## சூடானில் அமெ. கொடி எரிப்பு

அமெரிக்காவின் எதிர்பாராத தாக்குதல் சூடானியர்களுக்கு ஆத்திரமூட்டியுள்ளது.

கார்ட்டுமில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு வெளியே அமெரிக்காவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியோர் அமெரிக்கத் தேசியக் கொடியைத் தீக்கிரையாக்கினர்.

(ஐ)

## இஸ்ரேல், பிரிட்டன் ஆதரவு தெரிவிப்பு!

### ஐ. நா. செயலர் கவலை

லண்டன், ஒக. 22

ஆப்கானிஸ்தான் மீதும் சூடான் மீது நடத்தப்பட்ட அமெரிக்க தாக்குதல்களை பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரும், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகுவும் ஆதரித்து கருத்து வெளியிட்டுள்ளனர்.

நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த இராணுவ நடவடிக்கை குறித்து ஐ. நா. செயலாளர் கோபி அனான் கவலை தெரிவித்துள்ளார். ஆனால் பயங்கரவாத நடவடிக்கைகளை அவர் கண்டித்துள்ளார்.

லிபியா, ஈரான் உட்பட பல இஸ்லாமிய நாடுகள் அமெரிக்காவின் நடவடிக்கையை கண்டித்துள்ளன.

(ஐ-8)

## விடுமுறையை பாதியில் முடித்தார் கிளின்ரன்!

வாஷிங்டன், ஒக. 22

ஆப்கானிஸ்தான் மற்றும் சூடான் மீதான இராணுவ நடவடிக்கை குறித்து அறிவிப்பதற்காக அதிபர் கிளின்ரன் தமது விடுமுறையை பாதியில் முடித்துக்கொண்டு மாசசூசெற் மாநிலத்தில் இருந்து வாஷிங்டனுக்கு அவசரமாகத் திரும்பினார்.

மொனீக்கா லுவின்ஸ்கி விவகாரம் தொடர்பாக கடந்த திங்களன்று உண்மையை ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்த பின்னர் அதிபர் பில் கிளின்ரன் தமது மனைவி, மகள் சகிதம் மாசசூசெற் மாநிலத்தில் உள்ள சிறிய தீவில் விடுமுறையைக் கழிக்கச் சென்றிருந்தார். அதன் பின்னரே அமெரிக்கத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

(ஐ)

## ரஷ்ய அதிபரும் கண்டிக்கின்றார்!

மொஸ்கோ, ஒக. 22

அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதல்களை ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் கண்டித்துள்ளார்.

தாக்குதல் நடத்துவதற்கு முன் அமெரிக்கா ஆலோசனை நடத்தியிருக்கவேண்டும். இது அவசரமான ஒரு நடவடிக்கை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதல் தொடர்பாக ரஷ்ய அதிபரும், ரஷ்ய வெளிவிவகார அமைச்சும் தெரிவித்த கருத்துக்கள் முரண்பாடாக இருப்பதாக ஒரு செய்தி தெரிவித்தது.

(ஐ)

### உலக அரங்கில்

## பாகிஸ்தான் கண்டனம்

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலை பாகிஸ்தான் கண்டித்துள்ளது.

இஸ்லாமிய நாடு ஒன்றின் எல்லையை அத்துமீறிய செயல் இது என்று பாகிஸ்தான் வெளிவிவகாரஅமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பு அண்மையில் அடைந்துள்ள இராணுவ வெற்றிகளுக்கு பாகிஸ்தான் [illegible] படுவதாகக் குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன.

## கிளின்ரனின் இரத்தம் மீண்டும் பரிசோதனை!

வாஷிங்டன், ஒக. 22

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் முறைகேடான பாலியல் உறவு குறித்து விசாரணை நடத்திவரும் ஜூரிமார் முன்னிலையில் வெள்ளைமாளிகையின் முன்னாள் பெண் உதவியாளர் மொனீக்கா லுவின்ஸ்கி நேற்று முன்தினம் மீண்டும் சாட்சியமளித்துள்ளார்.

கடந்த திங்களன்று சாட்சியமளித்த போது அதிபர் கிளின்ரன் தெரிவிக்காத சில விடயங்களை மொனீக்கா தனது சாட்சியத்தில் தெரிவித்திருப்பதாக கூறப்படுகிறது.

இதேவேளை—

சுதந்திர விசாரணையாளர் கெனத் ஸ்ரார் டி. என். ஏ. பரிசோதனைக்காக கிளின்ரனின் இரத்த மாதிரியைப் பெற்று ஆய்வுக்காக அனுப்பியுள்ளார்.

மொனீக்கா லுவின்ஸ்கியின் உள்ளாடைகள் மீண்டும் பரிசோதிக்கப்படும் போது அவற்றில் உள்ள விந்துக் கறைகள் கிளின்ரனுடையவைதானா என்பதை நிரூபிப்பதற்காகவே கிளின்ரனின் இரத்தம் பெறப்பட்டுள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மக்களின் புனர்வாழ்வு பணிகளுக்கு இயன்றவரை உதவி

## பிரிட்டிஷ் தூதுவர் ததாம் பேட்டி

யாழ்ப்பாணம், ஒக. 22

யாழ்ப்பாணத்தில் புனர் வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளுக்கு உதவுவதற்கு, இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டு இலங்கையில் அரசியல் ஸ்திர நிலைமை உருவாகும் வரை காத்திருக்கவேண்டும் என்ற கருத்தில் எமக்கு நம்பிக்கை யில்லை.

புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளுக்கு இப்போதே உதவுவதன் மூலமே யாழ்ப்பாண மக்களுக்கு உதவ முடியும் அவர்களின் வாழ்க்கை நிலையை முன்னேற்ற முடியும்; என்பதே எமது திட்டவட்டமான மாற்ற முடியாத கருத்து.

எம்மால் இயன்றவரை புனர்வாழ்வு, புனர்நிர்மாணப்பணிகளுக்கு தொடர்ந்து உதவுவோம்.

இவ்வாறு உதயனுக்கு அளித்த விசேட பேட்டியின் போது இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் ததாம் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் தூதுவர் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தார். தாம் யாழ்ப்பாண நகரத்தை சைக்கிளில் சுற்றிப் பார்த்ததாகவும், இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் வந்தவேளை இருந்ததை விட இப்போது மக்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் கண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டுத் தூதர்கள், பிரதிநிதிகள், சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்து செல்கிறார்கள் ஆனால் உதவிகள் பெரிய அளவில் மக்கள் கைக்கு வந்து சேரவில்லையே; என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் —

பிரிட்டனைப் பொறுத்தவரையில் நாம் திட்டமிட்ட உதவிகளை விரைவாகச் செய்து முடிக்கவே விரும்புகிறோம்; குடாநாட்டு மக்களுக்கு மின்சார வசதி, குடிதண்ணீர் வசதிகளைச் செய்யும் திட்டங்கள் துரிதமாக முன்னேறி வருகின்றன— என்றார்;

பிரிட்டிஷ் தூதுவர் தமது பேட்டியின்போது மேலும் தெரிவித்த முக்கிய கருத்துக்களாவது:-

யாழ்ப்பாண மக்கள் தங்கள் பிரதேசத்தை புனர் நிர்மாணம் செய்து மீண்டும் கட்டி எழுப்புவதற்கு இலங்கை அரசாங்கத்தையும் வெளிநாடுகளையும் மட்டும் நம்பியிருக்கக்கூடாது;

வெளிநாடுகளில் உள்ள தமிழர்களின் உதவியையும் கேட்கவேண்டும். தமது சொந்தப் பிரதேசத்தைக் கட்டி எழுப்புவதில் அவர்களுக்கும் பங்குண்டு, அது அவர்களின் பொறுப்புமாகும்;

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் இதில் ஜனாதிபதி சந்திரிகா விசுவாசமாகவே இருக்கிறார் என்றே நாம் கருதுகிறோம்; இந்த நாட்டின் எல்லாத் தரப்பினரும் அவருக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கினால் தீர்வு ஒன்றைக் காண்பது இலகுவாகிவிடும்.

ஒரே நாடு ஒரே நாடுஎன்று சொல்லிக் கொண்டிருந்தால் நாடு பிளவுபடும் ஆபத்து உண்டு; அதே போல தமிழ் மக்கள் தங்களுக்கு மட்டுமே பிரச்சினைகள்உண்டு, பாதிப்புகள் உண்டு என்று கருதக்கூடாது; முஸ்லிம் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன என்றும் எண்ண வேண்டும்;

இலங்கை சுதந்திரம் அடைந்த வேளை அதனை பிரிட்டனே ஆட்சி செய்தது என்பதால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் எமது நாட்டுக்குப் பொறுப்பு உண்டு என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது; இலங்கையில் வாழும் எல்லா இனத்தவர்களும் சேர்ந்தே ஒற்றுமையுடனேயே சுதந்திரம் கேட்டார்கள்; வழங்கப்பட்டது.

அத்தகைய ஒரு பொறுப்பு உண்டு என்ற நிலைக்கு அப்பால் மனிதாபிமான ரீதியான பொறுப்புணர்ச்சி என்ற வகையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு உதவி செய்வதற்கு எமக்கு விருப்பமுண்டு. ஆனால் எவர் மீதும், எந்தத் தரப்பு மீதும் அழுத்தம் போட முடியாது போரில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பாரும் எமது உதவியை நாடினால் அது குறித்துப் பரிசிலனை செய்யலாம்.

இந்த விவகாரம் ஓர் உள்நாட்டுப் பிரச்சினை என்பதனால் சம்பந்தப்பட்ட தரப்பினரே தமக்கிடையில் சமரசமாகி, இணக்கத்துக்கு வர வேண்டும்.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதனை விட ஜனநாயக வழி முறையிலேயே ஒருவர் மீது நம்பிக்கை வைத்துச் செயற்பட்டாலே பிரச்சினைகளை இலகுவில் தீர்க்க முடியும்.

தமிழ் மக்கள் சமாதானத்தையும், அமைதியையுமே விரும்புகிறார்கள் என்பதனை நாம் அறிவோம்; அவற்றை அடைய வேண்டும் என்பதுவே எங்கள் விருப்பமுமாகும். சமாதானத்தை உண்டாக்குவதற்கு இந்த நாட்டின் சகல இன மக்களும் நேர்மையுடன் செயலாற்றினால் மட்டுமே அது சாத்தியமாகும்.

பிரிட்டன் எப்போதும் இலங்கை மக்களின் நண்பனாக இருக்க விரும்புகிறது; ஒரு நண்பன் செய்யக் கூடிய உதவிகளை இலங்கை மக்களுக்குச் செய்வதற்கு அது பின்நிற்காது;

— என்று சொன்னார்;

(அ)

# ரூ. 20 லட்சம் செலவில் துறைமுக புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 22

அனலைதீவு மற்றும்நயினாதீவு, எழுவைதீவுத் துறைமுகங்கள் 20 லட்சம் ரூபா செலவில் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன;

ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட எம். பியுமான டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கிணங்க வடமாகாண மீள்குடியேற்ற அதிகாரசபை இந்தநிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

புனரமைப்புத் தொடர்பான நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் வகையில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜா கடந்த வாரம் கொழும்பு சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது;

(இ-7)

# பொலீஸ் அதிகாரிகள் ஐவர் கட்டாய லீவில்

பகிரங்க ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையின்போது சித்திரவதை சம்பவங்களில் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட ஐந்து சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளனர்;

சிரேஷ்ட பிரதி பொலீஸ் மாஅதிபர் லறி குணரட்ண, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் எச். ஜி. விக்கிரமசிங்க, பொலீஸ் அத்தியட்சகர்களான வின்ஸட் மகாநாயக்க, ரஞ்சித் தர்மரட்ண, என். சந்திரதாஸ ஆகிய பொலீஸ் அதிகாரிகளே கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளனர்.

முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தின் போது வகியந்த வீடமைப்புத் தொகுதியில் உள்ள சித்திரவதை முகாமில் இடம்பெற்ற சம்பவங்களில் இந்த அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.

இந்த வீடமைப்பு தொகுதியில் இடம்பெற்ற சில சம்பவங்கள் தொடர்பாக விசாரிப்பதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்த ஆணைக்குழுவின் அறிக்கையின்படியே இவர்கள் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளனர். மேலும் சிலர் விரைவில் அனுப்பப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

# வலிகாமம் பிரதேச செயலர் பிரிவில் 50 சதவீதமானோருக்கு நிவாரணம் வெட்டு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெற்று வந்த குடும்பங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிவாரணம் பெற தகுதியுடையவர்களுக்கான உணவு முத்திரைகள் வலிகாமம் பிரதேச செயலகத்தினரால் சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன;

ஏற்கனவே வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் 11 ஆயிரத்து 50 குடும்பங்களுக்கு நிவாரண உலர் உணவு வழங்கப்பட்டிருந்த போதிலும், நிவாரணக் குறைப்புக்குப் பின்னர் 5ஆயிரத்து 525 குடும்பங்களுக்கு மட்டுமே நிவாரண முத்திரைகள் கிடைத்துள்ளன.

இதனால் இப்பகுதியில் உள்ள 50 சதவீதமான குடும்பங்கள் நிவாரண உலர் உணவு பெறும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளன.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய் போன்ற பிரதேச செயலக பிரிவுகளில் இருந்து மிகக் கூடுதலான குடும்பங்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருவதால் அவர்களுக்கும் சேர்த்து நிவாரணம் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டதனால் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமான குடும்பங்கள் சுமார் ஆயிரம் பேர் நிவாரணத்தை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது பற்றி யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரிடம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதை யடுத்து மேலும் 14 சதவீதமானவர்களுக்கு முத்திரை வழங்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

அப்படி ஒரு நிலை ஏற்படுமிடத்து உணவு நிவாரணம் மேலதிகமாக வழங்கத் தகுதியுடைய 14 சதவீதமான குடும்பங்களின் பெயர்ப்பட்டியலை வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அனுப்பி வைத்துள்ளது. (இ-152)

# தகவலுக்கு ரூ.10 லட்சம்

உதவிப் பொலீஸ் அதிகாரி சாந்தி குமாரின் படுகொலை உட்பட பல குற்றங்கள் தொடர்பாகத் தேடப்பட்டு வரும் பேர்னாட் கிறிஸ்தோபர் பரிஷ் என்பவரைக் கைது செய்வதற்கு பொலீஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

மேற்படி சந்தேகநபர் பற்றிய தகவல்களைத் தருபவர்களுக்கு ரூபா 10 லட்சம் சன்மானம் வழங்கப்படும் என பொலீஸார் அறிவித்துள்ளனர்.

கிறிஸ்ரி, பேர்னாட் மற்றும் பெரு என்ற பெயர்களினால் இவர் பலகாலம் அழைக்கப்பட்டு வந்துள்ளார் எனவும்—

இவர்மீது ஏழு கொலைக் குற்றங்கள் சாட்டப்பட்டுள்ளதாகவும்—

இவற்றில் இரட்டைக் கொலைச் சம்பவமும் ஒன்று எனவும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

# பிள்ளையார் ஆலயத்துக்கு இடப வாகனம்

நெல்லியடி, ஒக. 22

கரவெட்டி கிழக்கு தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயத்துக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான இடப வாகனம் ஒன்று புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. (இ109)

## தமிழ்த் தெய்வம்

இடருற்று தடம் புரண்டு உலையும் வேளை
சுடர்கின்ற உனது வேலே எமக்குத் துணையாம்
படர்கின்ற கொடி போன்ற கிடையுடைய இருமாதர்
இடம் வலமாய் இணைகின்ற தமிழ்த் தெய்வமே

- வாசுகி சிவராமலிங்கம்

## நல்லைக் கந்தா சரணம்!

நல்லைக் கந்தா சரணம் சரணம்!
நான்கு தமிழின் வேந்தா சரணம்!

வள்ளி தெய்வானை மணாளா சரணம்!
வாரண முகத்தோன் அண்ணனே சரணம்!

புள்ளி மயில் வாகனா சரணம்!
புன்னகை சிந்தும் தேவனே சரணம்!

எல்லைகள் காக்கும் வீரனே சரணம்!
ஏழைகளைத் தூக்கும் குமரனே சரணம்!

சூரனை வென்ற வேலனே சரணம்!
சுதந்திர வாழ்வின் காவலனே சரணம்!

இருளை அகற்றும் முருகா சரணம்!
இல்லாமை அழிக்கும் மருகா சரணம்!

முடிவே இல்லாத முதலே சரணம்!
அழிவே இல்லாத அழகே சரணம்!

உலக மக்களின் முழுமையே சரணம்!
அடியவர்க்கருளும் அன்பனே சரணம் சரணம்!!

- நல்லை அமிழ்தன்



## கூவு குயிலே!

கூவு குயிலே பறந்து கூவு குயிலே
கும்பிடுவார் மனத்தானைக் கூவு குயிலே

போம் போம் வினையென்று கூவு குயிலே
புண்ணியம் போல் பாவமென்று கூவு குயிலே
நல்லூரான் வீதியிலே போய்க் கூவு குயிலே
நல்ல தொண்டர் நாமென்று கூவு குயிலே

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பணியாளர்
திரு. பெ, காளிமுத்துவின்
அன்பு மகன்
**துசாந்தன்**

அவர்களின் மரணத்தையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

(சி/4629)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசு - புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)
யில் வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது. முதல்வர் வரவேற்புரை நிகழ்த்திய பின்னர் சபையில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளும் வரவேற்றுப் பேசினர்.

அதன் பின்னர் பிரிட்டிஷ் தூதுவர் நன்றி தெரிவித்து உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து மாநகர சபையின் உறுப்பினர்கள் பிரிட்டிஷ் தூதுவருடன் சில நிமிட நேரம் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாண நகரத்தில் உள்ள மணிக்கூண்டுக் கோபுரத்தில் பொருத்துவதற்கென இளவரசர் சாள்ஸ் மணிக்கூட்டை மாநகரசபை ஆணையாளரிடம் கையளித்த போது எடுக்கப்பட்ட படத்தினையும், வெள்ளியிலான தாம்பாளத்தையும் டேவிட் தத்தமிடம் அன்பளிப்புச் செய்தார். அதனைத் தொடர்ந்து பிரிட்டிஷ் தூதுவர் யாழ். நூல் நிலையத்துக்கென 'கிரிக்கெட்' சம்பந்தமான நூல் ஒன்றை முதல்வருக்கு அன்பளிப்புச் செய்தார்.

மாநகர முதல்வர் தமது வரவேற்புரையில் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் செய்து வரும் உதவிகளுக்கும் மாநகர சபைக்கும் செய்யும் உதவிகளுக்கும் மக்கள் சார்பில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். யாழ்ப்பாண மக்கள் பிரிட்டனைத் தமது நல்ல நண்பனாகவே கருதுகிறார்கள். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பிரிட்டன் இலங்கை அரசாங்கம் மீது அழுத்தம் போட வேண்டும்— என்றார்.

புளொட் சார்பில் வரவேற்புரை நிகழ்த்துகையில் செ. கிருபைராஜா தெரிவித்ததாவது:—

நீண்ட காலத்துக்குப் பின்னர் யாழ். மாநகர சபையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அங்கம் வகிக்கிறோம். நான்கு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருந்தபோதிலும் யாழ்ப்பாண நகரத்தைக் கட்டி எழுப்பவேண்டும். மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கில் ஒற்றுமையாக இயங்குகின்றோம். யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்பும் பணிக்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பிரிட்டிஷ் அரசாங்கம் உதவி செய்ய முன்வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும்.

எமது மக்கள் போரினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தொடர்ந்து நடைபெறும் இந்தப் போரை நிறுத்துவதற்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் பிரிட்டிஷ் அரசு உதவவேண்டும்.

இந்த வகையில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அழுத்தம் கொடுக்க பிரிட்டிஷ் அரசு முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகின்றோம் என்றார்.

ஈ.பி.டி.பி. சார்பில் வரவேற்புரை நிகழ்த்திய வி. கே. ஜெகன் தெரிவித்துள்ளதாவது:—

எங்களது மக்களின் துயரங்களைப் போக்குவதற்கு வடக்கு — கிழக்கில் பிரிட்டிஷ் அரசாங்கம் செய்து வரும் அளப்பரிய சேவைகளுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். எங்களது மக்களின் குறைபாடுகளையும் கோரிக்கைகளையும் உங்களிடம் தெரிவிக்க விரும்புகிறோம்.

வடக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த மக்களின் நிவாரண வெட்டு, வவுனியாவில் எரிபொருள் விநியோகத்தில் கட்டுப்பாடு, கப்பலில் பொருள்களைக் கொண்டு வரும்போது அவற்றை இழந்த வர்த்தகர்களுக்கான நஷ்டஈடு, பயணிகள் கப்பல் போக்கு வரத்து போன்ற விடயங்களில் அரசாங்கம் அக்கறையுடன் பணி புரியவில்லை என்பதனை இங்கு கூறவேண்டிய கடமை எமக்குண்டு.

எங்கள் மக்கள் படும் கஷ்டங்களைப் போக்குவதற்குப் பேச்சுவார்த்தை மூலமான தீர்வு ஒன்று அவசியம்— ஆனால் இதற்கான கதவைத் திறப்பதும் பின்பு அடைப்பதும் பின்னர் திறப்பதுமாக அரசு செயற்படுகிறது.

ஆகையால் அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்த பிரிட்டிஷ் அரசு இரு தரப்பினர் மீதும் அழுத்தம் செலுத்த வேண்டும் என்றார்.

ஈ. பி. ஆர். எல். எவ். சார்பில் து. சுபத்திரன் பேசுகையில்—

அரசாங்கம் போரை நிறுத்தி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கமே இல்லாமல் போரை நடத்துவதிலேயே முனைப்பாக உள்ளது. இதனால் அதிக அளவில் பாதிக்கப்படுவது தமிழ் மக்களே. எனவே இந்தப் போர் நிறுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். இந்தப் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் இரு தரப்பினருக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் சர்வதேச அலுவலகம் லண்டனில் இருப்பதால் அவர்களுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு பிரிட்டிஷ் அரசுக்கு அதிக வாய்ப்பு உள்ளது. எனவே பிரிட்டிஷ் அரசு பேச்சுக்களை நடத்துவதற்கு முன்வர வேண்டும்.

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட கவுன்ஸிலில் நாம் அங்கம் வகிக்கின்றோம். ஆனால் மிகவும் ஆபத்தான ஒரு சூழ்நிலையிலேயே நாம் தொடர்ந்து கடமை செய்து கொண்டிருக்கின்றோம்.

ஆபத்துக்கள் மத்தியில் கடமையாற்றி வரும் எமக்கு பிரிட்டிஷ் அரசு உதவிகளை வழங்க முன்வந்திருப்பதை இட்டு நாம் மகிழ்ச்சியடைவதுடன் எமது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதே சமயம் எமது கடமைகளை செவ்வனே செய்வதற்கு கவுன்ஸிலில் நிதிப் பற்றாக்குறை தொடர்ந்து இருந்து வருகின்றது. எனவே மேலும் நிதி உதவிகளைச் செய்வதற்கு முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார். (அ)


அதி நவீன வீடியோ சாதனங்களைக் கொண்டு
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
மங்களகரமான நிகழ்வுகள் எதுவானாலும்

வீடியோ
மற்றும்
கலர்படம் பிடித்திட
இன்றே நாடுங்கள்:

சதீஸ் வீடியோ
&
போட்டோ

உங்கள் சேவையே எங்கள் சேவையாகக்
கருதுகிறோம்.
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

(58495)


## கிளைமோர் தாக்குதல்

கொழும்பு, ஓக. 22

வவுனியா பெரியகுளம் பகுதியில் ரோந்து சென்ற பொலிஸ் ஜீப் ஒன்று நேற்று முன்தினம் மாலை 4.45 மணியளவில் கண்ணிவெடியில் சிக்கியதில் இரு பொலிஸார் உயிரிழந்தனர்.

இத்தாக்குதலில் இரு படையினரும், ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும் காயமடைந்து அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். (இ-21-3)

## பருத்தித்துறையில் லங்கா முடித

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாணத்துக்கான ஒரு தொகுதி உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு லங்கா முடித கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

அரிசி, சீனி உட்பட பல உணவுப் பொருள்கள் இந்தக் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

தற்போது இப்பொருள்களை விரைவாக இறக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வடபகுதிக்கான பொருள்களுடன் வந்த பிரின்ஸஸ் காஷ் கப்பல் குண்டு வீசி அழிக்கப்பட்ட பின்னர் வடபகுதியை வந்தடைந்துள்ள முதற் கப்பல் இதுவாகும். (இ-6)

## நாடாளுமன்றை...

(முதலாம் பக்கத் தொடர்)
கும் சுரேஷ் பிரேமச்சந்திரனால் அனுப்பி வைக்கப்பட்டது.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு—கிழக்கில் முடுக்கி விடப்பட்டுள்ள யுத்தமானது, அங்கு வாழக் கூடிய தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை மிகவும் மோசமாகப் பாதித்துள்ளது. யுத்தத்தின் கொடுமையால் நாளாந்தம் ஏற்படும் மரணங்கள் ஒரு புறம் இருக்க, ''புலிகளுக்கு எதிரான, சமாதானத்துக்கான அரசின் யுத்தம்'' வடக்கு—கிழக்கு மக்களை சொல்லொணாத் துன்பத்துக்குள்ளாக்கிவருகின்றது.

★ புதை குழி கலாசாரம்.
★ வகை தொகை இல்லாமல் கைது செய்தல்.
★ வவுனியாவின் ''பாஸ்'' கெடுபிடிகள்.
★ உலர் உணவுப் பொருள்களில் வெட்டு.
★ எரிபொருளுக்குப் பங்கீட்டு முறை.

மேற்கண்ட அரசின் ஏதேச்சாதிகார நடவடிக்கைகள் வடக்கு — கிழக்கில் வாழும் முழுத் தமிழ் மக்களையும் பாதித்துள்ளது. அரசின் இக்கெடுபிடி நடவடிக்கைகள் தமிழ்மக்களைத்தான் பாதித்ததே அல்லாமல், புலிகளை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை என்பதே யதார்த்தமானதாகும்.

அரசின் இத்தகைய தமிழ் மக்கள் விரோதப் போக்குகளை நீங்கள் எல்லோரும் பலமுறை கண்டித்துள்ளீர்கள் என்பதுடன் ஜனாதிபதிக்கு பல தடவைகள் எடுத்துக் கூறியுள்ளீர்கள் என்பதும் உண்மையே.

எனினும் எந்தப்பிரச்சினையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டதாக இல்லை. தமிழ்மக்களை திருப்திப்படுத்த அரசு ஒரு சில மனித உரிமைக்குழுக்களை நியமித்திருக்கின்றது என்பதைத் தவிர வேறெதுவுமில்லை.

இந்நிலையில் தமிழ்மக்களுக்கெதிராகத் தொடரும் அடிப்படை உரிமை மீறல்களை நிறுத்த அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டியது சகல தமிழ் கட்சிகளின் கடமையாகும்.

நிவாரணப் பொருள்களை வெட்டியதால் வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும், இலட்சக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அகதிகளாகி நிர்க்கதியாகி இருக்கும் எமது மக்கள் பஞ்சைகளாய் பராரிகளாய். பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளார்கள்.

வவுனியா, மன்னாரில் ஏற்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் விநியோகமுறை, அம் மாவட்டங்களிலுள்ள முழு மக்களையும் பாதித்துள்ளது. எரிபொருள் எடுப்பதற்கு மாதாந்தம் பொலீஸ் இராணுவ, அரச அதிபரின் காரியாலயங்களுக்கு, மக்கள் ஏறி இறங்கும் நிலையையே இது ஏற்படுத்தியுள்ளது.

மூன்றாவதாக யாழ்ப்பாண மக்களுக்கு எடுத்துச் செல்லப்படும் உணவுப் பொருள்கள் உட்பட வாகன உதிரிப்பாகங்கள், சிமெந்து போன்ற 50கோடி ரூபா பெறுமதியான 450 வர்த்தகர்களின் பொருள்கள் முல்லைத்தீவுக் கடலில் ஸ்ரீலங்கா விமானப்படையால் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சென்ற பிறின்ஸஸ் காஷ் கப்பலுக்கு கடற்படையால் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தால் புலிகள் அக்கப்பலை கடத்தவோ பின்னர் அதனைஅரசு குண்டு போட்டு தகர்க்கவோ வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

அரசாங்கத்திற்கு ஓர் நிர்ப்பந்தம் ஏற்பட்டாலேயன்றி அரசு இப்பிரச்சினைகளைத் தீர்க்காது. எனவே அரசுக்கு நிர்ப்பந்தம் ஏற்படுத்து முகமாகவும், அரசின் இந்த மக்கள் விரோத செயற்பாடுகளை சர்வதேச சமூகத்துக்கு அம்பலப்படுத்து முகமாகவும், மேற்கண்ட முக்கியமான பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வினைக் காணும் பொருட்டும் அரசாங்கம் இப்பிரச்சினைகளுக்கு திட்டவட்டமான தீர்வினைத் தெரிவிக்கும் வரை வடக்கு - கிழக்கு மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தை பகிஷ்கரிக்கும்படி ஈ.பி.ஆர். எல். எவ். கோருகின்றது.

உங்கள் பகிஷ்கரிப்பும் அரசாங்கத்திற்கு நிர்ப்பந்தத்தை உருவாக்காவிடில் நாம் எல்லோரும் இணைந்து வடக்கு - கிழக்கில் அரசுக்கெதிரான ஜனநாயகப் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தவும் அழைப்பு விடுக்கின்றோம் என்றுள்ளது. (இ-7)

## பிரதேச செயலக...

(முதலாம் பக்கத் தொடர்)
தொடர்பான வேலைகளை இனங்கண்டு அவற்றை மாகாண சபைக்கு அனுப்பியிருந்தன.

இதற்கான நிதியை நாம் திறைசேரியில் கேட்டிருந்தோம்.

ஆனால் இதுவரை ஒரு கோடி ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

இனி மழைகாலம் ஆரம்பித்தால் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியாத நிலையே ஏற்படும்.

இதன் காரணமாக இனி ஒதுக்கப்படும் நிதி வேலை எதுவும் செய்யமுடியாத நிலையில் மீண்டும் திறைசேரிக்கு [illegible] திட்டங்கள் பாதிக்கப்படலாம்.

இப்படி அவர் கூறினார். (இ-3)

## ரூ. 8 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்)
வர்த்தகர் எனவும் இவர் தொடர்பான விசாரணைகள் இரகசியப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் கட்டுநாயக்க பொலீஸார் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட நபரின் பெயரையோ குறிப்பிட்ட வங்கி பற்றிய விவரத்தையோ பொலீஸார் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிடவில்லை. (இ-7)

## குண்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்)
பெற்ற சில குண்டு வெடிப்புச்சம்பவங்களில் இவர் பங்கு பற்றியவர் எனவும் —

இவரது மனைவியான யோகராணி என்பவரே குண்டுத் தாக்குதல்களுக்குத் தேவையான வெடி மருந்துகளை எடுத்து வந்ததாகவும் — விசாரணைகள் மூலம் தெரியவந்ததாக படையினர் தரப்பால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் உள்ள அகதி முகாம் ஒன்றில் வைத்து சந்தேக நபரின் மனைவியான யோகராணி என்பவரையும் பொலீஸார் கைது செய்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் இருவரிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பொலீஸார்மேலும் 8 சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நித்தம்புவ, களுவாஞ்சிக்குடி, இரத்தினபுரி, ஹட்டன், பதுளைப் பகுதிகளில் மின்மாற்றிகள் தகர்க்கப்பட்ட சம்பவங்களுக்கும் —

இரத்தினபுரி, கூடவத்த, களுத்துறைஆகியஇடங்களில் உள்ள ரெலிக்கொம் நிலையங்களும், நீர்கொழும்பு, நித்தம்புவ ஆகிய இடங்களில் உள்ள மொபிடெல் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட சம்பவங்களுக்கும் கைது செய்யப்பட்ட மேற்படி சந்தேக நபர்களுக்கும் தொடர்பு இருப்பதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலீஸார் தெரிவித்தனர். (இ-7)

## விமான...

(முதலாம் பக்கத் தொடர்)
பார்க்கப்படுகின்றது.

இக் கப்பலின் மூலம் 25 கிலோ நிறையுடைய 200 தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்பட்டு வந்தன. ஆனால் தற்போது விமானம் மூலம் 25 கிலோ நிறையுடைய 4 தபால் பொதிகளே எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்தப் பொதிகளில் கடுகதி தபால்களும், தேர்வு செய்யப்பட்ட சில தபால்களுமே அடங்கியுள்ளன. எனவே சாதாரண தபால் சேவை மேலும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-9-10)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் [illegible] ார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்கள[illegible] மனையில் 22-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சஞ்சீவி
சஞ்சிகை

தரமான நிழற்படபிரதிகள்
குறைந்த விலையில்

A4 அளவு ரூபா 2.50 மட்டும்
அடையாள அட்டைகள்
கவரிடுதல் (Lamination)
அருண்ஸ்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

22 – 08 – 1998 சஞ்சீவி

கருத்துக் கலசம் — மயூரா

## மன நிம்மதி

மனநிம்மதி கிடைக்கவில்லையே என்று கவலைப்படுவோரின் எண்ணிக்கை இப்போது அதிகம். நாம் வாழும் சூழ்நிலையே இந்த அதிகரிப்புக்குக் காரணம் என்று பலரும் கருதுகிறோம்.

அதாவது —

தான், தனது குடும்பம், தனது உறவு, சமூகம் என்ற எல்லா மட்டங்களிலும் துன்ப துயரங்கள், கஷ்டங்கள், இன்னல்கள், நெருக்கடிகள், தோல்விகள், இயலாமை, வறுமை என்பன அதிகரித்துள்ளமையே மனநிம்மதி இல்லாதோர் எண்ணிக்கை பெருகுவதற்குக் காரணம் என்று பொதுவாகப் பேசப்படுகிறது; கருதப்படுகிறது.

ஆனால் தம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கைச் சூழ்நிலை சுமுகமாக இருந்தாலும் கூடப் பலருக்கு நிம்மதி கிடைப்பதில்லை. நிம்மதி என்பது அவரவர் மனதைப் பொறுத்தே வளர்கிறது.

எல்லாவற்றையும் நல்லதற்கென்றே கொள்ளும் மனதில் நிம்மதியின்மை குறைவு. சகல விளைவுகளையும் பாதகமான பெறுபேறுகளைத் தருபவை அல்லது தருவதற்கான முன்னோடியாகப் பார்க்கும் மனம் நிம்மதி காண்பது கடினமானது.

போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. ஆனால் மனிதர்களில் பலரும் கிடைத்தது போதும் என்று மனத்திருப்தி கொள்வதில்லை. எதுவுமே போதாது என்ற அதிருப்தி ஆசைக்கு வழி செய்கிறது. அந்த ஆசை பல ஒவ்வாத, பாதகமான, தீயவிளைவுகளைக் கொண்டு வருகிறது.

தீய செயல்களுக்கான, பாவச் செயல்களுக்கான கர்மபலன் எப்போதும் கடினமானவையாகவே அமையும். ஆகையால் தீமை செய்தவர்கள் மனநிம்மதி கொள்ளத்தக்கதாக வாழ்க்கைப் புறநிலைச் சூழல் அமையாது போகலாம்.

அவ்வாறாயின் மனநிம்மதி காண்பதற்கு வழி என்ன?

நடப்பவை எல்லாம் நல்லனவே; நடப்பவை யாவும் நல்லதற்கே நடக்கின்றன. கிடைப்பது போதும்; அதற்கு மேல் ஆசை கொள்ளாதிருப்போம்; கிடைத்ததைக் கொண்டு சமாளிப்போம்; மற்றவர்களுடன் வீணாகத் தேவையற்றுமோதிக் கொண்டு வினையை விலைக்கு வாங்காதிருப்போம்; நம்பிக்கையையும் முயற்சியையும் கைவிடாதிருப்போம்; இன்னா செய்தாருக்கு நன்னயம் செய்யப் பாடுபடுவோம்; அடுத்தவர் துயரத்தில் பங்கு கொண்டு இயன்றளவில் உதவி செய்வோம் — என்ற மனப்பக்குவத்தை எட்டுவதே மன நிம்மதிக்கு உகந்த வழி.

தீய குணங்களை ஒதுக்கி நற்குணங்களை வளர்ப்பதும் மன நிம்மதிக்கு நல்ல மார்க்கம். உடம்புக்கு ஆடை எப்படியோ அப்படியே உள்ளத்துக்கு நல்ல குணங்கள் என்பதனை மறந்து விடாமல் செயற்படுங்கள். அதன் மூலமும் மனநிம்மதியைப் பெறலாம்.

# சபலம் என்னும் சாபம்

சபலம்!

இதுவரை குஷ்புவைப் பார்த்து ரசித்த ரசிகர்கள் இப்போது ரம்பாவைக் கண்டதும் வாய்பிளந்து ரசிக்கிறார்களே — அது சபலம்.

இதுவரை பிரசாந்தை பார்த்துப் பெருமூச்சு விட்ட ரசிகைகள் இன்று விஜய்க்கு திருமணம் என்றதும் தூக்க மருந்து அருந்துகிறார்களே — அது சபலம்.

அழகான மனைவி இருக்க அடுத்த வீட்டு அசிங்கத்தை சின்ன வீடாக செட்டப் செய்ய தாவுகின்றதே மனம் — அது சபலம். அழகான — அன்பான காதலனிருக்க அவனது நண்பனுக்கு காதல் கடிதம் கொடுக்க தூண்டுகிறதே — அது சபலம்.

அடுத்தவன் வீட்டில் கவனிப்பாரன்றிக் கிடக்கும் பொருளை சுருட்ட நினைக்கின்றோமே — அது சபலம்.

அடுத்த வளவுக்காரன் ஊரில் இல்லாத வேளையில் வேலியை அவனது வீட்டுப்பக்கமாக நகர்த்த முயல்கின்றோமே — அது சபலம்.

பொன், பொருள், பெண், புகழ் போன்றவற்றின் மீது எமக்குரிய எல்லையை மீறி நாம் ஆசைவைப்பதற்கு சபலம்தான் காரணமாகின்றது.

அளவோடு ஒன்றிருக்க அளவுக்கு மீறி நாம் பிறிதொன்று மீது கண்வைப்பதற்கு — கவர்ச்சியை ஏற்படுத்தித் தருவதும் இந்த சபல புத்திதான்.

இனக்கவர்ச்சியால் ஏற்படுகின்ற சபல புத்தி எம்மை எப்படி ஆட்டிப்படைத்து விடுகின்றது என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்போம்!

இந்தச் சபலம் இருக்கிறதே அது ஆண்டி முதல் அரசன் வரை — சாமியார் முதல் ஆசாமியார் வரை — சிறுவன் முதல் பெரியார் வரை — பால்வேறுபாடு, வயது வேறுபாடு என்று எதுவுமின்றி அனைவரையும் தனது கோரப்பிடியில் சிக்கவைத்து விடுகின்றது.

தனது அலுவலகப் பணியாள் தொகுதி பெண் ஊழியரான லூவின்ஸ்கி மீது அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனுக்கு வந்த சபலம் இன்று உலகின் முன்பாகவே அமெரிக்க ஜனாதிபதியைக் கூனிக் குறுகிநிற்க வைத்து விட்டது.

சபலத்தில் சிக்கியவர்கள் சாதனை படைத்ததாய் சரித்திரமே இல்லை. சபலம், மலையாய் இருந்தவர்களை மண்மேடு ஆக்கிவிடுகின்றது; உயர்ந்து நின்றோரை மட்டமாக்கி விடுகின்றது.

இராமன் மீது சபலம் கொண்ட சூர்ப்பனகை மூக்கை இழந்தாள். சீதை மீது சபலம் கொண்ட இராவணன் தன் இனமே அழியக் காரணமானான். மாதவி மீது கோவலனுக்கு ஏற்பட்ட சபலம் மதுரையே எரிய காரணமாயிற்று.

இப்படி சபலங்கள் எல்லாம் அழிவின் ஆரம்பமாகவே விளங்குகின்றது.

அன்றும் எம் முன்னோர்கள் சபலத்தின் சாபத்தில் சிக்கினார்கள். ஆனால் அவர்களது சபலத்தின் விளைவுகள் ஓர் எல்லையுடன் நின்று கொண்டன. அதற்கு சமூகக் கட்டுப்பாடுகள் காரணமாகின.

ஆனால் இன்று சமூகக் கட்டுப்பாடுகள், வேலிகள் உடைய, சபலம் எல்லை மீறி எமது சமூகத்தின் கொடிய விஷநோயாகப் பரவி அதனைப் பாதித்து விட்டது.

எனவே சபலத்தின் விளைவுகள் பற்றி சற்று சிந்திக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்

-சுதா-

எமது இன்றைய சமூகத்தின் இளைஞர் — யுவதிகளே அதிக அளவில் சபலத்தின் பிடியில் அகப்பட்டு சின்னாபின்னமாகிப் போகிறார்கள். சமூகத்தைக் கட்டிக் காக்க வேண்டிய வரலாற்றுத் தூண்கள் சபலம் காரணமாக எதிர்காலச் சமூகத்தையே கேள்விக் குறியாக்கியுள்ளன.

இன்றைய ஆண்களும், பெண்களும் அதிக அளவில் சந்தித்துக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அடுப்படியில் அடங்கிக் கிடந்த பெண்கள் கல்வி, தொழில் என்ற தேவைகள் கருதி சமூகத்தில் சம அந்தஸ்துடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் இன்றைய சசமூத்தில்பெண்கள்வெளியே வரவேண்டிய கட்டாயமும் இருக்கத்தான் செய்கின்றது. இவ்வாறு பெண்கள் சமூகத்தில் வரும்போது அவர்கள் ஆண்களுடன் பழகுவதற்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கின்றன.

இவ்வாறு வருபவர்களும் அவர்களுடன் பழகுவோரும் சபலத்தில் வீழ்ந்து விடுகிறார்கள். இப்படியான ஒரு சூழ்நிலையில்தான் சமூகம் கேள்விக் குறியாகின்றது.

சபலம் தீண்டியதும் அதனால் ஏற்படும் மனஉந்தலை நிறைவு செய்வதற்காகப் பலரும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுகின்றார்கள். அப்படி ஈடுபடும்போது பல சமூக சீர்கேட்டு விளைவுகள் தோன்றுகின்றன.

பெண் ஆணைப் பார்த்து சபலப்படுகிறாள். ஆண் பெண்ணைப்பார்த்துச் சபலப்படுகிறான்.

இந்த சபலத்தின் விளைவிலே நன்மைகள் சிலவும் தோன்றலாம். ஆனால் தீமைகளே அதிகமாகத் தோன்றுகின்றன.

சபலம் எல்லைமீறும்போது காமம் ஆரம்பமாகின்றது. காமத்தை போக்க சிலர் தவறான பாதைகளைத் தெரிவு செய்கிறார்கள். அப்போது தான் சபலம் சாபமாகின்றது.

ஆனால் சபலத்தின் வாயிலாக—காமத்தின் வழி—அது தோன்றும்போது அது சாபமாகின்றது. விளைவு, சமூகத்தைச் சாகடித்துவிடுகின்றது. தம்பதிகளாகும்போது (?) அவர்களது மண வாழ்க்கை மகிழ்வாக இருப்பதில்லை.

சபலத்தின் — காமத்தின் — வழிவந்த காதல் ''மோகம் முப்பது நாள்; ஆசை அறுபது நாள்'' என்பது போல விரைவிலேயே திகட்டி சலிப்பைத் தந்துவிடுகின்றது. அப்போது சபலத்தின் விளைவு, தனது சுயகுணங்களைக் காட்டி சாபத்துக்கு இட்டுச் செல்கின்றது.

சபலத்தின் பிடியில் சிக்கி இருக்கும் போது ''வரதட்சணை வேண்டாம்; நீ மட்டும் வேண்டும்!'' —எனச் சொல்லி திருமணம் செய்பவர்கள் கூட சபலம் தீர்ந்து போனதும் மண்ணெய் ஊற்றித் தீமூட்டுவதும், விஷம் கொடுத்து கொலை செய்வதும் சபலத்தின் சாபங்கள்தான்.

வக்கிரமான புத்தகங்களும், நீலப்படங்களும் இன்று மலிந்துவிட்டன. ஆண்கள் மட்டுமன்றி பெண்கள்கூட இன்று இவ்வாறான படங்களைப் பார்ப்பதிலும், புத்தகங்களைப் படிப்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் இவர்களையும் சபலம் தட்டிப் பார்க்கின்றது.

சபலத்தின் பிடியில் இன்று கல்லூரி மாணவிகளும், பாடசாலை மாணவிகளும் சுலபத்தில் சிக்கிவிடுகின்றனர்.

சபலத்தில் சிக்கிய இவர்களது கல்வி கனவாகிப் போகின்றது. சபலத்தை தீர்த்துக் கொள்ளும் நோக்கில் அவர்கள் சிந்தனை, செயல் அனைத்தும் அத்திசையில் மும்முரமாகி விடுகின்றது.

இப்படியான ஒரு சூழ்நிலையில் இவர்களின் எதிர்காலம் எங்கே போகின்றது?

கற்போடு வாழ்ந்த எமது குலப்பெண்களின் வாழ்வுப் போக்கு இன்று மாறிவிட்டது. சபலப்பட்டு, சபலப்பட்டு எமது பெண் குலத்தின் பெருமைகளை எல்லாம் குழிதோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

சபலத்தின் பிடியில் சிக்கியவர்கள் விலங்குகளுக்கு ஒப்பான வகையில் முறையற்ற உறவுகள், ஓரினச் சேர்க்கைகள் போன்றவற்றிலும் ஈடுபட்டு 'எய்ட்ஸ்' போன்ற கொடுமையான நோய்களைக் கூட விலை கொடுத்து வாங்கிப் பரப்புகின்றார்கள்.

சபலத்தின் பிடியில் சிக்கி அழிந்த அறிவாளிகளின் சரித்திரங்களை எமது புராணங்கள் கூறுகின்றன.

சாதனை படைக்கக் கூடிய பருவம் இளமைப் பருவமே. இந்த இளமைப் பருவத்தில் சாதனை படைக்காவிட்டால் நாம்மண்ணில் பிறந்ததற்கே அர்த்தமில்லாமல் போய் விடுகின்றது. சாதனை படைக்கும் எண்ணத்தையே சாகடித்து விடக்கூடியது சபலம். எனவே சபலம் சாகடிக்கப்பட வேண்டும்.

அதற்கு மனத்திண்மை

(XIஆம் பக்கம் பார்க்க)

## தேவைக்கு மிஞ்சிய திடீர் வீரர்கள்!

தூலசூக்கு மங்கள் துளைக்கவல்ல ஆற்றலுள்ள
வேலைகையில் கொண்டநல்லூர் வேல்முருகா—தாலேலோ
பாடக் கிடந்துறங்கும் பாலழைை ஆகினும் நீ
கூடாத சூரர் குலமறுத்து—ஓடோடி
ஆணவங்கள் கொல்லும் அருந்தொழிலை ஆற்றுவதை
நீநினைவாய் கொண்டாய் நிஜம்தானே—ஏனிதற்கு
தேவர்படை தேடிச் சிரமமுற்றாய்?; இம்மண்ணில்
தேவைக்கு மிஞ்சித் திடீர்வீரர்—சேவைக்கு
தோள்தட்டி நிற்பதுபோல் தோன்றுறதே; பார்த்தாயா
வாள்கத்தி பொல்திருக்கை வாலோடு—நாளுக்கு
நான்பெருகும் சேனையைநீ நாடித் துணைகொள்வேன்
காலெடுக்க ஒற்றைக் கரம்முறிக்க—மூளையொடு
மண்டை சிதறடிக்கும் மான மறவர்கள்
இங்கிருக்க ஏனோ இனித்துயரம்—உன்தேவர்
சேனைகளோ பெண்முன் செயலிழப்பர்; இங்கத்தே
சேனைகளோ பெண்முன்தான் சிறிநின்று—வான்பிடிப்பர்
மேலும் அரக்கரினை வேரறுக்க மூள்ளைமுள்ளால்
நீயெடுத்தல் தான்பொருத்தம்! நெஞ்சிருத்து—நாயகனே
வெண்ணெய் கரத்திருக்க வீணாக நெய்க்கலையும்
எண்ணத்தை மாற்று எடநல்லூர்—சண்முகனே
உன்வீதி தேடிவரும் உந்த மறவரினை
உன்சேவைக் காகஅழை என்றாலும்—ஒன்று
அடையாள அட்டையினை ஆம்! 'பேர்கள்' வைத்து
அடைக்காமல் வீடை வளவை— படலையினை
தாண்டப் பயப்படுவார் தானன்றி; வேறெந்த
சாண்டோ தொழிலும் சளைக்காது—நேசண்டிடுவார்
சோலி கரட்டுகளில் சோரா இவர்முன்னை
வாலியினை நான்கால் வகுத்து!?

— ச. முகுந்தன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தை இரண்டு வகைகளில் கலக்கிய

# முல்லைத்தீவில் அழிக்கப்பட்ட 'பிரின்ஸஸ் காஷ்'

இவ்வருடம் நல்லூர்த் திருவிழா பழைய களையுடன் சுமுகமாக நடைபெற்று முடிகிறது.

1990 ஆம் ஆண்டிலிருந்து ஷெல்லும் குண்டும் ஆலயத்தின் மீதும், தம்மீதும் வந்து விழுந்து விடுமோ என்ற பயத்துடனேயே பக்தர்கள் திருவிழாக் காலங்களிலும் வழிபாடியற்றினர். கடந்த இரண்டு வருடங்களும் இம்முறையும் வானத்திலிருந்து எமன் வருவானோ என்ற ஏக்கமின்றி முருகனை நிம்மதியாக, மன அமைதியுடன், பதற்றமின்றி வழிபடும் வாய்ப்பு உண்டாகியது. எல்லாம் நல்லூர் முருகன் திருவருளே என்று கந்தநேசன் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களையும் விட இம்முறை பக்தர் கூட்டம் அதிகமாகவே இருந்தது. போக்குவரத்தில் இருந்த பாதுகாப்புக் கெடுபிடிகள் ஓரளவு தளர்த்தப்பட்டிருந்ததால் வெளியூர்களில் இருந்தும் அடியார்கள் தடங்கலின்றி வந்தார்கள். நேற்று முன்தினம், வியாழக்கிழமை நடைபெற்ற தேர்த் திருவிழாவின் போது நல்லூரின் நான்கு வீதிகளிலும் அதிகாலை முதல் நண்பகல் வரை மக்கள் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. பக்தர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். முந்திய வருடங்கள் போல பறவைக் காவடிகள், பாத யாத்திரைகள், நடை பஜனைகள் என்று எங்கும் பக்தி சிறந்தது; மணத்தது.

## நல்லூரில் பூமாரி

தேர்த்திருவிழாவன்று நல்லூர் முருகன் வடக்கு வீதியில் வலம் வந்து கொண்டிருந்த வேளை, ஆகாயத்தில் மூன்று தடவைகள் வட்டமிட்டு வலம்வந்த வானஊர்தி ஒன்று கந்தபெருமானுக்கு உயரத்தில் நின்று மலர்தூவி அஞ்சலிசெய்தது. முதலாவது வட்டத்தின்போது தேருக்கு மேலாக அன்றிச் சற்றுத் தொலைவில் — மேற்குப்பக்கமாக — நல்லை ஆதீனத்தின் பின் பக்கத்தில் பக்தர்கள் கூட்டத்தின்மீது பூமாரி பொழியப்பட்டது. இரண்டாவது வட்டத்தின்போது தேருக்கு நேர் மேலாக பலவர்ண, தாமரை, ரோஜா மலர்கள் சொரியப்பட்டன. மூன்றாவது தடவை தேருக்குச்சற்று முன்னால் வானஊர்தி பூச்சொரிந்தது.

மூன்று வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண மண்மீது, மக்கள் மீது, ஆலயங்கள் மீது, துப்பாக்கி வேட்டும் குண்டுமாரியும் பொழிந்த வானஊர்தி (ஹெலி) வியாழக்கிழமை வீடுகள் மீதும், பக்தர்கள் மீதும் பூமாரி பொழிந்து சென்றது. அப்படி ஒருகாலம் இப்படி ஒரு காலம் என்று காலம் விரைந்து மாறியிருக்கிறது!

ஹெலியிலிருந்து பூமாரிபொழிந்ததும் மக்கள் பலவித கருத்துக்களையும் விமர்சனங்களையும் உடனேயே தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

முருகனின் தேர்வலத்துக்கு முன்னர் காலையில் மழை பன்னீர்தெளித்துச் சென்றது. இப்போது ஹெலி பூச்சொரிந்து செல்கிறது. முருகனின் சிறப்பும் அருளும் என்னே கவிஞன் பாணியில் வியந்தார் ஒருவர்.

அன்று குண்டுபோட்டுக் கொடுமை செய்த ஹெலி, இன்று எங்கள் கந்தனுக்கும் எமக்கும் மலர்சொரிந்து புஷ்பாஞ்சலி செய்துள்ளது. இன்றைய சூழ்நிலை தொடர வேண்டும் என்ற வேண்டுதலாக இருக்குமோ; என்றார் ஒருவர்.

அப்படியில்லை; நிலைமை இப்போதுள்ளதைவிடத் திருந்த வேண்டும் என்பதற்கான வேண்டுதலாகவே இருக்கும் இந்த மலரஞ்சலி என்றார் மூன்றாமவர்.

இப்பொழுது என்ன நிம்மதியாக, தொல்லை இல்லாமலா இருக்கின்றோம். இன்றைய நிலை திருந்தி மேலும் எங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் வர வேண்டும். அதன் பொருட்டுப் பூமாரி பொழியப்பட்டது என்று கொள்வதே பொருத்தம் என்றார் அடுத்தவர்.

குடாநாட்டின் நிலைமை, பழைய நிலைக்குத் திரும்பாது என்று என்ன உத்தரவாதம்? யாழ்ப்பாணம் வழமை நிலைக்கு இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டது என்பதற்கான அத்தாட்சி நிகழ்வே இது என்று அர்த்தம் சொன்னார் ஐந்தாமவர்.

முந்தி உரிய இலக்குத் தவறிக் குண்டு போட்ட பயிற்சியுடன் பூவையும் இடம் மாறிச் சொரிந்து செல்கிறது ஹெலி; பார்த்தீர்களா? பழக்க தோஷம் போலும் என்று நகைச்சுவை கலந்து கூறினான் இளைஞன் ஒருவன்!

நிலைமை அடிக்கடி மாறும்; விட்டு விட்டு மாறும்; சில காலத்துக்குப் பின்னர் மாறும். எங்கள் விவகாரத்துக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்ட பின்னரே நிலைமை நிரந்தரமானது என்று சொல்லலாம். அப்படி ஒரு நிரந்தரம் எப்போது வரும் என்று கூற இயலாது. ஆனால் இப்போதைக்கு, இரண்டொரு வருடங்களில், வரமாட்டாது என்பது மட்டும் நிச்சயம் என்று கூறி அரோகராவும் சொன்னார் ஏழாமவர். வான ஊர்தியும் பறந்து போனது; விமர்சனம் செய்த பக்தர்களும் ஒவ்வொருவர் ஒவ்வொரு திசையாக மாறிச் சென்றனர்.

ஆலயச் சுற்றாடலில் தாக சாந்தி நிலையங்களுக்கு, தண்ணீர்ப் பந்தல்களுக்குக் குறைவில்லை. காலையில் மழை பன்னீர் தெளித்துச் சென்ற பின் மந்தாரமும், வெயிலுமாக மாறி மாறி மக்களை நனைத்து எடுத்தன. சுவாமி தேரிலிருந்து இறங்கி வசந்த மண்டபத்தை அடைந்ததும் வெளியே வந்த பக்தர்கள் தாகம் தீர்க்க பந்தல்களை நாடினர். மேற்கு வீதியில் அமைந்த துர்க்கா மணி மண்டபத்தில் பத்து மணிக்கே அன்னதானம் ஆரம்பமாகியது. அள்ளக் குறையாத அமுதசுரபியாக அன்னாகாரம் தொலைவில் இருந்து, வெளியூர்களில் இருந்து வந்த பக்தர்களின் களைப்பு, பசி

## அதிகாரிகளின் அவசரத்தனம்; நஷ்டஈடு கிடைக்குமா?

நீங்கியது. முருகன் மகோற்சவம் தொடங்கிய நாளில் இருந்து இந்த அறப்பணி ஒய்வின்றி நடக்கிறது. நகர வர்த்தகர்கள் பலரும் தாமாக நேரில் சென்று அன்னதானப் பணிக்கு உணவுப் பொருள் உதவினர்.

### வர்த்தகரின் வேதனை

இந்த அறப்பணிக்கு உதவிய வணிகர்கள் சிலரும் ''பிறின்ஸஸ் காஷ்'' கப்பலில் பொருள்களை ஏற்றிப் பெரும் இழப்பைச் சந்தித்தவர்கள். கடந்த வாரம் யாழ்ப்பாணத்தை கலக்குக் கலக்கிய செய்தி ''பிறின்ஸஸ் காஷ்'' கடத்தலும், அழிப்பும் தான்.

''பிறின்சஸ் காஷ்'' கப்பலை முல்லைத்தீவுக் கடலில் வைத்து விமானப்படை விமானங்கள் குண்டு வீசி அழித்ததால் குடாநாட்டைச் சேர்ந்த சுமார் 450 வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் பலர் சிறு தர வர்த்தகர்கள்.

கப்பல் அழிக்கப்பட்டுவிட்டது என்ற செய்தி அறிந்த வர்த்தகர்கள் அடைந்த அதிர்ச்சியும், வேதனையும் சொல்லுந் தரமன்று. தமக்கு ஏற்பட்ட இழப்பைத் தாங்கமுடியாதவர்களாக, தமது தொழிலைத் தொடர முடியுமோ என்ற கவலையுடன் அவர்கள் அவதிப்பட்டார்கள்.

அரசாங்க அதிபர் அலுவலகம், தமிழ்க் கட்சிகளின் அலுவலகங்கள், பத்திரிகை அலுவலகம் என்று ஒரு நாள் முழுவதும் உணவும் இன்றி அங்கும் இங்குமாக ஓடித்திரிந்தார்கள். தமக்கு ஏற்பட்ட இழப்பின் வேதனைக்கு மேலதிகமாக அரசாங்கமும், கொழும்பில் உள்ள சிங்களப் பத்திரிகைகளும் தம்மீது சுமத்திய குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மனங்களை வேகவைத்தன என்பதனை உணர முடிந்தது.

அரசாங்கத்தின் கூற்று, தமது இழப்புகளுக்கு நஷ்ட ஈடு எதுவும் வழங்காமல் மறுப்பதற்கான தடைக்கல்லாக இருக்கப்போகிறது என்ற அச்சமும் அவர்களிடம் மேலோங்கி இருந்தது.

அதனால் அவர்கள் தமக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை [illegible] பொருட்டு, உண்ணாவிரதம், கடையடைப்பு ஆகிய போராட்டங்களை நடத்தினர். தமக்கு உதவுமாறு, நீதி கிடைக்க உதவுமாறு, தமிழ்க் கட்சிகளையும் கேட்டனர்.

''பிறின்ஸஸ் காஷ்'' கப்பலில் ஏற்றப்பட்ட பொருள்கள்—பதிவுசெய்யப்பட்டவர்த்தகர்களால்பொருள்கள் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டு, துறைமுக அதிகார சபையின் சட்டவிதிகளுக்கு ஏற்ப (பாதுகாப்பு அமைச்சின் அனுமதியும் பெறப்பட்டு) கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றப்பட்டவையாகும்.

அந்தக்கப்பலில் ஏற்றப்பட்ட கட்டடக் கூட்டுத்தாபனப் பொருள்களுக்குக் காப்புறுதி வசதி இருந்த போதிலும், யாழ். வர்த்தகர்களின் பொருள்கள் காப்புறுதி செய்வதற்கு வசதி இருக்கவில்லை. இத்தகைய ஒரு பின்னணியில் கப்பல் அழிப்பினால் ஏற்பட்ட இழப்புக்கு நஷ்டஈடு வழங்காதிருக்கும் நோக்குடன் சில தகவல்கள் அரசதரப்பால் வெளியிடப்பட்டமை ஏற்புடையதல்ல. அழித்த (இதனை அரசே உத்தியோகபூர்வமாக அறிவித்தது) பொருள்களுக்கு நஷ்டஈடு வழங்குவதே நீதி.

கப்பலில் கொண்டு வரப்பட்ட வேளை அரசால் அழிக்கப்பட்ட பொருள்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழ்க்கட்சிகளும் ஆதரிக்கின்றன.

ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும், யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனும் பொருள்களை இழந்த யாழ். வர்த்தகர்களுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுப்பது தொடர்பாக ஜனாதிபதியை தனித்தனியே நேற்று முன் சந்திப்பதாக இருந்தது. எனினும் சந்திப்புகள் ஒத்திவைக்கப்பட்டு விட்டன.

எமக்கு உண்டான இழப்புக் குறித்து தம்மால் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளையே செய்ய முடிந்தது. இதற்கு மேல் நாம் என்ன செய்ய முடியும்—என்று பாதிக்கப்பட்ட வர்த்தகர்களில்ஒருவர் கேள்வியுடன் கருத்துத் தெரிவித்தார்

### இருபக்க நீதி

யாழ்ப்பாணத்து வர்த்தகர்கள் தமக்கு உண்டாகும் நஷ்டங்களையும், இழப்புக்களையும் விரைவில் சம்பாதித்து விடுவார்கள் என்ற கருத்து யாழ். மக்களிடம் — பாவனையாளர்களிடம் — உண்டு. தவிச்ச முயல் அடிப்பது போல சந்தர்ப்பம் பார்த்

## உள்ளும் புறமும்

குறுமுனி

துப் பதுக்கல், கொள்ளை லாபம் அடிப்பதில் யாழ். வர்த்தகர்கள் சூரர்கள். செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்குவதில் அவர்களுக்கு நிகர் அவர்களே என்று மக்கள் தமக்குள் பேசிக்கொள்வதைக்கேட்க முடிகிறது. மக்களின் இந்தக் கருத்தை ஊர்ஜிதம் செய்பவர்கள் போல, குடாநாட்டு வர்த்தகர்கள் கப்பல் குண்டுவீசி அழிக்கப்பட்ட அடுத்த நாளே பொருள்களைப் பதுக்கினார்கள்; விலைகளை அதிகரித்துக் கொள்ளை லாபம் அடிக்க முயன்றனர். உணவுப் பொருள்கள் தாராளமாகக் கையிருப்பில் இருப்பதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், இராணுவ உயர் அதிகாரிகளும் பத்திரிகை மூலம் அறிவித்துக் கொள்வதற்கு முன்னரே சீனி, மா போன்ற உணவுப்பொருள்களுக்கு மக்கள் கடைக்குக் கடை படி ஏற நேர்ந்தது.

இந்த வகையில் நியாயமற்ற முறையில் பாவனையாளர்களை வர்த்தகர்கள் சூறையாடக்கூடாது. வர்த்தகர்கள் அரசிடம் நீதி வழங்கக் கோருகிறார்கள். அதே நீதியைப் பாவனையாளருக்கு வழங்க [illegible] என்பது அவர்கள் கோரிக்கையாக இருக்கிறது. இது குறித்து வர்த்தகர்கள், வர்த்தகர்களின் சங்கங்கள் ஆழ்ந்து சிந்தித்து நீதி வழங்க முற்படவேண்டும். நீதி ஒரு பக்கத்துக்கு மட்டும் என்று இருக்க முடியாதல்லவா?

கடந்த வாரத்தில் கப்பல் அழிப்பு யாழ்ப்பாணத்தைக் கலக்குக் கலக்கியது போலவே உள்ளூர் வர்த்தகர்களின் பதுக்கல், கொள்ளைலாபமும் மக்களைக் கடுமையாகக் கலக்கியது.

### தற்கொலை செய்வதை விட....

பாதிக்கப்பட்ட சிறுதர வர்த்தகர்கள் பலரின் நிலையும் கவலை தருவது என்று கூறியிருந்தோம். அவர்களில் சிலர் தெரிவித்த விவரங்களை தொகுத்துத் தருகிறோம்.

க. கணேசன் (26 வயது கொட்டடி) என்ற வர்த்தகர் தமது இழப்புப் பற்றி கூறியதாவது:-

நான் வன்னியிலிருந்து மீளக்குடியேறி 4 மாதங்களாகின்றன. தொழில் இல்லாத நிலையில் எனது சகோதரியின் சீதனத்துக்கென வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த எட்டு லட்சம் ரூபாவை எடுத்து மோட்டார் சைக்கிள் வியாபாரத்துக்காக செலுத்தி கொழும்பிலிருந்து குறிக்கப்பட்ட கப்பலில் மோட்டார் சைக்கிள்கள் எடுத்து வவந்தேன்.

இந்தக் கப்பல் அழிக்கப்பட்ட செய்தியறிந்த நான் தொடக்கம் செய்வதறியாது ஏங்கிக் கொண்டிருக்கின்றேன். இந்த இழப்பை என்னால் தாங்க முடியாமலுள்ளது. நஷ்டஈடு கிடைக்காது விட்டால் தற்கொலை செய்வதைவிட என்னால் ஒன்றும் செய்ய முடியாது — என்று விரக்தியுடன் கூறினார்.

க. நந்தகுமார் (42 வயது) என்ற வர்த்தகர் சொன்னார்:-

முல்லைத்தீவுக்கடலில் அழிக்கப்பட்ட கப்பலில் எடுத்துவரப்பட்ட பொருள்களில் 1 கோடியே 92 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை இழந்து விட்டேன். கடன்பட்டும், வட்டிக்கு பணம் எடுத்தும் தான் இந்த பொருள்களை கொழும்பில் கொள்வனவு செய்தேன். தற்பொழுது ஒருகோடியே ஐம்பது லட்சம் ரூபாவுக்கு கடனாளியாகி விட்டேன் — என்றார் கவலையுடன்.

சி. முருகானந்தம் (28 வயது என்ற வர்த்தகர் கூறியதாவது: நான் சிறிய வியாபாரம் செய்து வருகிறேன். 49 லட்சம் ரூபாவுக்கு கடன் பட்டு பொருள்களை ஏற்றினேன்.

சொந்தக் கடையில்லை; சொந்த வீடில்லை என்ற நிலையிலிருந்த போதும் இந்த வியாபாரத்தினால் முன்னேறலாம் என்றிருந்தேன். எனது கனவுகள், கற்பனைகள் யாவும் கானல் நீராகிவிட்டன. இந்த இழப்புக்கு நஷ்டஈடு கிடைக்காது விட்டால் என்னால் மனிதனாக வாழ முடியாது—என்றார் சோகம்ததும்ப.

எஸ். புஸ்பராஜா (39 வயது) என்ற வர்த்தகரின் நிலை இது:-

நான் 1990 ஆம் ஆண்டு குவைத்தில் வேலை செய்ததற்கான நஷ்டஈடு கிடைத்தது. அந்தப் பணத்துடன் மேலும் உறவினர்களிடம் கடன் பெற்று 3 ஒட்டோ வண்டிகளை கொள்வளவு செய்து கப்பலில் அனுப்பி வைத்தேன்.

அவற்றை இன்று இழந்த நிலையில் என்ன செய்வது என்று முடிவெடுக்க முடியாது திண்டாடுகின்றேன்.

எனது வீடு இரு தடவைகள் அழிக்கப்பட்டன. இன்று வீடற்ற நிலையிலும் நம்பிக்கையுடன் இத்தொழிலில் கால் வைத்தேன் — என்றார்.

இராசையா வெள்ளியம்பலம் (53 வயது)—சங்கரத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த விவசாயியான இவர் தமக்கு 3 உழவியந்திரங்கள் இந்தக் கப்பலில் கொண்டு வரப்பட்டதாகவும் கப்பல் அழிந்துள்ளதால் 20 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.

### அரச அதிகாரிகளின் அவசரத்தனம்

இப்படிப் பலரும் தமது நஷ்டங்களை விவரித்தனர். அவற்றை எழுதினால்ஒரு தனிக் கட்டுரையாக விரியும்.

'பிரின்ஸஸ் காஷ்' கப்பல் விவகாரத்தில் அரசாங்க அதிகாரிகள் அவசரத் தனமாகவும், சமயோசிதம் அற்ற முறையிலும் நடந்து கொண்டனர்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலும் உள்ளமும் நலந்தானா?

பகுதி 2

மார்புவலி —மாரடைப்பு போன்ற ஆபத்தான நிலைமைகளுக்கு மனிதனை இட்டுச் செல்லும் காரணிகளை நீண்ட காலமாக மருத்துவ உலகம் ஆராய்ந்து வந்திருக்கின்றது.

இருபதாம் நூற்றாண்டில் ஆரம்ப காலத்தில் இத்தொல்லை மனிதனைப் பலிகொள்வது அதிகம் கண்டுபிடிக்கப் பட்டது. 1920 களில் தொடங்கி அதிகரிப்பைக் காட்டிய இது, அமெரிக்காவில் 1960 வரை குறையவேயில்லை. பின்னர் மார்புவலியின் தாக்கம் மக்களிடையே சற்றுக் குறைவுபடத் தொடங்கியது எனலாம்.

உணவுப் பழக்கங்கள், புகைத்தல், மதுபானம், வேலைப்பளு, மனச்சுமைகளும் உளைச்சலும் போன்ற காரணிகள் இதனுடன் தொடர்புபட்டதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்தது. படிப்படியாக இவை பற்றிய அறிவுறுத்தல்கள் வெளியானபோது ஓரளவுக்கு எச்சரிக்கையாக வாழப் பலரும் பழகிக்கொண்டமையும் வைத்திய வசதிகளில் ஏற்பட்ட முன்னேற்றமும்தான் 1960 களில் இதன் தாக்கம் குறையக் காரணமாகியது எனலாம்.

என்றாலும் எவரை, எப்போது, எப்படி மார்புவலி வந்து தாக்கும் என்பதைச் சரிவர எதிர்வுகூற இயல்வதில்லை. இதைத்தான் விதி என்பதா?

உயர் இரத்த அழுத்தம், அதிகரித்த கொழுப்பு (கொலஸ்ரோல்) மட்டம் போன்றவற்றில் எச்சரிக்கையாக இருப்பதுடன் அடிக்கடி வைத்தியப் பரிசோதனைகளை மேற்கொள்வதும் சிறந்தது.

வைத்திய ஆலோசனை இன்றிக் கடுமையான மருந்துகளைப் பாவிப்பதும் இருதயத்தையும் பிற உடல் உறுப்புக்களையும் பாதித்துவிடும்.

அதிகம் கொழுப்புள்ள உணவுகளையும் அதிக உப்பையும் தவிர்ப்பதுவும், உடல் எடையை அதிகரிக்காமல் கண்காணிப்பதும் முக்கியமாகிறது. ஓரளவுக்கேனும் தினமும் தேகப்பயிற்சி செய்வது சிறந்தது.

குடும்பத்தோடு மகிழ்ச்சியாகக் காலங் கழிப்பதும், ஆறுதலும், இதமான தூக்கமும்கூட உடல்நிலையைத் தக்கவைக்க அவசியமாகின்றன.

மனது அமைதி காணாமல் குடைந்து குடைந்து தவிக்கிறது என்றால் அதைக் கட்டுப்படுத்தி ஆளத்தான் வேண்டும். உங்களுக்கு இருதய நோய் இருக்கும் சாத்தியம் உண்டா என நீங்களே ஆராய வேண்டின் பின்வரும் கேள்விகள் அதற்குத் துணை நிற்கும் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இவற்றில் பலகேள்விகளுக்கு நீங்களே 'ஆம்' என விடை கண்டால் நீங்கள் எச்சரிக்கையாக வாழப் பழக வேண்டும் என்பதுதான் உண்மை.

★ நீங்கள் பிரயாணம் செய்யும் வாகனம் நீங்கள் போய்ச் சேரவேண்டிய இடத்திற்கு முன்னதாக இடையிடையே தரிக்கும்போது ஏனையவர்களை விட அதிகம் நீங்கள் தவிக்கிறீர்களா?

★ சிறு சிறு எரிச்சலூட்டும் சம்பவங்கள்கூட உங்களைப் பெரிதாக அலட்டிக் கொள்ள வைக்கின்றனவா?

★ அத்தகைய சிறு விடயங்கள் உங்களை விரக்தியின் விளிம்புக்கு இட்டுச் செல்கின்றனவா?

★ அடுத்தவர்களின் திறமையும் முன்னேற்றமும் அவர்களை வாழ்த்துவதற்குப் பதிலாக உங்களைப் பொறாமைப் பட வைக்கிறதா?

★ ஆளுக்கு 5 லீற்றர் எண்ணெய் வாங்க வரிசையில் நிற்கும் போது எவருக்காவது 6 லீற்றர் கொடுக்கப்படுகிறதா என ஆராய்வதில் முனைப்பாக இருக்கிறீர்களா?

★ உங்களுக்கு மீதிப்பணம் தருபவர் குறைத்துக் கொடுத்து விட்டால் எடுத்த எடுப்பில் அவரைச் சந்தேகம் கொள்கிறீர்களா?

★ உங்கள் வாகனத்தை எவராவது முந்தி விலகிச் சென்று விட்டால் அவரைக் கலைத்துப் பிடித்து முந்திவிட்டுத்தான் நிம்மதி அடைகிறீர்களா?

★ வாகன வரிசையில் காத்து நிற்கும் போது ஒலி எழுப்பியும் — பகலில் 'லைட்' போட்டும் — முன்செல்லத் துடிக்கிறீர்களா?

★ கோபம் வரும்போது எவரையாவது திட்டித்தீர்க்க வேண்டும் போல — அல்லது எதையாவது அடித்து நொருக்க வேண்டும் போல — துடிக்கிறீர்களா?

★ அடுத்தவர் நேரத்திற்கு கருமம் ஆற்றத் தவறினால் நீங்கள் பொறுமை இழந்து தவிக்கிறீர்களா?

★ நீங்கள் எதிர்பார்ப்பது போலத்தான் உங்கள் சுற்றமும் நண்பர்களும் நடக்க வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருக்கிறீர்களா?

இப்படியான பல கேள்விகளை ஆய்வாளர்கள் கேட்டுப்பார்க்கிறார்கள். கூடுதலான கேள்விகளுக்கு 'ஆம்' என விடை தருபவர்களின் இருதயப் பாதிப்பு வீதமும் கூடுதலாக உள்ளதாகவே கருதப்படுகிறது.

அப்படியானால் நீங்கள் எப்படி வாழப் பழகினால் இதயம் ஆரோக்கியமாக இருக்கும் என்பதை இனியும் சொல்லித்தரத் தேவையில்லை.

அடுத்து வாழ்க்கையில் எவ்வளவு தூரம் திருப்தியோடும் மகிழ்ச்சியாகவும் இருக்கின்றீர்கள் என்பதைக் கண்டு கொள்ளுங்கள். அதுவும் கூட ஆரோக்கியத்துக்கு வித்திடத்தானே செய்யும்?



தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே...!

பிறப்பில் இருந்து இன்றுவரை உங்கள் வாழ்க்கை அமைந்த விதத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். வாழ்வின் ஒவ்வொரு கட்டத்தையும் தாண்டி வந்தபோது அது இனிப்பாக இருந்ததா? அல்லது சுமையாக இருந்ததா?

வாழ்க்கையை அனுபவிக்க முடிந்திருக்கிறதா அல்லது வேதனைகளும் சோதனைகளும் உங்களை ஆட்டிப் படைத்தனவா? இன்று உங்கள் நிலைமை—உங்கள் எதிர்பார்ப்புகளுக்குத் திருப்தி தருகிறதா?

அதுவேண்டும் இதுவேண்டும் என ஆலாய்ப் பறக்கிறீர்களா? அல்லது கிடைத்ததெல்லாம் திருப்தி என நிம்மதியாக இருக்கிறீர்களா? மனதை ஆட்டும் ஆசைகளால் நிம்மதியைக் கெடுக்கிறீர்களா? அடுத்தவரைப்போல வாழவேண்டும் எனத் தவிக்கிறீர்களா? அல்லது அடுத்தவர்களை விட உங்கள் வாழ்க்கை பரவாயில்லை எனத் திருப்திப்பட்டுக் கொள்கிறீர்களா?

## மனத் திருப்தியும், அமைதியும் அதற்கு மிக அவசியமானவை

இத்தகைய கேள்விகள் உங்கள்மனச் சமநிலைக்கு விடைதரும். போதுமென்ற மனமும் திருப்தியான தன்மையும் இருந்தால் மகிழ்ச்சி தானாகவே குடிவந்து மனதை நிறைத்துவிடும். வாழ்வில் தொல்லைகள் அதிகம் இருக்கா. நோய் நொடிகள் கூட அதிகம் வந்து வாட்டா.

**மு. சிவநேசன்**

எவர் எப்போது உலகில் அதிகம் மகிழ்ச்சியை அனுபவிக்கமுடியும் என்ற கேள்விக்கான விடைகளை ஆய்வாளர்கள் தொகுத்துத் தந்திருக்கிறார்கள்.

★ மகிழ்ச்சி என்பதும் இன்பம் என்பதும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம அளவில்தான் இருக்கிறது. எனவே துன்பம் வந்தாலும் அப்படித்தான். ஒரு வேளை பெண்கள் அழுது தொலைக்கும்போது ஆண்கள் மனதுக்குள் அடக்கித் துன்பத்தை ஜீரணிக்க முயலக் கூடும்.

★ பலரும் வாலிபவயது — இளமைக் காலம் இனிமையானது எனக் கற்பனை பண்ணக்கூடும். ஆனால் எந்தவயதிலும் அந்தந்தப் பருவத்துக்கு ஏற்ற ஆசைகள் மாறுபடலாமே தவிர—அவையவை நிறைவேறும்போது இன்பமாகத்தான் இருக்கும்.

எனவே குழந்தை என்றாலென்ன —இளமை என்றாலென்ன— முதுமை என்றாலென்ன அவ்வப்போது நினைப்பதெல்லாம் சரியாகப் போய் விட்டால் இன்பம் உச்சம்தான்; தப்பினால் துன்பம் துயரமும்தான். நிலைமையை மனதை ஆளும் பக்குவம் வராதபோது என்றும் எவருக்கும் நிம்மதி கிட்டுவதில்லை.

★ ஏழை நினைக்கலாம் வசதியானவன் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறான் என்று. கூழைக்குடித்து குடிசையில் வாழும் இன்பம் மாடமாளிகையில் கிடைக்காமற் போகலாம். தூக்க மாத்திரை போட்டும் உறக்கம் வராதவருக்கு வசதி வாய்த்தென்ன லாபம்?

அப்படியானால் — ஏழை பணக்காரன் இருவரையும் எடுத்துக் கொண்டால் எவர் அதிகம் இன்பமாக—மகிழ்வாக—இருக்கிறார்கள் என்ற கேள்வி அர்த்தமற்றது. இக்கரைக்கு அக்கரை பச்சை.

★ திருமணமானவர்கள் குடும்பம், குழந்தை, குட்டியென்று குதூகலமாக இருப்பதாகத் தனித்தவர்கள் கற்பனை பண்ணுகிறார்கள். குழந்தை உள்ளவர்கள் உலகினில் எல்லாம் பெற்று விட்டார்கள் எனக் குழந்தையில்லாதவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் நிம்மதி என்பதும் மகிழ்ச்சி என்பதும் மற்றவர்களிடத்தில் கிடையாது. அவரவர் மனத் திருப்தியிலும் பக்குவத்திலும்தான் அதைக் கண்டிடல் முடியும்.

ஆனால் ஒன்று மட்டும உண்மை. மகிழ்வாகவும் திருப்தியாவும் இருப்பவர்கள் ஆரோக்கியமாகத்தான் இருக்கிறார்கள்.

அவர்களை அல்சர் (Ulcers), உறக்கமின்மை (Insomina), நீரிழிவு (Diabetes), மார்புவலி (Heart attack), மூச்சு இழப்பு (wheezing) போன்ற வியாதிகள் தாக்கும் வாய்ப்புக் குறைவாகவே உள்ளன.

இதனால்தான் வாழ்க்கையில் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டியது மிக அவசியமாகிறது. அதற்கான சில உபாயங்களை அவரவர் தமது சூழலுக்கும் சக்திக்கும் ஏற்பத் தேடிக்கொள்ளவதே சிறந்தது.

★ அன்றாடம் வாழ்க்கையை அனுபவிக்கக் கற்றுக்கொள்வது நல்லது. ஏனோ தானோ என்று வாழாமல் ரசித்து வாழ்ந்தால் உங்கள் கண் முன்னே தோன்றுவதெல்லாம் இன்பமயமாகத்தான் தெரியும்.

குழந்தையின் சிரிப்பிலும், அடுத்தவருக்கு உதவுவதிலும், இயற்கையை ரசிப்பதிலும், தினசரி நிகழ்வுகள் பலவற்றிலும் திருப்திகாணப் பழகிவிடுங்கள்.

★ எதையும் எதிர்மாறாகச் சிந்திப்பதை (Negative Approach) தவிர்க்கப் பழகவேண்டும். நிகழ்வுகளை ஆமோதித்து ஏற்கப் பழகும் மனப்பக்குவம் மகிழ்ச்சியைத் தரும்; சூழ உள்ளவரையும் திருப்திப்படுத்தும். 'ஊரோடு ஒத்து ஓடு!?' என்று இதைத்தான் சொல்வார்கள். அதைவிடுத்து தனித்து நின்று சவால் விடாதீர்கள்.

★ நேரம் பொன்னானது. அதற்காக ஒரு செக்கனையும் வீணாக்காமல் நாள் முழுவதும் கருமம் ஆற்றினால் சலிப்புத் தட்டத்தான் செய்யும். நீண்ட நேரம் படிப்பவர்கள் மனதுக்கு ஆறுதல் கொடுக்க வேண்டின் குறித்த நேரம் முடிவடைய பாடங்களை மாற்றி மாற்றிப் படிப்பது தெம்பு கொடுக்கும். தொடர்ந்து ஒரே வேலையைச் செய்யாது வேலையின் தன்மையை இடையிடையே மாற்றிக்கொண்டால் சலிப்புத்தட்டாது. அப்போது உடல் உறுப்புகளுக்கும் சிந்தனைக்கும் தொடர்ச்சியாக ஒரே விதமான பளுவோ தாக்கமோ ஏற்பட வாய்ப்பு இருக்காது.

★ நண்பர்களோடும் நல்ல சுற்றத்தோடும் மனம் கலந்து நெருங்கிப்பழகுபவர்கள் நிம்மதியாகவே இருக்கிறார்கள். அவர்களது மனச்சுமைகளைத் தாங்கவும் பகிர்ந்துகொள்ளவும் அருகில் எவராவது இருப்பதே அதற்குக் காரணம். தனித்தவர்கள் தவித்துவிடுகிறார்கள்.

★ சந்தோசமும் சிரிப்பும் முகத் தசைகளுக்கும் மூளைக்கும் ஆறுதலையே தருகின்றன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. முகத்தைக் கடுப்பாகவும் இறுக்கமாவும் வைத்திருக்க முயலும்போது பதற்றம் அதிகரிக்கிறது; குருதி அமுக்கம் கூடுகிறது.

எனவே செய்கிற காரியத்தை மகிழ்வுடன் ஆற்றப் பழகிவிட்டால் உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆறுதல்.

★ வாழ்வில் துடிப்புடனும் சுயமுயற்சியுடனும் நிறைவாக இருந்தால் திருப்தி அதிகமாகவே இருக்கும். நோய் நொவு இன்றிக் கழிந்துவிடும். உடலுக்கும் வேண்டிய பயிற்சிகள் இயல்பாகவே கிட்டும்.

★ மனதுக்கும் உடலுக்கும் போதிய ஓய்வும்கூட கொடுப்பது இன்றியமையாதது. ஓய்வு ஒழிச்சல் இன்றித் தினமும் பறப்பது உடலைக் கெடுத்து விடும். உள்ளமும் நிம்மதி காண இயலாமற் போய்விடும்.



உடலழகை மட்டுமல்லாமல் உங்கள் உள அழகையும் உங்கள் மனக் கண்ணாடியிலேயே ஒரு தரம் தரிசித்துப் பாருங்கள்!

★ மனதுக்கு நிம்மதிவேண்டித்தான் பலரும் இறைவழிபாட்டில் இறங்குகிறார்கள். அந்த வழிபாடு அவர்களின் மனதுக்குத் தெம்பு தரும் வரை — அவர்களின் நம்பிக்கை மனதில் நிலைத்திருக்கும் வரை—நிம்மதிநிலைக்கத்தான் செய்யும். அதில் இரு கருத்துக்களுக்கு இடமேயில்லை. தெய்வமும் மனதிலேதான் இருக்கிறது.

கடவுளிடம் நம்பிக்கை கொண்டவர் தமது கவலைகளை அங்கே சொல்லி அழுகிறார்கள். மனப்பாரம் குறையத்தான் செய்யும். சமய ஆசாரம் கற்றுத் தரும் நல்ல பழக்க வழக்கங்கள் வாழ்க்கையைச் செவ்வனே செலுத்த உதவும். இவர்கள் போதைப் பொருள் பழக்கங்கள், மண முறிவுகள், தற்கொலை, கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற செயல்களைப் பாவம் என்று ஒதுக்கி விடுகிறார்கள். இதனால் அடுத்தவருக்கும் தொல்லைகள் குறைவு.

ஆனால் வழிபடப் போன இடத்தில் போட்டி, பொறாமை, ஆரவாரச் செலவுகள் எல்லாம்வந்து கொலை கூட விழுந்து விடுகிறது. அத்தகைய மதமூர்க்கமோ தீவிரமோ மனதுக்கு நிம்மதியைத் தரப்போவதில்லை. எனவே வழிபாட்டின் பயனும் கிட்டப் போவதில்லை. போட்டி போட்டுக் கொண்டு விழா எடுக்கும்படி எந்தத் தெய்வமும் வேண்டியதில்லை.

★ எனவே மகிழ்ச்சி என்பது மனதிலேதான் இருக்கிறது என்ற உண்மை பிறக்க வேண்டும்.

★ உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சந்தித்த நிகழ்வுகளை நீங்கள் கையாண்ட விதம் திருப்தியைத் தரவேண்டும்.

★ உங்கள் நியாயமான எதிர்பார்ப்புக்களை நீங்கள்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளர்ச்சிப் பருவமும் அப்பருவத்தினரிடையே எழும் மன எழுச்சிகளும்!

### பருவத்தின் பக்குவங்கள்

முதிர் பருவம் முடித்து வருவது தளர்பருவம். இப்பருவம் 55 வயது முதல் 65 வயது வரையுள்ள காலப் பகுதியைக் குறிக்கும்.

அரச அலுவல்களில் உள்ளோர் 55 வயதுடன் ஓய்வு பெற வேண்டுமென்பது நடைமுறையாகும். நல்ல உடல்நிலை மனநிலையோடு செயற்படக் கூடியவர்களுக்கு மேலும் அவர்களுடைய தகுதிக்கேற்ப 60 வயது வரை சேவை நீடிப்பு வழங்கப்படுகிறது. ஆளணிப் பற்றாக்குறை காரணமாகவும், ஒருவரின் சேவையும், தேவையும் கட்டாயமாகத் தேவைப்படும்போது, ஒப்பந்த அடிப்படையில் 65 வயதுவரை நீடிக்கப்படுவதுமுண்டு. பல்கலைக்கழகங்கள் சார்ந்த பதவிகளிலும் உயர் நீதிமன்றத்திலும் 65 வயது வரை சேவையில் இருக்கக்கூடிய வாய்ப்புத் தற்போது ஏற்பட்டிருக்கிறது. அரசியல்வாதிகளுக்கு இதுபுறநடையானது. செல்வாக்கைப் பொறுத்து கிழப்பருவத்தினரும் அரசியலில் வெளுத்துக் கட்டுகிறார்கள். "பாதத்திற்கும் பரிசு வைத்த"வனல்லவா இறைவன்? எனவே இவர்களுக்குப் பல்லாண்டு கூறுவோம். பதவிகளில் அமராத பாமரமக்களும் இப்பருவத்தில் உள்ளனரன்றோ!

"காற்றுள்ளபோதே தூற்றிக் கொண்டும்", "பருவத்தே பயிர் செய்தும்" அந்த அந்தந்தப் பருவங்களிலே அதற்கதற்குரியவாறு தொழிற்பட்டு வந்த தளர் பருவத்தினர், தம்பிள்ளைகளின் மண வாழ்க்கையையும் கண்டு, பேரன் பேர்த்திகளையும் நிறைவோடு தழுவி

"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது" (குறள்)

— என்று வாழ்கின்றனர்.

இவர்களை "கொடுத்து வைத்தவர்கள்" என்று ஏனையோர் புகழுவர். வள்ளுவர் வாய்மொழியில் "வாழ்வாங்கு வாழ்ந்தவர்" என்று கூறலாம், என்குடியினை உயரச்செய்வேன் என்று முயன்று நின்ற



இவர்களுக்குத் தெய்வம் கொடுக்குக் கட்டிக்கொண்டு வந்து நின்று உதவியிருக்கிறது. இவர்கள் "ஊழையும் உட்பக்கம்" கண்டு மெய்வருந்திக் கூலி பெற்றவர்கள். அல்ல! அல்ல!! உயிருக்கும் ஊதியம் பெற்றவர்களும் இவர்களேயாவர். இவர்களை அடியொற்றி எதிர்கால சமுதாயம் வாழ்வதாகுக!

முதிர் பருவத்தினரில் இன்னுமொருபகுதியினர் விதி விதி என்று சொல்லி வாழ்நாளின் வலியையும் வனப்பையும் அதன்மேற்போட்டு நாம் வறியேம் என்று சொல்லிச் சொல்லிச் சோம்பலோடு தேம்பித் திரிந்தவர்கள் கைப்பொருளைச் சேமியாது மற்றவரை நம்பியிருந்தவர்கள். இவர்களைப் பார்த்து "நிலம் என்னும் நல்லாள் நகும்" என்றார் வள்ளுவர். இவர்கள் வறுமையை வருவித்துக் கொண்டவர்கள். வெறுமையாகத் தளர்பருவத்திலிருந்து வேதனைப்படுபவர்கள். புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெற்றுக் காப்பதற்கும் வழி அறியாமல், கைவிடவும் மாட்டாமல், ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப்போல அகப்பட்டுக்கொண்டவர்கள். காலம் பிந்திய ஞானம் பிறந்தென்ன? பிள்ளைகள் வளர்ந்து பொறுப்புடையவர்களாக மலர்ந்து, அப்பன் வெட்டிய கிணறு என்று உப்புத்தண்ணீரைக்குடிக்காமல்— குடும்பத்தை விழுந்துவிடாமல் தாங்கி நிற்கும்

தூண்களாக—மாறவேண்டும். இந்த உறுதியை அவர்கள் நிச்சயம் எடுக்க வேண்டும். தந்தைதாயரை இந்தத் தளர்ந்த நிலையில் குறைசொல்லிக் குற்றமில்லை. நடப்பவை நல்லவையாக நடந்தேறட்டும்.

தளர் பருவத்தில் வரும் அடுத்த பகுதியினர் என்னதான் நடக்கட்டும் நடக்கட்டுமே என்று வாழ்ந்தவர்கள்; வாழ்பவர்கள். இப்படித்தான் வாழவேண்டுமென்றில்லாது எப்படியாவது வாழவேண்டுமென்று வாழ்ந்து வக்குக்கெட்டு நிற்பவர்கள். இவர்களுள் சிலர் தேகபலத்தை நிரந்தரமென்று எண்ணி அடாவடித் தனங்களில் ஈடுபட்டும் கூடா ஒழுக்கங்களில் மூழ்கியும் தேகபலம் கெட்ட போது தளர்ந்து சமுதாயத்தின் பழிப்பிற்கிடமாகி வாழ்கின்றனர். இன்னும் சிலர் பணம் பாதாளம் மட்டும் பாயும், பணமே வாழ்வு என்று செல்வவளத்தை நிலையென எண்ணி "அளவினால் ஆய ஆக்கம் அளவிறந்து ஆவதுபோல் கெட்டுப் போகவும்" பாடுபட்டுத் தேடிய பணத்தையும் பொருளையும் கள்ளரும் கபடரும் இயற்கைப் பேரழிவு

என்றும் பதினாறாய் வாழவும் வழியுண்டு; இதனைப் பின்வரும் பாட்டால் அறியலாம்.

"ஆண்டுபலவாக நரையிலவாகுதல்
யாங்காகியரென
வினவுதிராயின் மாண்ட என்
மனைவியோடு மக்களும் நிரம்பினர்
யான்கட்டளையர் என் இளைஞரும்
வேந்தனும் அல்லவை செய்யான"

மாண்புடை மனையாள், மதிப்புடைய மக்கள், தமையனோடு இன்புற்று வாழும் உடன் பிறப்புகள், அல்லவை செய்லா அரசன் — என்று இன்னபலவும் தலையிடியும், உளவேதனையும் ஒருவனுக்குத் தராத வேறு காரணிகளும் இருந்தால்அவன் மூப்பில்லாமல் வாழலாம். இவை சாத்தியமில்லாதபோது இளமையிலும் மூப்பு உடல் நிலையில் ஏற்பட்டுவிடுகிறது.

மன அழுத்தங்கள்—உடல் தளர்வுகளைக் கொடுப்பவை என்பதை நாம் பரவலாகக் காண்கின்றோம். இதற்காக செயற்கை அழகு செய்ய வேண்டுமா? அப்படிச் செய்தால் "கூந்திலர் தம்மைவேறு கோலம் வேறு" ஆகிவிடாதா? அன்றியும் செயற்கை ஒப்பனைகளும் செயற்கைச் சாயங்களும் உடல் ரீதியாக ஏற்படுத்தும் உபாதைகள் "சாயங்கழன்ற" பின்புதான் தெரியவரும். தளர்ச்சி தளர்ச்சிதான் என்பதை ஏன் நாம் ஒப்புக் கொள்ள மறுக்க வேண்டும்? வீரியம்

ஒப்பிட்டு அவர்களைக் குறை கூறுவது பொருத்தமற்றது. தனியாள் வேற்றுமைகள் ஒவ்வொரு செயற்பாட்டிலும் உண்டு.



தளர்ச்சிப் பருவத்திலுள்ள சமநிலை பேணுவோரில் நுண்மாண் நுழைபுலம் மிக்கோரும், ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோரும் உளர். படிப்பறிவு, பாட

களும், போரின் பேரழிவுகளும் அழித்துவிட "ஆவியோர நிலையிற் கலங்க" வாழ்கின்றனர். மற்றுமொரு வகையினர் பதவியில் இருந்து பவிசான வாழ்வு நடத்தி, அதிகார மேலாதிக்கம் செலுத்திப் பின்னர் பதவிகளில் இருந்து ஓய்வுபெற்ற பிறகு சமுதாயத்தால் வெறுத்தும் ஒதுக்கியும் தள்ளப்பட்டு—உளவியல் பாதிப்பு ஏற்பட்டு—சீர்மியம் குன்றி வாழ்கின்றனர். தாம்தாம் செய்த வினையைத் தாமே அனுபவிப்பவர்களை நாம் என்செய்வது? "பாவம் செய்யாதிரு மனமே! நாளைக் கோபம் செய்தே யமன் கொண்டோடிப்போவான்" என்றும் "வித்தாரமும் கடம்பும் வேண்டாம் மடநெஞ்சே" என்றும் வரும் சந்ததியினருக்காவது அறிவுரை கூறுவோம்.

### சிந்தனைகளும் போக்குகளும்

இனி பருவமும் உருவமும் மாற மாற அவ்வக்காலங்களில் சிந்தனைகள் மாறுவது போன்று உடலிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. நரை ஏற்படுவது, தசை சுருங்குவது, பல்லு விழுவது போன்ற மாற்றங்கள் ஏற்படுகின்றன. புறத்தோலில் ஏற்படும் இம்மாற்றங்களுக்கு இசைவாக்கம் தரும் வகையில் அகத்தே உள்ள உறுப்புக்களிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக பல்விழுதல்—கடின உணவுகளை உடல் ஏற்கத்தயாராக இல்லை என்பதை அறிவுறுத்துகின்றது. அப்படிக் கடினமான உணவுகளை, உட்கொண்டால் சமிபாடடைவதில் சிக்கலும், மலம் வெளியேறுவதில் தாமதமும் ஏற்படலாம். இதே போன்று தளர்பருவத்தில் வரும் ஒவ்வொரு அறிவித்தலும் இயற்கை எமக்கு விடுக்கும் எச்சரிக்கைகளாகும். இவற்றை உதாசீனம் செய்து தளர்பருவத்திலும் இளம்பருவத்தினர் போல இருக்க விரும்புவதும், அதற்காக செயற்கை ஒப்பனைகளை நடை, உடை பாவனைகளில் செய்து ஒரு தற்காலிக உஷாரை உண்டு பண்ண விரும்புவதுவும் எவ்வளவு பொருத்தமுடையது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அல்லாமலும் இந்தப்போக்குப் பலரை ஏமாற்றத்துக்குள்ளாக்கியும்விடுகிறது. அன்ன நடை நடக்கப்போய் தன்னடையும் கெட்டுவிடுகிறது.

நா. க. சண்முகநாதபிள்ளை

"குஞ்சி அழகும் கொடுந்தானைக்
கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு
நிலைமையால்
கல்வி அழகே அழகு"

—என்று கல்வி அழகையும் கண்ணியமான வாழ்க்கை நடையழகையுமே அழகாக நாம் கருதிநடக்க வேண்டும். குரூரமான தோற்றத்தையும், ஊனமுற்ற உடலையும் பெற்ற பலர் கல்வி அழகாலும் கண்ணியத்தின் அழகாலும் இருவரும் பொலிவும் உடையவராய்ப் போற்றிப்புகழ் பெற்ற வரலாறுகள் பலவுண்டு.

இருக்கு காரியம் செய்வேன் என்று பூச்சுடனும் பேச்சுடனும் நின்றால் "எல்லோரும் ஏறி இளைத்த குதிரையில் சக்கிடுத்தார் ஏறிச் சறுக்கி விழுந்த" கதையாகவும், "மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய"

> மனித வாழ்வில் பல்வேறு வளர்ச்சிநிலைப் பருவத்திலும் மனித பண்பியல்புகளை — நல்லது கெட்டதை — தனக்கே உரிய பாணியில் தொடராக விளக்கி வருகின்றார் இக்கட்டுரையாளர். அக்கட்டுரைத் தொடரில் ஆறாவது கட்டுரை இது.

கதையாகவும்தான் முடியும். எனவே தளர்பருவத்தினர் தாம் போமளவும் தக்கது இன்னது தகாதது இன்னது என எண்ணிப் பக்குவமாகத் தம்மை

அறிவு என்பவற்றிக்கு மேனாக இவர்களிடம் பட்டறிவும், பரஅறிவு அல்லது வானறிவும் உண்டு. பிறர்க்கென வாழும் பெரியார்களாகிய இவர்களைச் சார்ந்து உறக்கமும் காணாச் சுகம் அடைந்தோர் பலர். அரசியல் ஆத்மீகத்திலும், சமூகசேவையிலும் இவர்களை இனங்காணலாம். படியாத மேதைகளையும் இக்கூட்டத்தினரில் கண்டு கொள்ளலாம்.

இவ்வாழ்க்கையிலே புலனுணர்வுகளுக்கெல்லாம் தீனிபோட்டு ஆசைகளை நிறைவேற்றிப் புலன்வழிச் செல்வதை ஒடுக்கி, வாழ்வில் திருப்தி பெற்று ஆடித்திரிந்து, ஓடித்திரிந்து, தேடித்திரிந்ததையெல்லாம் விட்டுவிட்டு உலக சேமத்திற்காக இதயகுகை நடுவில் மனது லயம் அடைந்து உலகும், இறை உயிரும் ஒருபொருள் என்று உணர்ந்து, அதன் வசமாகி இவர்கள் வாழ்கின்றனர். இவர்கள் தெய்வீகமாந்தராவர். எல்லோரும் இந்த நிலை எய்துதல் அரிது. ஆனால் "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்பதற்கேற்ப அப்படியாக வர வேண்டுமென எண்ணுவதில் என்ன தவறு?

தளர் பருவத்தில் தெய்வீக ஈடுபாடு வருவது நல்லது. அது தளர்ச்

நெறிப்படுத்தினால் வளர்பருவத்தினர் அவர்களை அடியொற்றிப் பின்பற்ற வாய்ப்புகள் ஏற்படும்.

### ஒத்த இசைவாக்கமின்மை

தளர்பருவத்தினரில் சிலருக்கு உடல் தளர்ச்சியடைவதற்கு முன்னர் மூளை அல்லது மனம் தளர்ச்சியடைந்து விடுகின்றது. இன்னும் சிலருக்கு மூளை தளர்ச்சியடைவதற்கு முன்னர் உடல் தளர்ச்சி அடைந்து விடுகிறது. இதனால் ஒத்த இசைவாக்கம் இன்மையால் சமநிலைப் பிறழ்வுகள் ஏற்படுகின்றன.

முதலில் மூளைதளர்ச்சி அடைபவர்களில் உடல், உளஉணர்வுகளோடு மூளை ஒத்துப்போவதில்லை. இதனால் பதற்றம், பதகளிப்பு, சிந்தனையற்ற செயல்கள் உண்டாகின்றன.

மூளை தளர்ச்சியடைவதற்கு முன்னர் உடல் தளர்ச்சி அடைபவர்களின் நிலை இதற்கு எதிர்மாறாக இருக்கின்றது. சிந்தனைக்கும் மூளையின் உந்துதலுக்கும் உடல் செயற்பட முடியாமலிருக்கிறது. இதன் வெளிப்பாடாகக் கோபம், சசிப்பிளிமை உண்டாகிறது. இவற்றை உள்வாங்க முடியாமல் சூழ இருப்பவர்கள் தடுமாற நேரிடுகிறது. மேற்கூறியவற்றை மனங்கொண்டு சூழ இருப்பவர்கள் அவர்களுக்கு ஏற்றவாறு ஒத்துப் போவதே நல்லது. அவர்களைக் குற்றம் சொல்வதில் அர்த்தமில்லை. குறிப்பிட்ட சிலருக்குத் தளர்ச்சிப்பருவத்திலும் உடலும் மூளையும் ஒருங்கிணைந்து தொழிற்பட்டுச் சமநிலையுடையவர்களாக இருப்பர். இவர்களுடன் முன்னர் கூறியவர்களை

சிக்கு மனக் குளிர்ச்சியைத் தந்து உள்ளுணர்வின் எழுச்சியைத் தரும்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை
அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" — குறள்.

## மண்டேலாவின் கதை திரைப்படமாகுகிறது

தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா வாழ்கை வரலாற்றைச் சித்திரிக்கும் பிரம்மாண்டமான திரைப்படத்தை ரூ. 60 கோடி செலவில் தயாரிக்கிறார் ஜோஹன்னஸ் பேர்க்கைச் சேர்ந்த ஆனந்தசிங்.

மண்டேலா சமீபத்தில் தனது 80 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார். கடந்த 8 ஆண்டுகளாகத் தாம் காதலித்து வாழ்ந்துவந்த கிரேசியா மஷேலையும் அன்றைய தினம் திருமணம் செய்தார் மண்டேலா.

தனது வாழ்வின் பெரும்பகுதியைச் சிறையில் கழித்த மண்டேலா 90-ல் விடுதலையானார். பின்னர் அந்த நாட்டின் அதிபரானார். சிறையிலிருந்து வெளியே வந்த மண்டேலாவுக்கும் அவரது மனைவி வின்னிக்கும் இடையேமனத்தாங்கல் ஏற்பட்டு இருவரும் விவாகரத்துப் பெற்றனர்.

இந்த நிலையில் விமான விபத்தில் உயிரிழந்த மொசாம்பிக் அதிபர் சமோராவின் மனைவி கிரேசியா மஷேலுக்கும் நெல்சன் மண்டேலாவுக்கும் காதல் மலர்ந்தது. மண்டேலாவின் மனதில் இடம்பெற்றுவிட்டாலும் மஷேலுக்கு அவரது வாழ்க்கைத் துணைவியாகும் யோகம் இப்போது தான் வந்தது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்தம்

எனக்கு ரமணனின் போக்கு வெகு விசித்திரமாக இருந்தது. கல்லூரிக்கு வந்ததும் 'மச்சான்' என்று என் தோளைத் தட்டும் அவன் இன்று ஒன்றும் பேசாமல் போய்விட்டான்.

இவனுக்கு என்ன நடந்தது? வீட்டிலே குடும்பப்பிரச்சினை என நினைக்கலாம் என்றால் அவனுக்கு இன்னமும் திருமணமாகவில்லை. போதாக்குறைக்கு நன்கு வசதியானவனும்கூட. அவனது தகப்பனார் பெரிய வியாபாரப்புள்ளி. பணத்தை என்ன செய்வது என்று தெரியாமல் திகைப்பவர் அவர். ரமணன் ஒரேயொருபிள்ளை. இதனால் அவர் அவனைப் பற்றி அவ்வளவாக அக்கறை கொள்வது கிடையாது. அவன் போக்கிலேயே விட்டு விடுவார்.

நானும், ரமணனும் சிறு வயதிலிருந்து ஒன்றாகப் படித்து, ஒன்றாகவே பல்கலைக்கழகம் புகுந்து, நாம் கற்ற கல்லூரியிலே கற்பிக்கும் பேறுபெற்றவர்கள். நான் பௌதிகம் கற்பிக்கிறேன். அவன் கணிதம் கற்பிக்கிறான். அவ்வளவுதான் வித்தியாசம்.

ரமணன் கல்லூரிக்குக் காரிலே வந்துபோவான். காரணம் கேட்டால், பொழுதுபோக்கிற்காகக் கற்பிக்கிறேன் என்பான். கல்லூரியிலே சக ஆசிரியர்களுடன் கலகலப்பாகப் பழகுவான். அப்படிப்பட்டவன் இன்று 'உம்மென்று' போனால் காரணம் இல்லாமல் இருக்காது.

பிரார்த்தனை முடிந்ததை உணர்த்தும் மணியொலி கேட்டது. யோசனையுடன் எழுந்து வகுப்பை நோக்கி நடந்தேன். வகுப்புக்குள் நுழைந்ததும் மாணவர்கள் எழுந்து 'குட்மோணிங்' சொன்னார்கள். பின்வரிசை மாணவர்கள்எழாமல் அமர்ந்திருப்பதைக் கண்டேன். எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. இதே கல்லூரியில் இதே வகுப்பில் ஆசிரியர்களுக்கு நாம் செய்ததை இப்போது இந்த மாணவர்கள் எமக்குச் செய்கின்றார்கள்.

காலம் எவ்வளவுதான் மாறினாலும் கல்லூரிப் பண்பாட்டுக்கோலங்கள் மாறாமல் அப்படியே தொடர்கின்றன. வியப்பான பின்பற்றல் தான்!

சிந்தித்துக்கொண்டே கரும்பலகையில் 'சவுசின்' தேற்றத்தை எழுதி விளக்கப் படுத்திவிட்டு, ஒரு கணக்கினையும் செய்யக்கொடுத்து விட்டு அமர்ந்துகொண்டேன்.

வாசலில் நிழலாடியது. திரும்பிப்பார்த்தேன். ரமணன் நின்றுகொண்டிருந்தான். எழுந்து அவனருகே சென்றேன்.

"மச்சான் உன்னோட கொஞ்சநேரம் கதைக்க வேணுமடா" தலையைச் சொறிந்தான்.

'போச்சுது; நான்நினைச்சது சரிதான். சீமானுக்கு மனம் சரியில்லை. அதுதான் அப்போதை அப்பிடிப்போனவர் போல...' என்று எண்ணியபடி "இப்ப பாடமடா. அடுத்தது ப்றீ. அப்ப கதைப்பம்" வகுப்பினுள் எட்டிப் பார்த்துக்கொண்டே சொன்னேன்.

உடுவில்
## அரவிந்தன்

"டேய். உனக்கு என்ரை மனநிலை கொஞ்சமும் விளங்குதில்லை...! சரி. கன்ரீனிலை இருக்கிறன் வா" என்றவாறு திரும்பி நடந்தான். நான் அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்றேன்.

"என்ன பிரச்சினையாயிருக்கும்? வழியிலை ஏதும் சிக்கலிலை மாட்டுப்பட்டிட்டானோ? படிப்பிக்க மனமில்லாமல் போற அளவுக்கு...!"

வகுப்பில் ஆரவாரம் கேட்க திரும்பிவந்து பாடத்தைத் தொடர்ந்தேன். பாடம் முடிந்ததும் 'கன்ரீனை' அடைந்தபோது ரமணன் காத்திருப்பது தெரிந்தது. என்னைப் பார்த்ததும், "இரு மச்சான்" என்றவன், உள்ளே திரும்பி "நல்லையா அண்ணை ரெண்டு ரீ" என்று சொன்னான். பிறகு என்னை ஊடுருவினான். நான் எதுவும் பேசாமல் அமர்ந்திருந்தேன். கொஞ்சநேரம் மௌனமாக இருந்தவன், ஒரு முறை செருமிவிட்டுச் சொன்னான்.

"மச்சான். இண்டைக்குக் காலமை நான் வரேக்க ஒரு விஷயம் நடந்ததடா"

"என்ன விஷயமடா?"

"காரை நிப்பாட்டிப் பெற்றோல் அடிச்சுக் கொண்டு நிண்டன். ஆமி சென்றியால பைன்ஆட்ஸ் பெட்டையள் நடந்து வந்தாளவை..." என்று கூறிவிட்டு இடைநிறுத்தினான்.

"பிறகு...?"

நான் ஆவல் தாங்கமுடியாமல் கேட்டேன். 'மனித மனம் ஒரு குரங்கு' தானே! எனது மனம் அதற்குள் எத்தனையோ விடயங்களைக் கற்பனை செய்து விட்டது. அப்போது நல்லையா அண்ணை ரீ கொண்டு வந்து வைத்தார். ரமணன் ஒன்றை எடுத்து என்னிடம் நீட்டினான்.

"குடி மச்சான்."

'இவனொரு மடையன்! விஷயத்தைச் சொல்லாமல்...' மனதினுள்ளே திட்டிக் கொண்டு ரீயைக் குடிக்கத் தொடங்கினேன்.

"அதுக்குள்ள ஒருத்தி... கடவுளே! என்ன வடிவு மச்சான்! கொஞ்சநேரம் எனக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்லையடா. டான்ஸ் பழகிறவளோ என்னவோ அந்த மாதிரிக் கொடி உடம்படா."

ரமணனின் கண்கள் எங்கோ வெறித்தபடியிருக்க வாய் மட்டும் அசைந்து கொண்டிருந்தது. நான் சிரிப்பை அடக்கிக்கொண்டு, "பிறகு...?" என்றேன்.

"காரைக் கடக்கேக்க ஒரு வெட்டு வெட்டிப்போட்டுப் போனாள் பார். நான் நிலத்திலை இல்லை மச்சான்..."

"பொறு பொறு." என்று இடைமறித்தேன்.

"என்ன சொன்னனி? வெட்டுவெட்டிப் போட்டுப் போறானோ? உன்னையோ அல்லது உன்ரை காரையோ?"

"டேய் பாத்தியே உடனை ஏதாவது குறுக்குக் கதை கதைச்சுப் போடுவாய்."

"கோபியாதை மச்சான். நான் என்ன சொல்லவாறனெண்டா...... அன்டைக்கு நீ ஓர் ஊத்தைச்சாரமும் கட்டிக் கொண்டு வெறும் மேலோடை, தலையிலை கந்தரிக்காய்ச் சாக்கோடை நிண்டிருந்தா இந்த வெட்டு வெட்டியிருப்பாளோ?"



"போடா! உனக்கு எல்லாத்திலையும் நொட்டை சொல்லாட்டி நித்திரை வராது......அவளுக்கும் விருப்பம் இருக்கு மச்சான்"

ரீயை முழுவதும் குடித்து விட்டுக் கோப்பையை வைத்தேன்.

"டேய் ரமணன்! இஞ்சை பார் அவளுக்கு விருப்பம் இருக்குதோ இல்லையோ அது வேற விஷயம். முதலிலை ஆளின்ரை செயற்பாடுகளை நல்லா நோட்டம் பண்ணவேணும் மச்சான். அப்பதான் இயற்கையான குணங்களைப்பற்றி அறிஞ்சு கொள்ளலாம். அதிலை உன்ரை குணங்களோட ஒத்துப்போற நல்ல குணங்கள் இருக்குமெண்டா நீ உன்ரை மனதை வெளிப்படுத்தலாம். உனக்குப் பிடிச்சதுகளை அவள் தானாச் செய்யிறாள் எண்டா அதே ஒரு நல்ல குணமடா. அதைவிட வேற

(X ஆம் பக்கம் பார்க்க)

சஞ்சீவி

# சிறு கதைகள்

'சுந்தரம் கிளினிக்' என்னும் அந்தக்தனியார் மகப்பேற்று சிகிச்சை நிலையத்தில் நிறைய இளந்தம்பதியினர் வந்து கூடியிருந்தனர். இன்னும் வைத்தியர் அங்கு வருகை தரவில்லை. சிவகாமியும்— சிவராசனும் அங்கு சிகிச்சை பெறுவதற்காக வந்திருக்கின்றனர். விசேடமாய்ப்பணம் கட்டிப் பெற்



றுக்கொண்ட அனுமதிச் சீட்டுடன் மற்றவர்களைப் போலவே அவர்களும் வைத்தியரின் வருகைக்காக காத்திருக்கின்றனர்.

சிவராசன் அங்குள்ள ஒவ்வொரு தம்பதியினரின் முகங்களையும் தனித்தனியாக ஆராய்ந்து கொண்டிருந்தான். இவர்கள் அனைவருமே தம்மைப்போல குழந்தைப்பேறற்ற காரணத்தால் சிகிச்சைக்காக வந்திருப்பவர்கள்தானோ அல்லது வேறு பிரச்சினைகளுக்காகவும் வந்திருப்பவர்களோ என்னும் ஆராய்ச்சிதான் [illegible] அதையெல்லாம் [illegible] முகத்திலிருந்தே கண்டு பிடித்து விடமுடியும் என்று தான் அவனுக்குத் தோன்றியது.

இல்லையென்றாலும் கற்பனையிலேயே கதை புனைந்து, தான் எண்ணியது போலவே அதற்கொரு முடிவும் கொடுத்து, தனக்குள் தானே எதையும் சமாளித்து விடுவான்!

சிவகாமி — சிவராசன் திருமணம் நடந்து இரண்டு ஆண்டுகள் கழிந்து விட்டன. இரண்டு ஆண்டுக்காலம் ஆகியும் ஒரு பெண் கருத்தரிக்கவில்லையென்றால் தம்பதியினரிடம் நிச்சயம் ஏதோ கோளாறு உண்டு என்பது வைத்திய வட்டாரங்களின் கணிப்பீடாகும். அதன் காரணமாய்த்தான் அவர்கள் வைத்திய ஆலோசனை பெறுவதென்று முடிவு செய்தனர். நகரத்தில் பிரபலமான அந்தச் சிகிச்சை நிலையத்திலும் தம் பெயரைப் பதிவு செய்து நாள் குறித்துக் கொண்டனர்.

வைத்தியர் வயதில் மூதிர்ந்தவர், அனுபவஸ்தர், கைராசிக்காரர் என்று பெயரெடுத்தவர். அவரிடம் சிகிச்சை பெற்ற பலரும்பயன் அடைந்த செய்திகள் நிறைய உண்டு.

★ ★ ★

வளர்ந்து வரும் தமிழ்ச் சஞ்சிகை ஒன்று பாடசாலைகளில் கோட்ட மட்டத்தில் [illegible] இருந்தது. அனைத்துப் பாடசாலைகளுக்கும் அதன் விவரம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அது ஒரு மகளிர் கல்லூரி. மகளிர் ஒருவரே அங்கு அதிபராக இருந்தார். அதிபருக்கு

# கருவாகி... உருவாகி...

தன் பாடசாலை என்பது மாவட்டத்திலேயே பெயர் பெற்றதோர் பாடசாலையாக விளங்க வேண்டுமென்பதில் நிறைய அக்கறையுண்டு. அதனால் எதிர்மறையான சூழ்நிலைகள் நிலவும் வேளைகளிலும் கூட தனது மாணவிகளை அனைத்துப் போட்டிகளிலும் பங்குபற்ற வைப்பதற்காக எங்கேயும் அனுப்பி

- சந்திரா தனபாலசிங்கம் -

வைத்து விடுவார். குறிப்பிட்ட தமிழ்ச்சஞ்சிகை நடத்தும் சிறுகதைப் போட்டியிலும் பங்குபற்ற விரும்பும் மாணவிகளின் பெயர்களைப் பதிவு செய்யுமாறு உயர் வகுப்புக்கள் அனைத்துக்கும் சுற்றறிக்கை அனுப்பியிருந்தார் அதிபர்.

சிறுகதைப் போட்டிக்கென யாருமே பெயர் கொடுக்க முன் வரவில்லை. அது பற்றிய முன் அனுபவம் எதுவும் இல்லாத காரணத்தினால் தான் எவருமே முன்வர விரும்பவில்லை பாடசாலை நூலகத்தில் சிறுகதை சம்பந்தமான புத்தகங்கள் எதுவும் இல்லை. மாணவிகளுக்கு ஆங்கில அறிவு குறைவாக உள்ளதென்றும், ஆகவே ஆங்கில அறிவினை விருத்தி செய்ய வேண்டுமென்றும், ஆங்கிலப் பத்திரிகைகளை மட்டுமே நூலகத்துக்கென அதிபர் அனுமதித்திருந்தார். அங்கு தமிழ்ப் பத்திரிகைகள் இல்லை.

கதைப்புத்தகங்கள் வாசிப்பதால் படிப்புப் பாழாகிப் போகும் என்பது மாணவிகளின் பெற்றோரது கருத்தாக இருந்தது. அதனால் அவர்களுக்குத் தெரிந்த புத்தகங்கள் பாடப்புத்தகங்கள் மட்டுமே. சிறுகதையும் தமிழ் இலக்கியத்தின் ஒரு வடிவமே என தமிழ் ஆசிரியர் பாடம் எடுக்கும் போது சொல்லித் தருவதுண்டு.

அதற்காக... அதை மட்டும் வைத்துக் கொண்டு... சிறுகதையை எழுதி விடமுடி

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர்ந்து மீண்டு(ம்) வந்தோர் புலம்பல்

ஆடிக்களித்திருந்த அழகுமனை
இப்போஅநாதைாயய்க் கிடக்கிறதே!
பாடிக்களித்திருந்த பளிங்குமனை
இப்போ பாழடைந்து கிடக்கிறதே!
கூடிக்களித்திருந்த குமுத மனை
இப்போ குப்பைதேங்கி கிடக்கிறதே!

அடைமழை பெய்தாலும்
ஒழுகாத வீட்டை
இப்போ அண்ணாந்து
பார்க்கையில்
ஆகாயம் தெரிகிறதே!
சுற்றிவர மதில்எழுப்பி என்னபயன்?
சுடலைபோல் ஆனதே
எங்கள் மனை!
நாங்கள் அகதியாய்
புலம்பெயர்ந்து போனதால்
வளவு மனையெல்லாம்
அகதியாய் ஆனதோ?!

முற்றத்தில் மணம்வீச நட்டுவைச்ச
மல்லிகையும் வாடி வதங்கி
சருகாகிக் கிடக்கிறதே!
செந்தேன் போல் இனிக்கின்ற
வெயிலில் தாகம் தணிக்கின்ற
செவ்விளநீர் தென்னைகளோ
சென்றஇடம் தெரியவில்லை?

செவ்வரத்தை செவ்வந்தி
பொன்னரளி மணிவாழை
கனகாம்பரம் தொடங்கி
கடதாசிப்பூமரம் வரையாக செழித்து
நின்ற முற்றத்தில் இப்போ
சப்பாத்திக் கள்ளிதான்
சூழ்ந்து நிற்கிறது!

சப்பாத்திக் கள்ளிகள் மட்டுமா?
கண்ணுக்குப் புலப்படாமல்
கண்ணிகளும் அல்லவா நிலத்தில்
புதையுண்டு கிடக்கிறது!
புலம்பெயர்ந்து திரும்பி
சொந்த வீட்டிற்கு வந்தும்
புலம்பத்தான் முடிகிறது
வளவிற்குள் சுதந்திரமாய்
கால்வைக்க முடியவில்லை!

— இராகவன் —

## பௌர்ணமி தோறும் பரவசமாகும் பகவானே...!

நீரோடி..., நிலமெங்கும்
நிறம் நிறமாய் பூச்சொரிய
ஊரோடி விதைத்த
காலம் பொய்க்க
யாரோடி விதைத்தார்கள் — எம்
ஞாலமெங்கும் மனிதவிதை?
'தரிசு நிலமென' — வரும்
வாரிசுகள் வாயடைக்க
பரிசு குவித்தாரோ
உன் பாதம்பணி புத்திரர்கள்?
சிதைத்துப் புதைத்தது — வெறும்
சதைப்பிணங்களா...?!
புது வாழ்க்கை மொட்டவிழ்த்த
பூக்களின் வசந்தங்கள்;
மகவைத் தொட்டனுப்பி விட்டு
தொடுத்த கனவுச்சரங்கள்;
மகவாய் கட்டிய கோட்டைகளின்
கல்லுத் தூண்கள் — இன்னும்
எத்தனையோ தலைமுறையின்
வாழ்க்கை ஜீவிதங்கள்
எங்கே என வளைந்த
ஏராளம் வினாக்குறிகள்;
கண்ணீர் கோர்த்தெழுந்த
காகித மனுக்கள் கோடி;
'அங்கே' இருந்த வரை
அசைக்கவில்லை.
மாறாக
இங்கே புதைந்து
என்புக்குவியலாய் இற்றிருக்கு
செத்த பிணம் கூட
சேவிக்க இல்லாமல்
'உயிருள்ள' பிணங்களாய்
உருக்குலையும் எங்களுக்காய்
பௌர்ணமி தோறும்
பரவசமாகும் பகவானே...! நீயேனும்
செம்மணி சேதி பற்றி
செப்பு! ஒரு நீதி செம்மையாய்.

— நிலா —

## வலுவான வடம் பிடிப்போம் வாரீர்!

புன்னகையைத் தொலைத்துவிட்டு
புழுதியில் புரளும் மனிதமே
சந்நிதியோடு என்ன சகவாசம்?
அந்த அற்புதமான மண்ணை
அசிங்கமாக்காதே
தேரேறும் கந்தனே—மனிதம்
தேற ஏறு!
சிந்தனைப் பேறை
சிகரமாய்க்கொண்ட மனிதனே
ஏன் கந்தல்களையே
கடைசிவரை
காப்பாற்றிக் கொள்கிறாய்?

இந்த உடலின் முடிவை
உற்றுப்பார்
சாகப்போகுமுன் எங்கு
போகப்போகிறாய்?
புல்லாகிப், பூடாகிப், புழுவாகி...
புறப்படுமுன்
நல்லோனாக நடந்துசெல்
சகாக்களாக வாழ்வதற்கு
என்ன சர்ச்சை?
உள்ளத்தின் ஊத்தைகளை
உரித்தெறி
உரிமைகளுக்கும், உணர்வுகளுக்கும்
சமத்துவம் செய்
சண்டை சாரளங்களை சாற்று
சுதந்திரத்தின் சூத்தைகளை
சுத்திகரி
அன்பையும் அறத்தையும்
ஆறறிவு அழகையும்
பண்பையும் பரிவையும்
பக்குவமாய் நேசி.
அதுவரை,
புரண்டு அர்ச்சிப்பது
புண்ணிய நடப்பல்ல
புனிதத்தைப் பேசுவது
புத்திசாலித்தனமல்ல
புதைகுழிகள் தோன்றுவதும்
புதிதான புதிரல்ல.

— மானியூர் ரட்ணேஸ் —

## அன்பே சிவம்!

காட்டினிலும் இருக்கின்றான்
களப்பினிலும் இருக்கின்றான்
வீட்டினிலும் இருக்கின்றான்
வெளியினிலும் இருக்கின்றான்

ஓலைக் கொட்டில் உள்ளிலும்
ஓடும் வாகனத் துள்ளிலும்
பாலை மரக் கொப் பிலும்
பாண் கிணத்து மேட்டிலும்

எங்கும் எங்கும் இருக்கின்றான்
இங்கும் அங்கும் ஓடுறான்
ஓசை யாவும் அவனதே
ஒலிகள் யாவும் அவனதே

ஏறிச் சென்றால் இறங்கென்பான்
இறங்கிச் சென்றால் ஏறென்பான்
கூறிக் கூறி நிற்கலாம் —பெருமை —
கூறி முடிக்க லாகுமோ?

எல்லா மிங்கவன் செயல்
ஏதும் சக்தி நாமிலேம்
எண்ணம் போல நடக்குது — அவன்
ஏவல் படியே நடக்குது!

அவன் புகழைப் பாடியே
அடி வருடி நாடியே
ஆயிரம் பேர் ஓடுறார்!
ஆசை தீரத் தேடுறார்!

அவன் பாதம் நாடியே
அடியார் பலர் வாசலில்
மணிக் கணக்காய் இருக்கிறார்!
மண்டி யிட்டு நிற்கிறார்!

'பாத பூசை' ஆகுமோ?
'தேச தோஷம்' தீருமோ?
ஆசைக் காலம் தோன்றுமா?
''அன்பே சிவம்'' ஆகுமா?

— [illegible] —

## நற்சேதி பிறக்கட்டும்

கால்கள் பதியாது கனதூரஞ்
சென்றதற்கு
கட்டியம்கூறுகின்ற 'யாழ்வரவே'
சீல் வைத்த இடமாக சரித்திரத்தில்
சக்கைபோடு போடுகின்ற
செம்மணியே
பால்(ச்)சோறு தருகின்ற
பசுந்தரையே — உன்
புதைகுழியில் என்பிறப்பு
இருந்தால் கூட
நால்நூறு நம்மவர்கள் நம்மண்ணில்
— நலமாக
நிற்கின்ற நற்சேதி பிறக்கட்டும்.

— நோயாளி —

## ஆயிரம்பேரைக் கொன்றவன்!

(ஆயிரமாயிரம் படைவந்தாலும்
ஆட்கள் தொலையா வெல்லும்?)

என்னோடு புடுங்குப்பட்டு
எரிச்சலுடன் ஏறுபவர்
எண்ணிக்கை கொஞ்சமல்ல,
ஏலுமட்டும் விலத்திக்கொண்டு
என்வழியைப் பார்ப்பமென்றால்
சும்மா வளர்ந்திங்கு
'சுணை' மெத்திப் போனவர்கள்
தன்பாட்டில் போகும் என்னைத்
தடுத்திங்கு வம்பு செய்தார்.
''சொறி! தம்பி, உம்மோடு
சொறிதேய்க்க நேரமில்லை
உம்வழியில் போனீரேல்
உயிர்வாழும் வகைபெறுவீர்''
எனநானும் இடைவெட்டி
எதிர்ப்பின்றி விலகிவிட
ஏளனமாய்ச் சிரித்தார்கள்.
பொறுமையைக் கடைப்பிடித்து
போர்த்தவிர்ப்பைக்
கைக்கொண்டேன்.
கண்டவுடன் 'நக்கல்'
கதைசொல்லிப் பகிடிவிடும்
மண்டுவங்கள் பாவமென
மன்னிப்பு வழங்கிவிட்டேன்.
ஆனாலும் அன்றொருநாள்—என்
அந்தரங்க உடுப்பினுள்ளே
அவர்செய்த வேலையினால்
பொறுமை நிலைகடந்து
புறப்பட்டேன் புடைத்தெடுக்க.

★ ★ ★

சாரத்தை மடித்தொருக்கால்
சண்டியிலே கட்டிக்கொண்டு
''வாறன் பொறு, உனக்கு
வடிவாகப் பாடஞ்சொல்ல'' என
பந்தத்தை மண்ணெய்யில்
பாங்காகத் தோய்த்தெடுத்து
கையில் பாளையுடன்
கதைமுடிக்கப் புறப்பட்டேன்.

★ ★ ★

வீட்டுக்குள் புகுந்து, அவரை
வெருட்டுவதும் 'சுதி' தானே!
''கூட்டணியாய் கூடிநின்று
குதிக்கிறியே! வா வெளியே''
என்று நான் கூச்சலிட
எதிர் வந்தார் எழுநூறு!
கூட்டுக்குள் மறைந்துதம்
குரல் மறந்தார் முந்நூறு!

★ ★ ★

பந்தத்தில் தீயிட்டு அப்
படைமீது பிடித்திட்டேன்.
வெருண்டார் நூறு,
வேதனையில் முனகலிட்டுச்
சுருண்டார் இருநூறு,
சுடர்வெம்மை தப்ப ஓடி
அருண்டார் ஐந்நூறு.
ஆகமிச்ச இருநூறும்
ஆவியினை விட்டுவிட்டு
ஆகுதியாய் மாறிவிட்டார்
''ஐயோ, பாவம்!'' என
அலறுகின்ற வாசகர்காள்,
அடியேன் செய்தொழிலை
அனைவருமே செய்திருப்பீர்!
ஊருகின்ற ''மசுக்குட்டி''
உபத்திரவம் தாங்காமல்
நெருப்புக் கொளுத்தியதை
நிச்சயமாய்க் கொன்றிருப்பீர்!

— கி. குருபரன் —

## அனர்த்தங்கள் விளைந்தே...

காகித ஓடம்கடல் நீரில் கரைவ...
மாவிட ஓடமும் கசிப்பினிலே ...

ஐந்தறிவான பறவைகளும் ...
களிப்பினில் நிதம் மிதக்கையி...
ஆறறிவான மனிதனுக்கு இ...
அனர்த்தங்கள் வந்து விளைந்...

சிந்தனைக்கு வடிவம் கொடு...
சீரான வாழ்வுக்கு விதை வி...
ஆனாலும் அவன் வாழ்வு
பேயாக அலைகின்றான் பித்...

ஊனுடம்பு கடல்நீரில் துரும்ப...
வானக்கதவும் திறந்தே கிடக்...
காலவெள்ளம் கரைந்து போ...
குடும்ப ஓடம் கண்ணீரில் மித...

ஆன்மாதுடிக்கின்றதுஆணவ ...
ஈரல் கரைகின்றது கசிப்பின் ...
வேகம் தணிகின்றது உடம்பி...

ஆனாலும் மனிதன் திருந்த...
போதை ம...

உடல்மெலிந்து குடல்கருகி க...
வயிறுதான் குடமெனவே வி...
நலமிழந்து நடைதளர்ந்து ...
நாய்கூட மதிக்காத மனித...

இந்த மனிதனுக்கு இந்த அ...
வந்து வி...

— கதிர். சீனி...

## உயர் இரத்த ...

இரவிலோ உறக்கம் இல்...
இதயமோ படபட...
விரைந்திடும் கோபப்பே...
விடியுமுன் சிறுநீர்ப்...
அரைகுறை தலையில் சு...
அடிக்கடி வேர்வை...
விரைந்து நான் வைத்தி...
விவரத்தைச் சொல்...

கரத்தினைத் தொட்ட...
கடிகாரம் தன்னை...

கரத்திலும் ஏதோ கட்...
முடுக்கினார் இரசிு...
கழுத்தினில் தொங்கும் ...
குழலையும் வைத்து...
அழுத்தமோ அதிகம் எ...
ஒய்வுதான் தேவை ...

உப்பினைக் குறைத்து ...
உன் நிறையையும்
குறை...
கப்பிப்பால் எண்ணெய் ...
கறிகளுக்காகாதென்...
இப்பெரும் வியாதி தீர ...
உளநலம் பேணு எ...
'சுப்பரும்' சுருட்டும் கூட...
சுகம்தரா தென்று ...

— நே...

## சிந்தியம்மா! திருந்தம்...

தமிழினப் பெண்ணே — நான்...
தயவுடன் சொல்வதை — நீ
தலையிடியாக எண்ணி
தவறிப்போகாதையம்மா!

சாலையிலே — உனது
சமாந்தர சைக்கிள் சவாரிகள் ...
சகிக்க முடியாதம்மா — பெண்...
சாமர்த்தியம் தேவையம்மா!

மினிஸ்கேட்டும் காத்தோடு சேர்...
கரங்கள் எதிர்நீச்சல் தான்பே...
வீதியோர நரிகளின் மனங்களு...
போச்சுதம்மா கன்னியுன் மான...

பல் இழித்து உன்னுடன்
பகட்டாய் பழகிடும் — அவ்விள...
பின் தொடர்ந்து — உன் கற்...
பறிக்குமம்மா ஓர் தினம்!

விழிப்புடன் இரு — உனக்கு
விதியின் வலிமை தான் புரியா...
விரைந்து தான் வரும் — நமக்...
விடிவு காலம்!

ஏ, பெண்ணே — இவன்
விசரன் என எண்ணி
சிந்திக்காது சிரிக்கின்றாயா?
அது உனது கண்ணீருக்கான
அறிகுறிதானம்மா!

— கந்தரோடை ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து
தேனோ?
வதுபோல்
கரையுதம்மா!
ஆனந்தக்
பிலே
ந்த
ந்ததேனோ?
த்துவிட்டான்
தைத்து விட்டான்
சிறக்கவில்லை
துப்பிடித்து
து
கின்றது
கின்றது
க்கின்றது
முனைப்பினாலே
நனைப்பினாலே
ன்
இளைப்பினாலே
வில்லை
யக்கத்தினாலே.
உள்விழுந்து
க்கொண்டு
நடைப்பிணமாகி
ப்போர்வையிலே
திரிகின்ற
னர்த்தும்
ளைந்ததேனோ?
சித்தம்பி —

அழுத்தம்

லை
ப்பு
ச்சு
போக்கு
ற்று
ஊற்று
பார்க்கு
லி நின்றேன்.
வாறு
ப்பார்த்து
— று
ம் ஏற
கருங்
பார்த்து
ன்று
என்றார்.
உண்டு
யுமென்றார்
வர்க்கம்
றார்
ன்று
சொன்னார்.
யாளி —

ா!

# ஆசை

குழந்தைகளின் கண்கள்
பூக்களைப்போல் அழகானவை
குழந்தைகளின் சுவாசங்கள்
பூக்களைப்போல் வாசமானவை
குழந்தைகளின் மழலைகள்
பூக்களைப்போல் இனிமையானவை
குழந்தைகளின் இதயங்கள்
பூக்களைப்போல் தூய்மையானவை
குழந்தைகளின் உணர்வுகள்
பூக்களைப்போல் மென்மையானவை
கடவுளே...
மீண்டும் ஒருமுறை
என்னைக் குழந்தையாக்குவாயா?

— க. நா. முகுந்தன் —

# சிரிக்காதே செம்பகமே!

சாலை ஓரம் சரிந்த ஆலமரம்
சாய்ந்த நிழலில் எந்தன் வீடு
மூலை முடுக்கு எங்கள் காணி
முளை போடும் பனையோ எங்கும்
காலை எழுந்து வீட்டைச் சுற்ற
கையில் பையில் காசு நாளும்
பாலை வனத்தில் இதுவோர் சோலை
பாடு பட்ட முன்னோர் சொத்து,

முதன்மை சாலை வீட்டின் முன்னால்
முறிந்து செல்லும் பாதை பக்கம்
இதமாக படர் கிளையில் கூடுகட்ட
இசைபாடும் பறவையும் எனக்கு அஞ்சும்
உதவாத குடியினை குடித்தோர் சென்றால்
உதைத்தே தீர்ப்பேன் எனை வணங்கேல்
இதமான தடியெடுத்து குடுப்பேன் சாட்டை
இடிஅமின் நானே இந்த சாலைக்கு.

செம்பகம் ஒன்று சுற்றிச் சுற்றி
செறிந்த நிழலில் இருக்கை தேடி
தம்வசம் இல்லை உரிமை என்று
தனி நின்ற என்னை நோக்க
எம்வசம் என்று முறுவல் பூத்த
எதிர் கிளையை காட்டி நிற்க
எம் எஜமான் நீயே என
என்னை சொல்ல முடிந்த உதாரணமே.

சூரியன் கதிரை விரிக்கும் நேரம்
சுப்பிர பாதம் ஒலிக்கும் நேரம்
பாரினில் படரும் பனிகள் வாட்ட
படுக்கை விட்டு வந்தேன் சாலை
காரிருள் முகமும் கையில் துவக்கும்
காக்கிச் சட்டையில் கோடும் இடும்
நாரியில் கைவைத்து நகைத்து நின்றான்
நல்ல தமிழை தின்று தொலைத்தான்

வா இங்கே என்று பகர
வயதி லிளையோ னுக்கஞ்சி நடுங்க
ஆ 'பாசை' என்று உரைக்க
தடவி கையில் கிடைக்கா நிலையில்
போ அங்கே என்று முறைக்க
போய் இருந்தேன் வீதி மருங்கில்
மா மனிதன் நான் என்ற
மடமை உடைய மதிலில் சாய்ந்தேன்.

வீதி போவார் எனைப் பார்க்க
வீதி மண்ணை நான் பார்க்க
காதில் பட சொன்ன வார்த்தை
கருக்கி உள் மனதை வாட்ட
நாதி யற்று பாதியுயி ரானேன்
நாய்கள் பார்த்து வாலை யாட்ட
போதி மரப் புத்தன் ஆகி
பேதி குடித்தார் களைப்பை உற்றேன்.

நீதி கேட்ட மாட்டிற்கும் நற்கதி
நாதி யற்ற எனக்கு யார்கதி?
வீதி யோரமா எனக்கு இனிவிதி
வீரம் பேசிய எனக்கா இச்சதி
பாதி வயதா? இனி இறைகதி
பணிவே அன்றி எனக்கு இனிமிதி
சாதி அறிவால்! அதுதான் கதியென்றே
சாந்த மாக அவனை நண்ணி.

ஐயா! வீடு இதுதான் என்றேன்
பொய் என்றான் உண்மை என்றேன்
பையா என்று நினைக்க வேண்டா
உண்மை சொலிலு என்ன சரியா
ஐயா உண்டா? அம்மா உண்டா?
கையால் நான் இல்லை என்றேன்
வையா தெனை உள்ளே தள்ளி
வீட்டைச் சுற்றி பார்க்க லானான்.

திகைத்துப் போன செம்பகமும் பெரும்
திகிலால் விறைத்துப் போன மரவிலையும்
பகை தெரியாப் பட்சிகளும் பனியில்
படர் கொடியின் இளம் துளிரும்
நகைக்க அங்கே நான் நடந்தேன்
நாண முறும் நங்கை தோற்க
தகைமை யற்றோம் இங்கு வாழ
தரத்தில் நீயும் நாமும் ஒன்றே!

— கந்தவனம் ஸ்ரீரங்கநாதன் —

# "வாகன ஓட்டம்"

வீதியில் வாகனக் கூட்டங்கள்—வெறும்
விதிகெட்டுப் போடுது ஆட்டங்கள்
ஏதிலை இவர்க்கிங்கே சட்டங்கள்—இதை
எதிர்த்திட ஆளிலாக் கட்டங்கள்

வெறி கொண்டு லொறி ஓட—வீதியில்
வீசியே புயற்காற்று தோன்றுமாம்
சொறி கொண்ட நாய்தானும் ஓடிடும்—சற்றே
தொலைவினில் வாகனம் தெரியு
தென்றால்
''ஹொண்டா,'' ''சுஸுக்கி'', ''யமஹா''
என்று—வந்து
குவிந்திங்கே கிடக்கிற வண்டிகளில்
கண்ட படியெல்லாம் கலர் எடுக்கும்—தம்பி
கவிழுவார் குப்புற முகம் சிதற!

எண்பதைத் தாண்டினும் என்ன செய்ய
—அப்பு
எடுத்தே சைக்கிளில் ஓடி வந்து
கண்வெட்டும் நேரத்தில் வரும் காரை
—கண்டதும்
கெடுக் கொண்டு விலக முன்பே
வாலைக் கிளப்பியே வந்திடும் ''வான்''
—வந்த
வேகத்தில் அப்புவை வீழ்த்தி விட
வேலை யில்லாமல் ஒரு கும்பல்—கூடி
விவாதிக்கும்; கிழட்டுக்கு ஏன் சைக்கிள்?!

ஓரிரு போத்தலை உள்ளிறக்கி—வரும்
உற்சாக மிகுதியில் வண்டிவிடும்
சாரதி களிங்கே குறைவில்லை—இவர்
சந்திகள் திருப்பத்தில் சாகசங்கள்
புரிகின்ற போதுதான் குடல் கலங்கும்—உயிர்
போயிற்று வந்தாற்போல் உடல்
குலுங்கும்
தெ(ளி/ரி) யாது இவர்க்குத் தம்போதை
—எங்கோ
தெருவினில் நெறிகெட்டு மோதும்வரை
பலியெடுப்புக் கிங்கே குறைவில்லை—வாகனப்
பசிபோக்கவும் பாவிகள் உயிர் ஒன்றும்
மலிவுச் சரக்கல்ல மனிதர்களே—இனி
மறந்தும் ஓடாதீர் வேகமாக.

— அனலையூர்ச் சேந்தன் —

# மறக்க முடியவில்லை...

பள்ளிப் பருவத்திலே
பக்கத்துக் காணியிலே
பசுபதியின் மரத்தினிலே
பப்பாய்க்காய் பிடுங்கியதை

மறக்க முடியவில்லை......

பள்ளிக்குப் பிந்திப்போய்
பரமசிவம் வாத்தியிடம்
பன்னைத் தடியால் அடிவாங்கி
பணிய இருந்ததை

மறக்க முடியவில்லை......

பின் வாங்கிலில் இருந்து
பிரியாவின் கூந்தலை இழுத்து
பிரபு சேரிடம்
பிரம்படி வாங்கியதை

மறக்க முடியவில்லை......

போகும் வழியில்
போளை அடித்து
போவோர் சிலருடன்
போர் நாம் செய்ததை

மறக்க முடியவில்லை......

கிட்டிப் புள் அடித்து
கிளித்தட்டு விளையாடி
''கிக்'' பண்ணி பந்து உதைத்து
கிடந்துருண்டு எழுந்ததை

மறக்க முடியவில்லை......

'மற்ஸ்' பாடத்தில்
மட்டாக 'மாக்ஸ்' எடுத்து
மார்க்கண்டு மாமாவிடம்
மாட்டடி வாங்கியதை

மறக்க முடியுமா?

— [illegible] —

# அகராதி

**சீதனம்**
திருமணச்சந்தையில்
மணமகனை
ஏலத்தில் விடும்
கூறுவிலை.

**வாக்குச்சீட்டு**
அரசியல்வாதிகளின்
பரீட்சை
வினாத்தாள்.

**துப்பாக்கி**
மனித
உயிர்குடிக்கும்
போர்கால
நுளம்பு.

**திருமணம்**
விலைக்கு
வாங்கப்பட்ட
மணமகனை
(மண)மகளிடம்
ஒப்படைக்கும்
நாள்.

— துரைசீலன் —

# உதயம்

காலைப் பரிதி
ககனத் தெழுந்தது.
மேலைக் காரிருள்
மிரண்டு கலைந்தது.

ஆழிப் பேரலை
ஆர்ப்பரித்திரைந்தது.
சோலைப் புள்ளினம்
சுருதி வடித்தது.

நித்திலம் பூமியை
நிறைத்ததாமென
கொட்டிய வெண்பனி
கூதிர் அகன்றது.

ஓதினர் மந்திரம்
ஒப்பிலா வேதியர்
மாதவன் சந்நிதி
மாமணி ஒலித்தது.

கட்டுடல் உழவர்
கழனி புக்கினர்.
சிற்றிளங் காளைகள்
சிலிர்த்து முன்னேகின.

சீதப்புனல் வயல்
செந்நெல் அரிந்திட
பாதம்சிவந்த நற்
பாவையர் போயினர்.

செங்கதிர்ச் செல்வன்
திசையது நோக்கி
பங்கயச்செல்வி
பதித்தனள் வதனம்.

தவளைகள் நீரினுள்
தாவிக் குதித்திட
குவளையும் ஆம்பலும்
குலுங்கிச் சாய்ந்தன.

சுகந்த பூம்பொழில்
சூழ்ந்த வண்டினம்
மாந்தி அமுதினை
மயங்கித் துய்த்தன.

வெண்முகிற் போர்வை
விலகிக் கலைந்திட
நீலவான்மகள்
நீள்தரை நோக்கினாள்.

கூவின சேவல்
கொடும்சிறை விரித்து
தாவின கன்றுகள்
தாய்முலை நாடி.

பூமிப் பெண்ணவள்
பொலிவிற் திளைத்து
காமுற்ற ஆதவன்
கணத்திற் சிவந்தனன்.

— வை. சுந்தரேசன் —

# புதுக்கவிதை

**நிலவு**
ஓலைக் குடிசைக்கு
ஒளி தரும் தீபம்.

**நூலகம்**
கற்பவர்களைக் கைதூக்கி
விடும் கலைக் கூடம்.

**சைக்கிள்**
ஏழைத் தமிழனின்
சாலைத் தோழன்.

**அடையாள அட்டை**
இது இல்லாது விடில்
உரியவர்
அடையாளமில்லை.

— சி. சிவநேசன் —

# ஒரு குரல்!

சிரிப்பும் களிப்புமாய்ச்
சேர்ந்து செல்லும்
சோதரரே!
சற்றுநில்லுங்கள்.
உப்புக்காற்றும் உவர்
நிலமும்
உருகவைக்கும்
இவ்விடத்தில்
வேதனையுடன் ஒலிக்கும்
எங்கள் குரல்கேட்கிறதா?
பேய் என்றெண்ணிப்
பதறுகிறீர்களா?
பயம் வேண்டாம்
நாமும் உங்கள்
தாய் நிலத்திலேதான்
தவழ்ந்தவர்கள்.
இங்கு
நெடுங்காலத்துக்கு
முன்பே
நாட்டப்பட்டவர்கள்.
கலங்கியவரின்
கண்ணீருக்கும்
முளைக்காத
முத்துக்களாய்...
சுழன்றடிக்கும் புயலுக்கும்
சளைக்காத
சொத்துக்களாய்...
முகவரி தெரியாமலே
மூழ்கிப்போயிருந்தோம்.
சவர்நிலமானாலும் — எம்
சொந்தமண்ணிலே
சமாதியான சந்தோஷம்
எமக்கு
இருந்தாலும்...
'ஈனமான' இறப்பென்பது
இதைத்தவிர வேறில்லை
பாதைவழிச் செல்லும்
பக்கத்து உறவுகளைப்
பரிதாபத்துடன்
பார்ப்பதே—எம்
பொழுதுபோக்கு
இனியும் உறங்கிக்கிடக்க
ஊமைகளல்லர் நாம்!
வாய் எமக்கில்லைத்தான்
எனினும்,
வல்லரசுகளையும்
வஃழுக்கிவிழவைக்கும்
வல்லமை எமக்குண்டு
எங்களைத் தேடும்
இதயங்களே!
கவனமாகத்
தோண்டுங்கள்.
கடல்நீர் இங்கே
கண்டபடி புகலாம்
தோண்டிய இடத்தில்.. ...
தூசிபடிந்த
முடிவற்ற அறிக்கைகளை
முழுதாகப் போட்டு
மூடிவிடுங்கள்!


— உடுவில் அரவிந்தன் —

# கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 64



சொற்சிலம்பம் இல. 64
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

.................. இங்கே வெட்டுக ..................

முடிவு திகதி; 28 — 08 — 1998

**இடமிருந்து வலம்**

1. வடக்கு மக்களை சொத்து விடயத்தில் கட்டுப்படுத்தும் சட்டம். 5. உண். 7. தந்திரச் செய்கை. 8. நிறுவுதல். 10. அக்னி. 11. ஏற்பாடு. 12. நிலத்திலிருந்து விண்ணுக்கு ஏவும் ஏவுகணை. 13. சாந்தியின் கடைசி வார்த்தை. 14. வெறி தருவது 15. வம்பு செய்பவன். 18. தளபாடங்கள் செய்ய உதவும் மரம். 20. பழுத்தல். 22. தேங்காய்ப் பூவைப் பெறச் செய்ய வேண்டியது. 23. விடியலுடன் வருவது.

**மேலிருந்து கீழ்**

1. மனைவி. 2. உண்மை. 3. இப்போது முகாம்களில் பரவலாக நடப்பது. 4. விளையாட்டுக் களம். 5. உட்செல்ல. 6. சிங்கம். 9. சீப்பில் வரிசையாக இருப்பது. 10. கடைத்தரம். 11. தெவிட்டாத அமிர்தம். 12. மென்மையானவள். 14. கணவரின் சகோதரி. 15. நகல் வடிவில் இருப்பது. 16. இரவு அல்ல. 17. மறுக்கும் சொல். 19. செல்வம் 21. பொருந்தாது என்பதைக் குறிப்பது.

### சொற்சிலம்பம் 62—விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சகவாசம், 5. ஏது. 7. தாவரம். 8. மகுடி. 9. சம்பாசனை. 11. பாகு. 12. திரு. 13. பாடை. 14. திண்ணை. 15. வசவு. 17. எம்மை. 19. பலசாலி. 21. யமன். 23. கும்மி. 24. விலை.

**மேலிருந்து கீழ்**

1. சதா. 2. கவச குண்டலம். 3. வாரம். 4. சம்பாதி. 5. ஏகு. 6. துடியிடை. 8. மனை. 10. சருவம். 11. பாதி. 13. பாவு. 16. சமையல். 17. எலி. 18. கோன். 19. பகு. 20. சாமி. 22. மலை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: பொ. சிவசக்தி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

★ இரண்டாம் பரிசு: க. கோகிலரமணன்,
கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.

★ மூன்றாம் பரிசு: செல்வி கிறிஸ்தினா வசந்தராணி,
134, நாலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 63 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# குறள் வெள்ளம்

அன்பில்லாத வாழ்வு சூனியம் போன்றதே. பிறருக்காக எள்ளவும் முகம் மலராது, தானுண்டு தன் சிவியம் உண்டு என வாழ்வதும்—தனது நலனே கருத்தாக இருப்பதும்—அடுத்தவன் சுமைகளை—துன்ப, துயரங்களை எட்டிப்பாராமையும் உலகினில் வாழும் வகைதானா?

இப்படிக் கேவலமாக வாழ்பவனை உலகோர் தம்மில் ஒருவனாக நினையார். பாலைவனத்திலோ, சந்திரனிலோகூட இவர் திருப்தியாக வாழலாம். சுற்றம் இருந்தென்ன சேரவா போகிறது?

அன்பு கனிய அடுத்தவரோடு பழகி?, அவரவர் தேவை உணர்ந்து—துன்பம் அறிந்து—உருகி, உதவி, பரிகாரம் செய்து வாழும் வாழ்வில் எத்தனை இனிமை!

அன்பு ஈனும் ஆர்வம் உடைமை என்றார் புலவர். அன்பிலிருந்து பிறப்பதுதான் ஆர்வம். உனக்கு அடுத்தவர் மீது அன்பும் ஆர்வமும் பிறக்கட்டும். உலகு உன்மீது ஆர்வமாக இருக்கும்.

அன்பும், ஆர்வமும் இதயங்களை இளக வைக்கும். உனது இறுமாப்பையும், திமிரையும் விலகி ஓடவைக்கும். தீய குணங்கள் மனதினின்றும் விலகி வழிவிடும். மனதில் ஆனந்தம் குடிகொள்ளும்.

உலகம் உன்னை நண்பனாக ஏற்றுக் கொள்ளும். எவருக்கும் மனதுக்குப் பிடித்த நண்பனாக நீ மாறி விட்டால் அதைப்போல அளவற்ற (நாடாச்) சிறப்புத்தான் என்ன?

"அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பெனும் நாடாச் சிறப்பு."


—0074

(அன்புடைமை)

— அம்பிகைபாகன்

# இந்த வார இராசி பலன்

## [22 - 08 - 1998 முதல் 28 - 08 - 1998 வரை]




மாற்றம்:

மகம்—நட்சத்திரம், சிங்க இராசியில் சந்திரன் நிற்கும்.

அரசியலில் பல கஷ்டங்களை அனுபவித்து வரும் மக்கள்—புதை குழிகளில் சிந்தை கொள்வர். புதிய அணுகுமுறைகளும், அரசியல் இழுபாடும் இருக்கும். இந்தியாவிலும் — இங்கும் தென் திசை பெண் அரசியல்வாதியின் சாணக்கிய நிலைக்கு—வடதிசை அரசியல் தலைவர்கள் சற்றுவிட்டுக் கொடுப்பர். அதனால் இந்தியாவில் தமிழ்நாட்டு அரசில் பலரின் திடீர்மாற்றங்களைக் காணலாம். அமெரிக்கா தொடர்ந்தும்கிழக்குநாடுகளின் பொருளாதாரப் போக்கில் பல மாற்றங்களைச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கும். கிழக்கு நாடுகளில் இயற்கை, செயற்கை அழிவுகள் தொடர இடம் உண்டு. மத்திய கிழக்கில் ஐ. நா. புதிய அணுகுமுறைகளைப் பரிசீலிக்கும் நிலைமை தோன்றலாம். அமெரிக்கத் தலைவருக்கு நல்ல காலம் இல்லை.

மேடம்: திடீர், திடீரென திட்டங்கள் தீட்டியபடி இருப்பீர்கள். அதிக சிந்தனை, அதிக செலவு, அதிக அலைச்சல் என மாறிமாறிக்கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் பிரையாசைக்கேற்ற பலன்கள் கொடுக்கமாட்டா. ஒருவித மந்தநிலைகொடுத்தபடிஇருக்கும். காலில் அடிக்கடி காயம், வாதம், வாய்வு, நோ, வயிற்றில் வருத்தம், விஷ, அக்கினிப் பீடைகள் அடிக்கடி கொடுக்கலாம். ஏழரைச்சனி கொஞ்சம் தாக்கத்தைக் காட்டியபடி இருக்கும். ஆயினும் எதிர்நீச்சலடித்தபடி தெய்வவழிபாட்டின் உதவி கொஞ்சம் கொஞ்சமாகப் பல பிரச்சினைகள் குறைந்து நிம்மதி ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.

இடபம்: உங்கள்திட்டமிட்ட செயற்பாடுகளால் தொழில் ஸ்தானத்தில் அதிக நன்மைகள் கொடுக்கும். மேலதிகாரிகள், நண்பர்கள் உதவி செய்வார்கள். சிலருக்கு இழந்தவைகள் திரும்பக் கிடைக்கலாம். வீடுமனைச் செலவுகள் அதிகரிக்கும். புத்திரருக்காகவோ — சகோதரர்களுக்காகவோ எதிர்ப்பாலாருடன் வாக்குவாதப்பட நேரிடும். பொருள் விஷயத்தில் அவதானமாக இருக்கவும். நம்பிக்கை மோசம் செய்யச்சிலர் காத்திருப்பர், அயலவர்கள் வீண்பழி சுமத்துவார்கள். ஆடம்பரச் செலவுகளைக் கட்டுப்படுத்துங்கள். அடிக்கடி உஷ்ணபீடைகள், நரம்புச் சோர்வு, சலவருத்தங்கள், சளிபீடை, நெஞ்சுநோ என்பன கொடுக்க இடமுண்டு. ஓய்வு முக்கியம்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

மிதுனம்: உங்களுக்கு எதிலும் அவசரம். திட்டமிட்டு எதையும் செய்யவோ சொல்லவோ முடியாத காலமாகும். தொழில் ஸ்தானத்தில் இலாபங்கள் அதிகரிக்கும். நண்பர்களின் உதவிகளால் நற்பலன்கள் அதிகரிக்கும் காலமாகும். வாய்வுத்தொல்லை, முதுகு வலி, கைகால் வலி, தலைவலி, நாரிவலி என அடிக்கடி சொல்லுவீர்கள். வெயிலில் அதிகம் திரியாதீர்கள். சிலருக்கு பித்தம் கொதித்து தலைச்சுற்று வரலாம். சல, மல வருத்தங்களில் நிதானமாக இருக்கவும். வெளிநாட்டுச் செய்திகளால் அதிக நன்மை அல்லது மகிழ்ச்சி அடைவீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

கடகம்: என்ன கொஞ்சம் சூடாக இருக்கின்றீர்கள் போல இருக்கின்றது? அரசியல் விமர்சனம் அதிகம்போலிருக்கின்றது. வேண்டாமென ஒதுக்கவும் மாட்டீர்கள். எத்தனை செம்மணி இனி வருமோ? எத்தனை மக்களின் வாழ்வில் வேதனை பிறக்குமோ என அடிக்கடி பெரிய பிரசங்கம் நடத்திவர மனம் ஏவும். தொழில் ஸ்தானத்தில் நல்ல வரவேற்பு உண்டு. கைகால் தாக்கம், சள வருத்தம், தலைச்சுற்று, அடிக்கடி பலவீனம் ஏற்படும். ஓய்வு தேவையாகும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். அல்லது அயலில் ஒரு சிலர் தேவையற்ற வசைகள் சொல்லுவார்கள். சிலருக்கு சொல்வாக்கால் கலகங்கள் ஏற்படலாம். வீட்டுச் செலவு, தொழில் ஸ்தானச் செலவுகளைக் கட்டுப்படுத்துங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

சிங்கம்: சொந்தமென்ன? பந்தமென்ன? என எண்ணாதீர்கள். நாம் இந்த வட்டத்துக்குள்தானே வாழவேண்டி இருக்கின்றது. தத்துவம் பேசினால் காசுவருமா? அல்லது உங்கள் பிள்ளைகளையோ, சகோதரங்களையோ வாழவைக்கத்தான் முடியுமா? தொழில் ஸ்தானத்தில் நாலுபேர், நாலுவிதமாகக் கதைக்கத்தான் செய்வார்கள். அப்படிக் கதைப்பதால் நீங்கள் குறைந்து போகமாட்டீர்கள். நல்லதை சிலருக்குச் செய்யுங்கள். உங்களையும் கவனியுங்கள். நொஞ்சுநோ, கைகால் விறைப்பு, உஷ்ண பீடைகள், வாய்வுத் தொல்லைகள், சல, மல வருத்தங்கள் என வரச்செய்யும். ஓய்வு முக்கியம். தெய்வ பக்தி, பணி தொடரட்டும். வாழ்வுச் சக்கரம் சுழன்றபடி தானே இருக்கும்? உங்கள் செயற்பாடுகளில் உறுதியுடன் இருக்கவும்,

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வியாழன்.

## மகாதேவா ஜோதிடம்


கன்னி: கலகலப்பான காலமாகும். பல வாக்குறுதிகளைக் கொடுத்தபடி இருப்பீர்கள். நிறைவேற்றுவதாக இருக்கட்டும். தொழில் ஸ்தானத்தில் பல சந்தேகக் கண்கள் மொய்த்தபடி இருக்கும். எதிர்ப்பாலாரின் உதவிகள் கிடைக்கும். ஆத்திரப்பட்டு காரியத்தை கெடுத்துவிடாமல் புத்தி சாதுரியமாகச் செயற்பட்டபடி இருக்கவும். பிரயாணம் வெளிநாடு எனச் சிலரின் ஆசைவார்த்தைகளுக்கு மயங்கி விடாதீர்கள். பின்பு எல்லாம் பகற்கனவாகி விடும். காசுச் செலவுதான் கொடுக்கும். சளி, இடுப்புவலி, வாத உளைவு, கிருமித்தாக்கம், தோல்வருத்தம் எனச் சிலர் வருந்தலாம். சனீஸ்வரன் தாக்கம் இருப்பதனால் குல தெய்வ வழிபாடும், சனீஸ்வரனுக்குப் பிரீதியும் முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வார்த்தை விளையாட்டு




மேலேயுள்ள பலூன் மனிதன் வைத்துள்ள பலூன்களில் சில எழுத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை வைத்துக் கொண்டு ஐம்பத்தியைந்து சொற்களை உங்களால் உருவாக்க முடிகின்றதா என்று பாருங்கள்.

(விடை XI ஆம் பக்கத்தில்)

## கோட்டை விட்ட முயல் அண்ணர்

நீண்ட செவியன் நான் தம்பி
நெருப்பு விழியன் நான் தம்பி
கூண்டில் அடைத்து வைத்தாயே
குந்தி இருக்கிறேன் பார் தம்பி
வெளியில் என்னை விட்டுப்பார்
வேகத்தை நீ கேட்டுப் பார்
வழியில் ஆமை வந்தாலே
எனக்கு நித்திரை வரும் தம்பி.

அ. டொலன்ரீனோ நிலக்சன்
(சில்லாலை றோ. க. த. க. பாடசாலை)

## மூளைக்கு வேலை

1. ஒரு மரத்தின் கொப்பில் ஒரு கூட்டம் குருவிகள் வந்து இருந்தன. அம்மரத்தின் கீழ் இருந்த ஒருவர் அக்குருவிகளைப் பார்த்து நீங்கள் மொத்தமாக எத்தனை பேர் இருக்கிறீர்கள் எனக் கேட்டார். அதற்கு அவற்றின் தலைமைக் குருவி நாங்களும், எங்களளவும், எங்ளிற் பாதியும், அதிற் பாதியும், நீரும் சேர்த்தால் நூறு என்று சொல்லியது. ஆகவே அந்த மரத்தின் வந்து இருந்த குருவிகள் எத்தனை?

2. ஓர் இலக்கம் உண்டு. இந்த இலக்கத்தால் எந்தப் பெரிய எண்ணைப் பெருக்கி வரும் விடையிலுள்ள இலக்கங்களைத் தனித் தனி கூட்டினால் கடைசியில் பெருக்கிய இலக்கமே விடையாக வரும். ஆகவே பெருக்கிய இலக்கம் என்ன?

3. 66 அடி நீளங்கொண்ட ஒருபுகைவண்டி 30 மைல் வேகத்தில் சென்றுகொண்டிருக்கிறது. அவ்வண்டி புகையிரதப் பாதை அருகில் நிலையாக நிற்கும் ஒரு மனிதனைக் கடக்க எவ்வளவு நேரம் செல்லும்?

— மகாலிங்கம் மயூரன் —
(விடை XI ஆம் பக்கத்தில்)

## தெரியுமா உங்களுக்கு?

1. தாலி அணிந்த நாடு எது?
2. தானங்களில் சிறந்த தானம் எது?
3. திருமணமாகாத பிரமச்சாரி ஊர் எது?
4. ரோகங்களிலே பெரிய ரோகம் எது?
5. எந்த வாளிக்கும் இல்லாத பெருமை இந்த வாளிக்கு உண்டு, அது என்ன?
6. முதல் எழுத்துடைய மிருகம் எது?
7. உதட்டில் மலரும் பூ. அது என்ன?
8. வயிற்றில் வராத பசி. அது என்ன?
9. தகவல் கொண்டு வரும் பால், எவரும் குடிக்காத பால். அது என்ன?


—எஸ். சிந்துஜா—
(ஆண்டு 6,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

## இராட்சத அளவுக்கு வளரும் திமிங்கிலம்!


உலகில் வாழும் விலங்குகளில் மிகப் பெரியது திமிங்கிலம். இராட்சத அளவுடைய திமிங்கிலங்கள் பொதுவாக 30 மீற்றர் நீளம் இருக்கும். உருவத்தில் சிறிய திமிங்கிலங்களும் உண்டு.

### பிராணி உலகம்

திமிங்கிலம் நுரையீரல் மூலமே மூச்சு விடுகிறது. சிறிது நேரத்துக்கு ஒரு முறை திமிங்கிலம் கடல் நீருக்குமேலே வந்து மூச்சு விடும். அப்பொழுது நீர்பீறிடுவதைப்போல அந்த மூச்சுக்காற்று 'விர்' என்று மேலே கிளம்பும். இது பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கும். திமிங்கிலத்தின் காதுகள் மிகச்சிறியவை; கண்களும் மிகச் சிறியவை. இதன் உடலின் வெப்பநிலை சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறாமல் எப்பொழுதும் ஒரே நிலையில் இருக்கும். எனவே இது வெப்ப இரத்தப் பிராணியாகும். இது குட்டி போட்டுப் பால் கொடுக்கும். தோலுக்கு அடியில் கொழுப்புப்படலம் இருக்கிறது இதன்மூலம் திமிங்கிலம் கடும் குளிரையும் தாங்கிக் கொள்ள முடிகிறது.



திமிங்கிலத்தின் உணவு பெரும்பாலும் தாவரங்களும், சிறிய பிராணிகளுமே ஆகும். ஆனால் இறைச்சி மட்டுமே தின்னும் திமிங்கில வகைகளும் உண்டு. இவற்றில் ஒரு வகையைக் கொலைத் திமிங்கிலங்கள் என்று சொல்வார்கள்.



திமிங்கிலங்களில் — பல் திமிங்கிலங்கள், சிம்புத் திமிங்கிலங்கள் என இரண்டு பிரிவுகள் உண்டு. பற்கள் உள்ள திமிங்கிலம்தான் இறைச்சி தின்னும். பற்கள் இல்லாத திமிங்கிலத்தின் வாயில் கொம்புப் பொருளால் ஆன தகடுகள் உண்டு. இவையே சிம்புகள் ஆகும். இவற்றில் உள்ள உரோமம், பிடிபட்ட இரை தப்பிப் போகாமல் காக்கும். திமிங்கிலம் சுமார் நூறு ஆண்டுகள் உயிர் வாழ்கிறது.

திமிங்கிலத்தின் கொழுப்பிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயும், அதன் எலும்பும் பல வகைகளில் பயன்படுகின்றன. எண்ணெயிலிருந்து சோப்பு, மெழுகுவர்த்தி முதலியன செய்கிறார்கள். திமிங்கிலத்தின் குடலிலிருந்து அம்பர் என்னும் ஒருவிதமான நறுமணப்பொருள் கிடைக்கின்றது.





## மாணவா எழுந்திடு! மாட்சிமை புரிந்திடு!!

| | | | |
|---|---|---|---|
| சூரிய | கதிரொளி | புகுதிசை | நாடி |
| சீரிய | செடிகொடி | புகுந்தது | ஓடி |
| நேரிய | புதுவழி | தருமடி | தேடி |
| ஓரின | வடிவொடு | கற்றிடு | கூடி |
| பாரினி | லெதுதுயர் | மாணவா | எழுந்திடு |
| கூரிய | அறிவொடு | தேறிட | நடந்திடு |
| ஆரியி | னொளியொடு | வாழ்வினை | புனைந்திட |
| மாரியாய்ப் | பொழிந்திடு | கல்வியில் | நனைந்திடு |
| போரினா | லெழுஇடை | உடைநடை | கொண்டிடு |
| பூரிப்பி | னொடுநிறை | குறையறத் | தந்திடு |
| கிரியின் | நெடுபகை | அரவதை | கடுப்பவே |
| சோதிட | பொய்யது | பரவிடா | தடுத்திடு |
| தாரினை | தாங்கிடு | தோள்களாய் | தளைத்திடு |
| பூவிதை | ஓங்கிட | நாள்களாய் | உழைத்திடு |
| தேரினைச் | செலுத்திடு | ஓட்டியாய் | மாறியே |
| பாரினை | வளர்த்திடு | அரசினை | புரிந்திடு |
| சேரியி | னிழிநிலை | சென்றுமே | துடைத்திடு |
| மேரியின் | மகன்வழி | என்றுமே | நடந்திடு |
| பேரின | வெறியதை | தட்டியே | அடக்கிடு |
| சோதியி | லெழுபவி | கட்டியே | வளர்த்திடு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— இ. யூலியஸ் நிஷாந்தன் —
(ஆண்டு 10, இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி)

## இயலுமா?



இலக்கம் 8 முதல் 32 வரையான எண்களைக் கொண்டு இந்த அட்டவணையின் 25 வெற்றிடங்களையும் நிரப்ப வேண்டும். எந்தப்பக்கமாகக் கூட்டினாலும் விடை நூறாக வரவேண்டும். உங்களால் முடியுமா? பார்க்கலாம்!

எஸ். வி. செல்லையா
(XI ஆம் பக்கம் பார்க்க)

## மின்னும் சின்ன நட்சத்திரம்

("Twinkle Twinkle Little Star" என்ற அரிவரிப் பாடலை அடியொற்றிய தமிழ்ப்பாடல் இது.)

மின்னும் சின்ன நட்சத்திரமே — நீ
யாரென்றெண்ணி வியக்கின்றேன்
வானில் பதித்த வைரம்போல்
வெகுதூரம் மேலே நிற்கின்றாய்
மின்னும் சின்ன நட்சத்திரமே — நீ
யாரென்றெண்ணி வியக்கின்றேன்.

எரிக்கும் சூரியன் மறைகையிலே
வெளிச்சம் இல்லா வேளையிலே
மின்னி மின்னி ராமுழுதும் — உன்
சின்ன ஒளியைத் தருகின்றாய்
மின்னும் சின்ன நட்சத்திரமே — நீ
யாரென்றெண்ணி வியக்கின்றேன்.

நான் இரவு நேரப் பிரயாணி
நன்றி உனது சிறு ஒளிக்கு
உன் கீற்றொளி எதுவும் இல்லாமல்
என் செல்வழி எதுவென அறியேனே
மின்னும் சின்ன நட்சத்திரமே — நீ
யாரென்றெண்ணி வியக்கின்றேன்.

— ம. வித்தகன் —

## வாழ்வதற்கு சில வழிகள்

அன்னையைப் போல் அன்புடனும்
ஆண்டவனைப் போல் கருணையுடனும்
எறும்பைப் போல் சுறுசுறுப்புடனும்
எருதைப் போல் கடின உழைப்புடனும்
காகத்தைப் போல் கூட்டுறவுடனும்
கழுதையைப் போல் பொறுமையுடனும்
நாயைப் போல் நன்றியுடனும்
தேனீயைப் போல் சேமிப்புடனும்
புறாவைப் போல் ஒழுக்கத்துடனும்
புலியைப் போல் வீரத்துடனும்
யானையைப் போல் அறிவுடனும்
மானைப் போல் நெடுநாட்களும்
வாழ்ந்திடு!

— சாளின் நவரட்ணம் —
(ஆண்டு 8, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

## நொடிப்பொழுது

1. சொல்லாமல் வரும், நில்லாமல் போகும். அது என்ன?
2. இந்த முடிச்சை அவிழ்த்தவருக்கு சந்தனப் பூமாலை. அது என்ன?
3. பாகாய் உருகும்; பருக முடியாது. அது என்ன?
4. வேண்டாததை வாங்கும்; விதியோரம் நிற்கும். அது என்ன?
5. கத்திபோல் இலை விரியும்; கண்டா மணிபோல் காய்காய்க்கும். அது என்ன?
6. வண்ணவண்ணச் சேலைக்காரி; வயது வந்த பூக்காரி; வழிநெடுகப் போகிறாள். அவள் யார்?
7. மணி அடித்ததும், மலைப்பாம்பு ஊருது. அது என்ன?
8. ஒரே குடிலுக்கு, ஒரே கப்பு. அது என்ன?
9. மடியிலே எடுத்துக் கடையிலே விற்பது. அது என்ன?
10. ஊசி மூக்கன்; சந்தைக்குப் போவான். அவன் யார்?

வே. ஸ்கந்தமயூரன்
(ஆண்டு 6, யாழ். இந்துக்கல்லூரி)

## விடைகள்

1. இத்தாலி. 2. நிதானம். 3. கன்னியாகுமரி. 4. துரோகம். 5. அறிவாளி. 9. ஓநாய். 7. சிரிப்பு. 8. ஐப்பசி. 9. தபால்.

## விடைகள்

1. நாள். 2. இடியப்பம். 3. இரும்பு. 4. குப்பைத்தொட்டி. 5. அன்னாசி. 6. வண்ணத்துப்பூச்சி. 7. புகைவண்டி. 8. காளான். 9. பால். 10. இறால்.

# பொருத்தம்...

(V ஆம் பக்கத் தொடர்)

எதுவும் தேவையில்லையடா''

நிறுத்திவிட்டுச் சற்று மூச்சு வாங்கினேன். ரமணன் விழி இமைக்காமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ரை மனிசியைப் பார் மச்சான். நாங்கள் எல்லாம் ஒண்டாப்படிச்சனாங்கள் தானே. அவளின்ர அமைதியான குணத்துக்கு ஈடா, அப்ப எந்தப்பெட்டையாவது நிண்டிருப்பாளவையே? கிட்டத்தட்ட ஒரு வருசம் நோட் பண்ணிப்போட்டுத்தானே மச்சான் நான் என்ரை மனதை வெளிப்படுத்தினான். இப்ப நான் வாழ்க்கையிலை சந்தோஷமா இருக்கிற மாதிரி எவன் இருக்கிறான் சொல்லு பாப்பம்? முதலிலை மனப்பொருத்தத்தைப் பார்க்க வேணும் மச்சான். என்ரை அனுபவத்திலை சொல்லுறன்.''

''நீ சொல்லுற மாதிரியே அவள் இருக்கட்டுமன். நான் அவளை அனுசரிச்சுப் போனால் சரிதானே மச்சான்?'' ரமணன் கேட்டான்.

''அனுசரித்துப் போகத் தான் வேணும். அது ஒரு பக்கம் மட்டும் இருக்கக் கூடாது.''

''நீ எதை வேணுமெண்டாலும் சொல். நான் இதை ட்ரை பண்ணிறதெண்டு முடிவு செய்திட்டன்.'' ரமணன் முடிவாகச் சொல்லிவிட்டு எழுந்தான்.

''அப்ப என்னத்துக்கடா என்னட்ட அட்வைஸ் கேட்டனீ?...சரி, என்னவோ நான் சொல்லுறதையும் சொல்லிப் போட்டன். இனி உன்ரை பாடு'' எழுந்து அவனுடன் நடந்தேன்.

சரியாக ஆறுமாதத்தில் ரமணன் நினைத்ததைச் சாதித்துவிட்டான்.

அவனது திருமணத்துக்குப் போயிருந்தபோது அந்தப் பெண்ணைப் பார்த்தேன். ரமணன் மயங்கியதில் வியப்பில்லை என்று தோன்றியது.

கல்லூரியில்இருமாத 'லீவு' எடுத்துக்கொண்டு ரமணன் இந்தியா, சிங்கப்பூர் என்று சுற்றிவந்தான்.

என்னிடம் வந்து பேசும் போது 'சேட் கொலரைத்' தூக்கிவிடுவான்.

''பாத்தியே மச்சான்! என்னவோ சொன்னாய்; அவள் அப்படியில்லையடா'' என்பான்.

நான் மௌனமாகச் சிரிப்பேன்.

காலம் தனது கடமையைச் செய்யத் தவறுவதில்லையே! அது தன்பாட்டுக்கு ஓடிக்கொண்டிருந்தது.

என்னைப் போலவே ரமணனுக்கும் இரண்டு பிள்ளைகள். இப்போதெல்லாம் ரமணன் பழையபடி கலகலப்பாக இருப்பதில்லை. அவனது குடும்பவாழ்வைப் பற்றிக் கேட்கவேண்டும் என நினைப்பேன். பிறகு, அவனாகவே சொல்லட்டும் என விட்டுவிடுவேன்.

ஒரு நாள் மதியம் 'டீ' குடிக்க கன்ரீனுள் நுழைந்தேன். ஐந்து வருடங்களுக்கு முன் அமர்ந்திருந்த அதே நாற்காலியில் ரமணன் அமர்ந்திருந்தான். அருகே சென்று மெதுவாகத் தோளைத்தட்டினேன். நிமிர்ந்து என்னைப் பார்த்தான். மறுகணம், மேசையிலே கவிழ்ந்துகொண்டான்.

''நான் தோத்துப்போனன் மச்சான்!'' அவனது உடல் இலேசாகக் குலுங்கியது.

''அவள் என்னைப்போட்டு மிதிக்கிறாளடா. பிள்ளைகளையும் தன்ரை பக்கம் இழுத்து வைச்சுக் கொண்டு......! ஒவ்வொரு நாளும் சண்டையடா.''

நான் எதுவும் பேசாமல் அமர்ந்திருந்தேன். கொஞ்ச நேரம் கழித்து என்னை நிமிர்ந்துபார்த்தான்; கண்கள் நன்றாகச் சிவந்திருந்தன.

நான் தொண்டையைச் செருமிக்கொண்டு சொன்னேன்.

''நான் அப்ப சொன்னதைக் கேட்டிருந்தா இவ்வளவும் வந்திராது. இந்த விஷயத்திலை வெள்ளம் வர முன்னமே அணைபோட வேணும். எங்களைப்பார். நாங்கள் கணவன் மனைவி எண்ட கட்டுப்பாட்டை நினைக்கிறேல்லை. நாங்கள் இப்பவும் லவர்ஸ்தான். சரி......நடந்ததை நினைச்சுக் கொண்டிருக்காமல், உன்ரை மனிசி அமைதியாயிருக்கிறநேரம் இதமாகச் சொல்லிப்பார். சிலவேளை மாற்றம் ஏற்படலாம்.''

ரமணன்மெதுவாக எழுந்து வெளியே நடக்கத் தொடங்கினான்.

தள்ளாடியபடி நடக்கும் அவனைப் பரிதாபத்துடன் பார்த்தபடி, ஆறிப்போன ரீயை எடுத்துக் குடிக்கத் தொடங்கினேன்.

(யாவும் கற்பனை)

# இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்)

**துலாம்:** என்ன ஓரே பிஸியாக இருக்கிறீர்கள்? உங்கள் உடல் அசைவை விட மூளையின் சிந்தனை வேகம் அபரிமிதமானது. எதையும் தீர்க்கமாக யோசித்து முடிவுகள் எடுத்தபடி இருப்பீர்கள். உங்களை எவரும் இலேசில் அளவறிந்துவிட முடியாது. தொழில்ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்து நடக்கும். கொடுக்கல்—வாங்கலில் சிக்கல்கள் சிலருக்கு ஏற்படும். குடும்பத்தில் எதிர்ப்பாலாருடன் பல விஷயங்களில் ஒத்துப் போகமுடியாமல் இருக்கும். இடாம்பீகப் பொருள்களுக்கும், இசை தொடர்பான பொருள்களுக்கும் செலவு அதிகரிக்கும். வயிற்றில்நோ, தலைவலி, நாரி நோ, கைகவில் தடிப்பு, சொறி, கிருமித் தாக்கம் கொடுக்கும். இடைக்கிடை ஓய்வு எடுத்துவாருங்கள்.

★ அதிர்ஷ்டநான்: வியாழன், வெள்ளி.

**விருச்சிகம்:** மற்றவர்களைப் பற்றி அதிகம் யோசிக்க மாட்டீர்கள். அடக்க ஒடுக்கமாக அங்கும்—இங்கும், எங்கும் அலசி ஆராய்ந்தபடி இருப்பீர்கள். நாடகமே உலகம். நாளை நடப்பதை யார் அறிவார்? என்று வசனம் பேசுவீர்கள். சக்தி, வேகம், புத்தி எல்லாவற்றையும் தொழில் ஸ்தானத்தில் சமநிலைப்படுத்துவீர்கள். இலாபம் இல்லாவிட்டால் எல்லாவற்றையும் தலைகீழாக்கிவிடுவீர்கள். நெஞ்சுநோ, வாய்வுச் சேஷ்டை, கிருமித்தாக்கம், கண்—சிரசு வரட்சி, நோ என்பவற்றால் வருந்துவீர்கள். பதற்றமும்—பிணியின் தாக்கமும் குறைய பரமபிதா — பரந்தாமன் பாதங்களைப் பற்றி நடவுங்கள். தாக்கம் குறையும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன்.

**தனுசு:** கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலை தான் ஏற்படும். எதையும், எதிர்ப்பதாலும், பிரச்சினைகளை வளரவிடுவதனாலும் எந்தவிதமான நன்மையும் ஏற்படாது. தொழில் ஸ்தானத்தில் அடி—பிடிதான். கொஞ்சம் வளைந்து கொடுத்து நடக்கக்கூடாதா? பொருள் செலவுகளை மட்டுப்படுத்தி வாருங்கள். உங்களின் சுறுசுறுப்பும், பிறருக்கு உதவி செய்யும் மனோபாவமும் பல புதிய நண்பர்களை உருவாக்குவித்தரும். நெஞ்சுவலி, கைகால் உளைவு, நாரிவலி, சளித்தொல்லை, உஷ்ணபீடைகள், காலில் காயம் என்பன சிலரை வருத்தலாம். இடமாற்றங்களையோ — பிரயாணங்களையோ தவிர்த்துக்கொள்ளவும். அதனால் வீண் இழப்புக்களைத் தவிர்ப்பீர்கள்.

★ அதிர்ஷ்டநாள். திங்கள், வெள்ளி.

**மகரம்:** உங்களைப் போல பொறுமைசாலிகள் எவரும் இருக்கமுடியாது. உலகத்தில் இடாம்பீகத்தால் எதுவும் பெரிதாக நடக்காது. தொழில்ஸ்தானத்தில் பொருள் செலவுகள் அதிகரிக்கும். ஆயினும் மேலதிகாரிகள் பல உதவிகளைச் செய்து தருவார்கள். அடக்கமாக இருந்து குடும்பத்தினருக்கு உதவி செய்து வருவீர்கள். வயிற்றுக்கோளாறு, நரம்புப் பலவீனம், கைகாலில் காயம் அல்லது வலிகள், வாத, வாய்வு உளைவுகள் கொடுக்கும். உஷ்ணபீடைகள், தலைவலி அதிகரிக்கும். புதிய திட்டங்கள் எனச்சொல்லி உங்களுக்குத் தெரிந்த ஒருசிலர், பணம் பறிக்கத் திட்டமிடுவார்கள். எனவே மிக அவதானமாக இருக்கவேண்டிய காலமாகும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், வியாழன்.

**கும்பம்:** என்ன ஆராய்ச்சி நடத்துகிறீர்கள்? எந்தவிஷயங்களையும் அறுத்துறுத்து சொல்லவோ ,மிகநுட்பமாக அணுகவோ உங்களால் முடியும். தொழில்ஸ்தானத்தில் அதிகமாற்றங்களைச் செய்ய முனைவீர்கள். நண்பர்கள் உதவி செய்து தருவார்கள். எதிர்ப்பாலாருக்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். உங்களைச்சுற்றி இருக்கும் சுயநலம் மிக்க கூட்டத்தால் அதிக இலாபம் இராது. தனிமையில் அதிக சிந்தனை ஏற்பட்டபடி இருக்கும். பெரியவர்களின் மனம் நோக நடவாதீர்கள். கைகால்வலி, நாரி நோ, சலவருத்தங்கள், நெஞ்சுநோ என்பன வருத்தலாம். சாப்பாட்டை நிதானப்படுத்தி வரவும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், வியாழன்.

**மீனம்:** சனீஸ்வரனின் தாக்கத்தால் பதற்றம் அதிகரித்தபடி இருக்கும். தொழில்ஸ்தானத்தில் அதிகமான போராட்டநிலை ஏற்பட்டபடி இருக்கும் காலமாகும். மனம் சுத்தமாக இருந்தாலும் நீங்கள் பேசும் பேச்சுக்களால் பகைகள் ஏற்பட்டபடி இருக்கும். கொடுக்கல் வாங்கலிலும், பிரயாணங்களிலும், இழப்புக்களைச் சந்திக்க நேரிடலாம். கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலையும் சிலரை வருத்தலாம். புதிய ஒப்பந்தங்களை நிதானமாகச் செய்யவும். முள்ளின்மேல் சேலைவிரித்த பின்புமெல்ல மெல்லத்தானே எடுக்க முடியும். சிலகாரியங்களில் அவசரமாக இறங்கி விட்டு அவதிப்பட நேரிடலாம். பொருளில் அவதானம்; களவுகள் போகலாம்; அவமானப்படவும் நேரிடலாம். சளி, நெஞ்சுநோ, உஷ்ணபீடைகள், கைகால் தாக்கங்கள், வாய்வுத் தொல்லைகள் ஏற்படலாம். குலதெய்வவழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், வியாழன்.

★

# கருவாகி...

(V ஆம்பக்கத் தொடர்)

யுமா என்று மாணவிகளுக்குத் தெரியவில்லை. அதனால்தான் யாருமே சிறுகதைப் போட்டிக்குப் பெயர் கொடுக்கத் துணியவில்லை.

★ ★ ★

மகப்பேற்று வைத்திய நிபுணரின் ஆலோசனைகள் சிவகாமி—சிவராசன் தம்பதிக்குத் தொடராகக் கிடைத்து வருகின்றன. முதலில் சிவராசன் மீதான மருத்துவப்பரிசோதனையும், தொடர்ந்து சிவகாமி மீதான மருத்துவப் பரிசோதனைகளும் நடத்தப்பட்டன. இருவரிடமும் எந்த விதமான குறைபாடுகளும் இடையாதென்றும், கருவளமுள்ள—மிகவும் திருப்திகரமான உடற்கூற்றைப் பெற்றவர்களென்றும் பரிசோதனையின் முடிவுகள் தெரிவித்தன. இருந்தும் படிப்படியாக வைத்தியர் தனது அனுபவ ஆலோசனைகளை அவர்களுக்கு வழங்கிக்கொண்டிருந்தார்.

வைத்தியரின் கூற்றுப்படி தமக்கு எப்படியும் குழந்தை கிடைக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்கிருந்தது. வைத்தியக்கலாநிதியின் ஆலோசனைகள் அனைத்தையும் ஒழுங்குமுறை தவறாது அவர்கள் கடைப்பிடித்து வந்தனர்.

ஆண்டவனின் அருட்கடாட்சம் வேண்டி சிவகாமி, பூசை, புனஸ்காரம், விரதம், வேண்டுதல் எல்லாம் அனுஷ்டித்து வந்தாள். சிவராசனுக்கு இதிலெல்லாம் நம்பிக்கை குறைவு.

★ ★ ★

சிறுகதைப்போட்டியில் யாருமே கலந்துகொள்ள முன்வரவில்லை என்னும் விவரம் அதிபருக்குத் தெரிய வந்தது. தனக்குள்ள இரத்தக்கொதிப்பு நோய் கருதி தன் கொதிநிலை உணர்வுகளைப் புறம்தள்ளி வைத்தார் அவர். அவ்வாரத்தின் கடைசி நாளான வெள்ளிக்கிழமையன்றுகாலை பிரார்த்தனை நேரம் முடிவுற்றதும் அவர் உரையாற்றத்தொடங்கினார்.

தமது பாடசாலை என்பது எவ்வகைகளில் எல்லாம் சகல துறைகளிலும் சிறந்து விளங்குகின்றது என்றும், இன்னும் எவ்வகைகளில் எல்லாம் அதைச்சிறப்புறச் செய்ய முடியுமென்றும் மிக நீண்டநேரம் அவரால் எடுத்துரைக்கப்பட்டது. முடிவில் போட்டிக்கெனத் தன்னால் தெரிவுசெய்யப்பட்டதாக நான்கு மாணவிகளின் பெயர்களை அவர் அறிவித்தார்!

ரஜனி... ராதிகா... நிவேதா ...நிரோஷினி...! இவர்கள் நால்வரும் அதிபரிடம் தமது ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்காக அவரிடம் வந்திருந்தனர்.

''உங்கடை திறமையெல்லாம் எனக்குத்தெரியும்...உங்களாலை ஏன் சிறுகதை எழுதமுடியாது?' அதிபரால் அவர்களது ஆட்சேபனைகள் நிராகரிக்கப்பட்டன. அவர்கள் நால்வரும் ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் அதிவிசேடசித்தி பெற்றவர்கள்!

''உங்களுக்குத் தெரிஞ்ச சிறுகதை எழுத்தாளர் யாராவது ஊரிலை இருப்பினம்... அவையளிட்டைப் போய்க் கேட்டு எண்டாலும் எழுதிக் கொண்டு வாருங்கோ'' அதிபர் தீர்மானமாகச் சொல்லி விட்டார்!...

குறிப்பிட்ட அந்தச் சஞ்சிகை அனுப்பிவைத்திருந்த தலையங்கம் 'பெண்மையின் எழுச்சிக்காக' என்பதாகும். அந்த விடயத்தின் கீழ்கதைக்கான தலைப்பிடு வதும் கதையை எழுதுவதும் அவர்களது பொறுப்பாகும்!

★ ★ ★

புகழ்பெற்ற அந்த மகப்பேற்று மருத்துவ நிபுணரின் ஆலோசனைக்காலம் முடிந்து நீண்ட நாள்கள் கழிந்து போய்விட்டன. இன்னும் சிவராசன் தம்பதியினர் 'நாம் இருவர்' என்றேதனித்திருந்தனர். உடல் ரீதியான குறைபாடுகளென்றேதும் இல்லாமலிருந்தும்...அவர்கள் நிலையில் மாற்றமேதும் ஏற்படவில்லை.

அதனால் அவர்கள் மீண்டும் அதே வைத்தியரை ஆலோசனை வேண்டி நாடினார்கள்.

இயற்கை முறையில் அவர்களுக்கு கருத்தரிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லாத பட்சத்தில் செயற்கை முறையில் கருத்தரிக்கும் சிகிச்சை செய்து கொள்ளச் சம்மதிக்கிறீர்களா என அவர்களைப் பார்த்து டாக்டர் கேட்டார்.

சிவராசன் அதை விரும்பவில்லை. இயற்கையாக நடக்க வேண்டிய விடயங்களையெல்லாம் செயற்கை வழியில் நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் எதுவும் இல்லையென்றான். அத்துடன் தமக்குக் குழந்தைகள் இல்லையென்ற காரணத்தினால்தான், தமிழர்களின் சனத்தொகையில் குறைவு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்று கூறமுடியாதுள்ளதென்றும், நன்றாகப் பழகிவிட்ட வைத்தியரிடம் வேடிக்கையாய் சொல்லிச் சிரித்தான் அவன். ஊரில் எத்தனையோ பெற்றோரை இழந்த குழந்தைகள் உண்டு என்று மெய்யுணர்வுடன் உருகினான். சிவகாமிக்கும் அவன் கருத்துக்கள் அத்தனையிலும் உடன்பாடுண்டு.

★ ★ ★

அவ்வூரில் சிறுகதை எழுத்தாளன் என்பது சிவராசன் மட்டும்தான். வேறு யாராவது புனைபெயரில் எழுதினாலும் எழுதக்கூடும். ஆனால் சிவராசன் மட்டும் தான் சொந்தப் பெயரில் அங்கிருந்து எழுதுபவன். அவனது படைப்புக்கள் அற்புதமானவை என்றில்லாது போனாலும் ஓரளவு சமூக நலன் சார்ந்தவையாகும்.

ரஜனியின் சித்தப்பா சிவராசன் என்பது பலருக்குத் தெரியாத விடயம். ரஜனி தனக்கும் மிகுதி மூவருக்கும் ஏற்பட்டிருக்கும் இக்கட்டான நிலைமைதனை சித்தப்பாவிடம் சொன்னாள். அதனால் ரஜனி, ராதிகா, நிவேதிதா, நிரோஷினி நால்வரையும் நேரில் சந்திக்க வேண்டிய இக்கட்டான நிலைமை சிவராசனுக்கு ஏற்பட்டது.

சிவராசன் பொறுப்புணர்வுடன் சிறுகதை பற்றியும் அதை எப்படி எழுதுவது என்பது பற்றியும் அவர்களுக்கு விளங்க வைத்தான். விளக்கத்தின் முடிவில் முதிய தந்தையிடம் தனது இளமை அத்தனையையும் பறிகொடுத்து நின்ற பீஷ்மர் போல்... தனது கதை எழுதும் திறன் அத்தனையையும் அப்பெண்பிள்ளைகளிடம் பறிகொடுத்த உணர்வுக்கு ஆளானான் அவன்.

ஆனால் பரிதாபம்! அவனது விளக்கமெல்லாம் அவர்களுக்கு சிதம்பர சக்கரமாகத் தெரிந்தன. தம் நால்வருக்கும் தனித்தனியாக நான்கு கதைகள் எழுதித்தந்தால் மட்டும் போதுமென்றும் தாம் அவற்றைப் பார்த்து எழுதிப் போட்டிக்கு அனுப்பி விடமுடியும் என்றும்... கடையில், கத்தரிக்காய் கால் கிலோ என்ன விலை... என்று கேட்பது போல் சாதாரணமாய் அவனிடம் அவர்கள் கேட்டனர்!

''இன்னொருவன் குழந்தையை என் குழந்தை யென்று எப்படிச்சொல்ல முடியாதோ... அது போலவே தான் நான் எழுதித்தரும் கதைகளையும் உங்களுடையது என்று சொல்ல முடியாது.'' என்று சிவராசன் அவர்களுக்கு உவமையுடன் கூடிய பதிலொன்றைச் சொன்னான்.

அவன் கூற்றுக்கள் எதையும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் அவர்கள் இல்லை. சிறுகதைக்கான கருவையாவது அவனைத் தந்துதவும்படி அந்தப் பெண்பிள்ளைகள் அவனிடம் வேண்டினார்கள்!

சிவராசனுக்குச் சிரிப்பு வந்தது. உடனடியாக நான்கு கருக்களுக்கு அவன் எங்கே

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைகள்

IX ஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### வார்த்தை விளையாட்டு

நங்கை, நகை, நகு, நலம், நம், நடை, நடம், நட, நலங்கு, நட்டம், கை, கைவிலங்கு, பகை, பங்கு, பகு, பலம், பல, பதம், பலகை, படை, பதவி, படம், படகு, படலம், பட்டம், பட்டை, படங்கு, பட்டணம், பணம், குகை, குலம், குதம், குடை, குவி, குடம், குடகு, குவவி, குட்டை, குணம், தங்கு, தகு, தலம், தபம், தகை, தடை, தவி, தடம், தடவி, தட்டம், தட்டை, தடங்கு, விடை, விதம், விட்டம், விலங்கு, விடம்.

### மூளைக்கு வேலை

1) 36 குருவிகள்.
2) ஒன்பது.
3) ஒன்றரை செக்கன்.

### இயலுமா?

| | | | | |
|---|---|---|---|---|
| 24 | 31 | 8 | 15 | 22 |
| 30 | 12 | 14 | 21 | 23 |
| 11 | 13 | 20 | 27 | 29 |
| 17 | 19 | 26 | 28 | 10 |
| 18 | 25 | 32 | 9 | 16 |

## உடலும் உள்ளமும்....

(III ஆம் பக்கத் தொடர்)
அடைந்துவிட்ட சமயம் போதும் என்ற எண்ணம் உருவாக வேண்டும்.

★ பெரிய புரட்சிகரமான மாற்றங்கள் இன்றி எனது வாழ்க்கை இப்படியே தொடர்ந்தால் போதும் என்ற பொன்னான மனம் வேண்டும்.

★ சூழ உள்ளவர்கள் அனைவரையும் திருப்திப்படுத்துவது இயலாத காரியம். பெரும் தலைவனாக நீங்கள் உருவாகத் தேவையில்லை. அப்படி ஒவ்வொருவரும் ஆகவும் முடியாது. பலராலும் ஒரு நல்ல மனிதன் என்ற சுமாரான பாராட்டைப் பெற்றுக்கொண்டால் சரி.

இவ்வளவும் 'O.K' என்றால் நீங்கள் மகிழ்ச்சியாக வாழ்வதாக நினைத்துக் கொள்ளலாம். அதைவிட வேறு பாக்கியம் இவ்வாழ்வினில் தேவை இல்லை.

உறக்கம் இன்றித் தவிப்பவர்கள் நிம்மதியாக வாழவதாக எவரும் கணிக்க இயலாது. எனவே அதைக்கூட ஒரு அளவு கோலாகப் பாவித்து உங்கள் உடல், உள ஆரோக்கியத்தை நீங்களே அளந்து கொள்ளலாம்.

சிலர் படுத்தவுடன் குறட்டை விடத் தொடங்கி விடுகிறார்கள். பக்கத்தில் உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருப்பவர்களுக்கு அது பெரும் எரிச்சல் தரும் சமாச்சாரம் ஆகிறது. விடிந்து சூரியன் முகத்திலடிக்கும் வரை அவர்களின் கும்பகர்ண படலம் தொடரும். என்ன நிம்மதியான தூக்கம்!

படுத்துப் பல மணி நேரம் உருண்டு புரண்டு உறக்கம் வராதா எனத் தவிப்பவர்களுக்கு ஏதோ கோளாறு தான். அது உடலிலும் இருக்கலாம். உள்ளத்திலும் இருக்கலாம்.

படுத்தவுடன் உறங்கிவிடும் சிலர் சிலமணித்தியாலம் தூக்கம் முடிந்ததும் சாமத்தில் விழித்து விடுகிறார்கள். விடியும் வரை அவர்கள் படும் அவஸ்தை தினசரி கொடுமைதான்.

இரவு நிம்மதியாகத் தூங்கி எழுந்தால் விடிந்தபின் அசதி ஏதுமின்றி அலுவல்களைக் கவனிக்கலாம். எதிலும் உற்சாகத்துக்கு குறைவு இருக்காது.

தொலைக்காட்சி பார்க்கும் போதோ, கூட்டங்களில்—கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளும் போதோ, பயணம் செய்யும்போதோ பலரைத் தூக்கம் ஆட்டிப் படைக்கும். வகுப்புகளில் சில மாணவர்களின் நிலையும் அதுதான். ஆனால் இவர்களுக்கெல்லாம் வீட்டில்வந்தவுடன் நீட்டி நிமிர்த்திப்படுத்தால் உறக்கம் கிட்டவும் வருவதில்லை. (தொடரும்)

## கருவாகி...

(X ஆம் பக்கத் தொடர்ச்சி)
போவான்? சிறுகதைக்கான கரு என்பது இயற்கையாக அவரவர் உள்ளத்திலிருந்தே உருவாக வேண்டியது என்பதை எப்படிச்சொல்லி அவர்களுக்குப்புரிய வைப்பான்? தலைப்பைத் தந்து எழுது என்றால் தன்னால்கூட ஒரு கட்டுரையைத்தான் எழுத முடியும் என்ற உண்மைதனை அவர்கள் முன்னே ஒப்புக்கொள்ள அவன் தயங்கினான்.

'எழுத்தாளன் பிறக்கிறான்... அவன் உருவாக்கப் படுவதில்லை' என்னும் கூற்றினை அவர்களால் புரிந்து கொள்ள முடியாதென்பது அவனுக்குத் தெரிந்தது.

''பிள்ளையள்... பெண்மையின் எழுச்சிக்காக என்னும் தொனிப் பொருளின் கீழ் உங்களுக்கு நாலு தலைப்புக்களைத்தான் என்னால் தர முடியும்... நீங்கள் கதையை எழுதிப்பாருங்கோ...'' என்றான் சிவராசன்!

அதையாவது கொடுக்காது போனால் தனக்கும் அவர்களுக்குமிடையில் போர் மூண்டு போகுமோ என்றதொரு மெலிதான அச்சம் அவனுக்கிருந்தது! ★

(யாவும் கற்பனை)

## சபலம்...

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டும்.

மனம் ஒரு குரங்கு. இந்த மனம் மரத்துக்கு மரம் தாவிக் கொண்டுதான் இருக்கும். சபலத்தை தோற்றுவிப்பதும் இந்த மனம்தான். அத்தகைய மனத்தை நாம் கட்டிப் போட்டால் நிச்சயமாக எம்மால் சபலத்தை சாகடிக்க முடியும்; எனவே சபலத்தை சாகடிக்கக் கூடிய வழிகளை நாம் கண்டு கொள்ள வேண்டும்.

சபலத்தை அழிக்கும் ஓர் ஆயுதம் தியானம். தியானத்தில் மூழ்கினால் சபலத்தை மூழ்கடிக்கலாம். எனவே தியானத்தை வளர்ப்போம்; சபலத்தை அழிப்போம்.

சமூகத்தை உருவாக்க வேண்டியவர்கள் நாங்கள். சபலத்தை வென்று ஆரோக்கியமான ஒரு சமூகத்தை வளர்ப்போம். சாதனை படைக்க வேண்டிய வயதில் சபலம் எதற்கு? எனவே சபலத்தைவென்று சாதனையை இலக்காகக் கொண்டு சாகும் வரை தெளிவுடன் செயற்படுவோம். ★




உடலின் ஜீவன் மிகவும் கலக்கமடைந்தது. காரணம் ஐம்புலன்களும் தங்களுக்குள் சச்சரவிட்டுக் கொண்டிருந்தன. 'யார் சிறந்தவன்?' என்ற பிரச்சினை; தங்களுக்கிடையில் போட்டி. ''நான்தான் சிறந்தவன்'' என்று புலன்கள் ஒவ்வொன்றும் தருக்கி நின்று கூச்சலிட ஆரம்பித்தன.

''நானே சிறந்தவன். நான் இல்லாவிட்டால் எதையுமே பார்க்கமுடியாதே'' என்று கண் ஆணவத்துடன் கூறியது.

''செவிப்புலன் இல்லாவிட்டால் உலகில் எதைக்கேட்பாய்...? எதை ரசிப்பாய்...? நானே சிறந்தவன்'' இப்படி செவி சீற்றமுடன்பேசியது.

''மலர் வாசனை... உணவின் வாசனை... நாற்றம் ஆகியவற்றை இனம்காண்பது யார்? நான்தானே... நானே சிறந்தவன்'' என்று கூறி மூக்கு முழங்கியது.

''சுவையை அறிவது நாக்கே... வாய்தானே உணவை மென்று சுவைத்து உண்ண உதவுகிறது? வாயே புலன்களில் சிறந்தவன்'' இப்படி வாதிட்டதுவாய். ''பேசுவதும்கூட நானேயன்றோ...'' என்பது வாயின் வீராப்பு.

''உஷ்ணம், குளிர், வலி, ஸ்பரிசம், இன்பம், துன்பம் இவற்றை இனம் கண்டு உணர்த்துவது... தொடு புலன்... நானே அல்லவா? என்னைவிட சிறந்த புலன் எதுவும் இல்லை...'' என்று கூச்சலிட்டது தோல்.

இப்படி புலன்களிடையில் போட்டிக்கூச்சல்.

ஜீவனால் இந்தப்புலன்களின் தன்முனைப்புக் குரலைச் சகித்துக்கொள்ள முடியவில்லை.

புலன்களின் போட்டி... தர்க்கம்... ஆர்ப்பாட்டம்... உச்சக்கட்டத்தை எட்டியது.

இதற்குத் தீர்வுதான் என்ன?

யார் சிறந்தவன் என்று கூறவல்லவர் யார்?

தங்கள் பிதாவாகிய பிரஜாபதியிடம் (பிரம்மதேவரிடம்) சென்று தங்கள் விவாதத்தைக் கூறின.

(புலன்கள் பிரஜாபதியிடம் சென்றன என்பது உருவகம் எனப்படும். அர்த்தவாதம்.)

''தந்தையே... தந்தையே... எங்களைப் படைத்தவர் தாங்கள். தாங்களே எங்களில் யார் சிறந்தவர் என்று சொல்லுங்கள்'' என்று கேட்டன.

பிரஜாபதி புன்னகை செய்தார்.

''உங்களில் யார் உடலை விட்டு நீங்குவதால் அதிகமாகத் துன்பம் ஏற்படுகிறதோ அவனே சிறந்தவன்'' என்றார் பிரஜாபதி.

தந்தை சொன்னதைச் சோதித்துப் பார்த்து விடுவது என்ற தீர்மானத்துடன் ஐம்புலன்கள் (இந்திரியங்கள்) திரும்பின.

முதலில் வாக்கு — உடலை விட்டுப் பிரிந்து கொஞ்ச காலம் சென்றது, மீண்டும் திரும்பி வந்தது.

''உடலே... உடலே... நான் இல்லாமல் நீ எப்படி வாழ்ந்தாய்? வாக்கு இல்லாமல் உன்னால் வாழ முடிந்ததா?''

''ஊமையாகப் பிறந்தவர்களைப் போல் கண்ணால் பார்த்து... காதால் கேட்டு... மூக்கால் சுவாசித்து... சிந்தித்து வாழ்ந்தேன் வாக்கு இல்லாவிட்டால் என்ன?'' என்று உடல் கூறிய பதிலைக் கேட்டு வாய் மௌனம் சாதிக்க வேண்டியதாயிற்று.

அடுத்து, கண் புலன் உடலை விட்டுப்பிரிந்து சென்றது.

குருடர் வாழவில்லையா என்ன? செவிப்புலன் இருக்க வாயால் பேசி... மற்ற புலன்கள் செயல்பட வாழ்ந்தது உடல்.

உடல் விட்டு அகன்ற செவிப்புலன், சிறிது காலத்திற்குப் பிறகு திரும்பியது.

''செவிப்புலன் இல்லாத வாழ்க்கை... அப்படி ஒன்றும் துன்பமாக இல்லை... செவிடராக வாழமுடியாதா என்ன?''

மூக்கு முகர்உணர்வு நீங்கிய போது —

''முகர்ச்சி இல்லாதது ஒரு பெரிய குறையா என்ன? குழந்தை போல வாழ முடியுமே''

தொடு உணர்வு......ஸ்பரிச உணர்வு...நீங்கியபோது—

''மரக்கட்டை போலவாழ முடியும். இதனால் துன்பமில்லை'' என்று உடல் கூறியது.

கடைசியில் ஜீவன் வெளியேறத் தொடங்கியது. பிராணன் உடலை விட்டுப்பிரியத் தொடங்கியதுமே...மற்ற இயந்திரங்கள் தத்தம் ஜீவிதத்தை இழக்க ஆரம்பித்தன.

கண்பார்வைஇழந்தது;
செவி கேட்க மறுத்தது;
வாய் குழற ஆரம்பித்தது;
மூக்கு மோப்ப சக்தியை இழந்தது.

உடல் முழுவதும் எறும்பு கடித்தாலும் உணர்வில்லை; ஈ மொய்த்தாலும் தெரிவில்லை.

கட்டி வைத்த முளைகளைப் பிடுங்கிக்கொண்டு குதிரைகள் கிளம்புவது போல, புலன்கள் தங்களை இழுத்துக்கொண்டுபோவதை அறிந்த உடல் தாங்க முடியாத துன்பத்தை அனுபவித்தது. தவிப்பு...! தத்தளிப்பு...! மிகுந்த தடுமாற்றம்......!

புலன்கள் எல்லாம் ஒருசேர இப்போது கூச்சலிட்டன:

''ஏ பிராணனே.........நீ போகாதே! ஓ ஜீவனே..... நீ நீ உடலை விட்டுப் பிரிந்து விடாதே! நீயே சிறந்தவன் ...நீயே சிறந்தவன்... எங்களுடைய சிறப்புக்கெல்லம் உன்னால் தான்...நீ இல்லாமல் நாங்கள் செத்தவர்களாவோம்...!'' என்று கூக்குரலிட்டன.

ஐம்புலன்களைவிட பிராணனே சிறந்தது.

ஜீவனே இந்திரியங்கள் எல்லாவற்றையும் விட மேலானது என்பதைப் புலன்கள் உணர்ந்து தெளிந்தன.

பிராணனை விட உயர்ந்தது ஆத்மா. ஆத்மவை விட உயர்ந்தது வேறு எதுவுமே இல்லை என்று சாந்தோக்கியம், பிரகதாரண்யகம் ஆகிய உபநிஷதங்கள் உணர்த்துகின்றன. ★

### உபநிடதக் கதை

## யாழ்ப்பாண...

(II ஆம் பக்கத் தொடர்)
என்பதுஇப்போதுமெதுமெதுவாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாண வர்த்தகர்கள் மீது வீண் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தியது போலவே சப்பலைச் செலுத்தி வந்த இந்தியரான கப்டன் மீதும் அவசரத்தனமாகக் குற்றஞ் சாட்டினர். அவர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர் என்றும், கடற்படையினரின் உத்தரவுகளை மீறி நடந்தார் என்றும் கூறியிருந்தனர்.

ஆனால் கப்பல் கப்டன் வி. என். காக்ரே தெரிவித்த விவரங்கள் அரசு தரப்புக் கூறியது பொய் என்பதனையே காட்டுகின்றன.

மேலும் கப்டன் காக்ரேயை அவர் இந்தியா புறப்படும் வேளையில் விமான நிலையத்தில் வைத்து விசாரித்தது குறித்தும் இந்திய ராஜீக வட்டாரங்கள் அதிருப்தி அடைந்துள்ளன.

''பிறின்ஸஸ் காஷ்'' விவகாரத்தால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ராஜீக மட்டத்தில் சிறு முறுகல் நிலையை உண்டாக்கும் சாத்தியம் உண்டு என்று [illegible] கிறது. ★

## பிரேமானந்தா சுவாமியின் சொத்துக்கள் ஏலத்திற்?

புதுடில்லி, ஒக். 22

தமிழகத்தில் கொலை மற்றும் கற்பழிப்பு வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட இலங்கையரான பிரேமானந்தாவின் இந்தியச் சொத்துக்களை ஏலம்விடுவதை இவ்வாரம் வரை தள்ளிவைக்குமாறு புதுடில்லி உயர்நீதிமன்றம் கடந்த 13 ஆம் திகதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

பிரேமானந்தாவுக்குகொலை மற்றும் கற்பழிப்புக் குற்றங்களுக்காக இரண்டு ஆயுள் தண்டனையும், 66 லட்ச ரூபா அபராதமும் விதிக்கப் பட்டது.

பிரேமானந்தாவுக்கு ஏராளமான சொத்துக்கள் உள்ளதுடன் அவரது பெயரில் வங்கியில் பணமும் உள்ளது. அவருக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகையிலிருந்து அவரால் கற்பழிக்கப்பட்டதாகக் கருதப்படும் பெண்களுக்கு தலா 5 லட்சம் ரூபாவை நஷ்டஈட்டுத் தொகையாக வழங்க வேண்டும் என்றும் மாவட்ட [illegible] தமது தீர்ப்பில் கூறியிருந்தார்.

இதனை எதிர்த்து பிரேமானந்தா சென்னை உயர் நீதிமன்றத்தில் மேன் முறையீட்டு மனுத்தாக்கல் செய்தார். இதனையடுத்து பிரேமானந்தாவுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையில் 30 லட்சம் ரூபாவை வசூலிக்க புதுடில்லி உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. மீதமுள்ள 36 லட்ச ரூபா அபராதத்தை வசூலிப்பதற்காக அவரது ஆச்சிரம சொத்துக்களை ஏலம்விட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். கடந்த 13 ஆம் திகதி ஏலம் நடத்தப்படும் என்று அறிவிக்கப் பட்டது.

இதை எதிர்த்து மீண்டும் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. நீதிபதிகள் என்.கே. ஜெயின் ஏ. ராமமூர்த்தி ஆகியோர் அடங்கிய நீதிமன்று இவ்வாரம் வரை ஆச்சிரம சொத்துக்களை ஏலம்விடக் கூடாது என்று உத்தரவிட்டது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றத்தை ஒப்புக்கொண்டு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முயலும் கிளின்ரன்!

வெள்ளைமாளிகையின் முன்னாள் பணிப்பாளர் மொனீக்கா லூவின்ஸ்கியுடன் தாம் முறைகேடான — அதாவது வாய்மூல —பாலுறவு வைத்திருந்ததை அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் ஒப்புக் கொண்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை வெள்ளை மாளிகையில் வைத்து விசேட வழக்குத் தொடுநர் கெனத் ஸ்ரார் (Starr Kenneth) முன்னிலையில் கிளின்ரன் சுமார் நான்கு மணிநேரத்துக்கு மேல் விசாரணை செய்யப்பட்டார்.

இவரது சாட்சியம் குறுகிய தூர விசேட ரெலிவிஷன் மூலம் சமஷ்டி நீதிமன்றத்தின் 23 ஜூரர்சபை முன் ஒளிபரப்பப்பட்டது. ரெலிவிஷனில் ஜூரர்களின் கேள்விகளுக்கு கிளின்ரன் பதில் அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### ரெலிவிஷனில் தோன்றி மன்னிப்புக் கேட்டார்

வெள்ளைமாளிகையில் சாட்சியம் அளித்த பின்னர் தேசிய ரெலிவிஷனில் கிளின்ரன் தோன்றி நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார். நான்கு நிமிடங்கள் மட்டுமே அவரது உரை இடம்பெற்றது.



கெனத் ஸ்ரார்

பொய் சொல்லுமாறோ அல்லது சாட்சியத்தை மறைக்குமாறோ தாம் ஒருபோதும் மொனீக்காவைக் கேட்கவில்லை என்று தமது உரையில் கிளின்ரன் கூறினார்.

''எனது மனைவிஉட்பட நாட்டு மக்களை தவறாக நம்பவைத்து விட்டேன்'' என்று கூறி கிளின்ரன் மன்னிப்புக் கேட்டார்.

ஏற்கனவே ஜெனிபர் புளோவர், பௌலா ஜோன்ஸ் ஆகியோருடன் சம்பந்தப்பட்ட பாலியல் குற்ற விசாரணைகளில் விடுபட்ட கிளின்ரன் மொனீக்கா விவகாரத்திலும் தப்பி விடுவார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நிலைமை மாறிவிட்டது.

### காங்கிரஸில் அறிக்கை

இந்த விசாரணை தொடர்பான முழு அறிக்கையும் எதிர்வரும் நவம்பரில் அமெரிக்க நாடாளுமன்றமான காங்கிரஸில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையை வைத்தே கிளின்ரன் மீதான அடுத்த நடவடிக்கை குறித்து முடிவு செய்யப்படும்.

இந்த அறிக்கையை வைத்து கிளின்ரன் மீது அமெரிக்க நாடாளுமன்றத்தில் குற்றப் பிரேரணை கொண்டுவர முடியும். அல்லது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும். கடந்த திங்கட்கிழமை வெள்ளைமாளிகையில் நடைபெற்ற விசாரணையின்போது கெனத் ஸ்ராரின் பல கேள்விகளுக்கு கிளின்ரன் பதில் அளிக்கவில்லை. ஆகவே கிளின்ரன் சாட்சியம் அளிக்க மீண்டும் அழைக்கப்படலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

1973 இல் ரிச்சாட் நிக்ஸன் வாட்டர் கேட் விவகாரம் தொடர்பாக பெரும் நெருக்கடியை எதிர் நோக்கி இருந்தார். அதன் பின்னர் இப்படியான நெருக்கடியை எதிர் நோக்கி இருப்பவர் கிளின்ரன்தான்.

மொனீக்காவை பொய் சொல்லுமாறு கிளின்ரன் கோரினார் என்பதை நிரூபிக்க வைக்கவே கெனத் ஸ்ரார் முயன்றார். இப்படியான குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அமெரிக்க நாடாளுமன்றத்தில் கிளின்ரனுக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டு வர முடியும்.

தனக்கு எதிரான கிரிமினல் குற்றச் சாட்டுத் தொடர்பாக சாட்சியம் அளித்த பதவியில் உள்ள முதலாவது ஜனாதிபதியும் கிளின்ரன்தான்.

## ஆனால் கெனத் ஸ்ராரின் விசாரணை தொடரும் அறிகுறி

முறைகேடான (Oral Sex) பாலியல் குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டு இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினார் கிளின்ரன்.

அதனால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளவும் தயாராக இருந்தார். ஆனால் இத்துடன் இந்த விவகாரம் முடிந்து விடும்போல் தெரியவில்லை. விசேட வழக்குத் தொடுநர் கெனத் ஸ்ரார் விடுவதாகத் தெரியவில்லை.

### உபஜனாதிபதி ஆதரவு

தலைகுனிவை ஏற்படுத்தும் இந்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் உபஜனாதிபதி அல்பேட் கோரின் ஆதரவு கிளின்ரனுக்கு இருப்பது கிளின்ரனுக்கு கிடைத்த வெற்றியே.

மொனீக்காவுடன் தான் வைத்திருந்த முறைகேடான பாலியல் உறவை ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்த பின்னர் உபஜனாதிபதி அல்பேட்கோர் கிளின்ரனுக்கு ஆதரவு தெரிவித்து அறிவிப்பு ஒன்றை விடுத்தார்.

அல்பேட் கோர், கிளின்ரனுக்கு ஆதரவு தெரிவித்து விடுத்த அறிவிப்பும்—

உடனடியாக எடுக்கப்பட்ட பொதுமக்கள் அபிப்பிராய கணிப்பில் கிளின்ரனுக்கு அமெரிக்க மக்களின் ஆதரவு இருப்பதும்—குடியரசுக்கட்சியினருக்குஏமாற்றத்தைக் அளித்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

### மொனீக்காவின் மனமாற்றம்

இம்மாதம் 6 ஆம் திகதி மொனீக்கா ஜூரர்கள் சபை முன் அளித்த சாட்சியமே கிளின்ரனின் பாலியல் விவகாரத்தில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது.



கிளின்ரன் தனது மகள் ஷெல்சி மனைவி ஹில்லாரி ஆகியோருடன்கடந்த ஞாயிறுதேவாலயம் சென்று பிரார்த்தனை நடத்தினார்.

முன்பு பௌலா ஜோன்ஸ் சம்பந்தப்பட்ட விசாரணையில் மொனீக்கா அளித்த சாட்சியத்துக்கு இது நேர் எதிரானது.

கிளின்ரன் தம்மீது பாலியல் துன்புறுத்தல் புரிந்ததாக பௌலா ஜோன்ஸ் குற்றஞ்சாட்டி இருந்தார்.

## உலக உலா

என். பி. சீலன்

இதில் சாட்சியம் அளிக்க மொனீக்காவும் அழைக்கப்பட்டார்.

அப்பொழுது இந்த விசாரணையில் கிளின்ரனுக்கும் தமக்கும் இடையில் இருந்ததாகக் கூறப்படும் முறைகேடான பாலியல் [illegible] குற்றச்சாட்டுக்களை மொனீக்கா மறுத்தார்.

மொனீக்காவுடன் தான் பாலியல் தொடர்பு எதனையும் வைத்திருக்கவில்லை என்று கிளின்ரனும் அப்பொழுது தெரிவித்திருந்தார்.

### கிளின்ரன் மொனீக்காவை பொய்சொல்ல வைத்தாரா?

பௌலா ஜோன்ஸ் சம்பந்தப்பட்ட விசாரணையில் கிளின்ரனுடனான பாலியல் உறவை மொனீக்கா மறுத்ததுக்கு கிளின்ரன் காரணமாக இருந்தாரா?

இதனைக் கண்டறிய விசேட வழக்குத் தொடுநர் கெனத்ஸ்ரார் முயற்சித்தார்.

1997 டிசம்பரில் கிளின்ரன் பொஸ்னியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த சமயமே பௌலா ஜோன்ஸ் விவகாரத்தில் சாட்சியம் அளிக்க மொனீக்காவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

மொனீக்கா சாட்சியமளிப்பதற்கு முன் மொனீக்காவுடன் கிளின்ரன் பொஸ்னியாவில் இருந்து அவசரமாக தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

அதன்பின்னர் வாஷிங்டன் திரும்பிய பின்னரும் மொனீக்காவைச் சந்தித்தார்.

கிளின்ரனுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்தால் வேலை பெற்றுத் தருவதாக கிளின்ரனின் நெருங்கிய சகாவும் வெள்ளைமாளிகைப் பேச்சாளருமான லோனொன்ஜோர்டான் கேட்டுக்கொண்டார்.

இதன் பின்பே மொனீக்கா கிளின்ரனுடனான பாலியல் உறவை மறுத்து சத்தியக்கடதாசி ஒன்றில் கையெழுத்திட்டார்.

இப்படி நம்புகிறார் கெனத் ஸ்ரார்.

மொனீக்கா பொய் கூறினார் என்றும்—

அதற்கு கிளின்ரனே காரணம் என்றும் — அவர் கூறுகிறார். ஆனால் தாம்மொனீக்கவைப் பொய்சொல்லும்படி ஒருபோதும் கூறவில்லை என்பதை கிளின்ரன் தொடர்ந்து வலியுறுத்திவருகிறார். கடந்த திங்கட்கிழமை சாட்சியம் அளிக்கும் போதும் இதனையே கிளின்ரன் தெரிவித்தார்.

### முன்பு சொன்னதை மறுத்து மொனீக்கா சாட்சியம்

மொனீக்காவுடனும் மொனீக்காவின் பெற்றோர்களான டொக்டர் பேர்னாட் லுவின்ஸ்கி, மார்சியாலூயிஸ் ஆகியோருடனும் கென்னத் ஸ்ரார் தொடர்ந்து நடத்திய பேச்சுக்களின் பின்பே இம்மாதம்6 ஆம் திகதி மொனீக்கா ஜூரர்கள் சபை முன் மீண்டும் சாட்சியமளித்தார்.

பௌலா ஜோன்ஸ் சம்பந்தப்பட்ட விசாரணையில் தாம் அளித்த சாட்சியத்துக்கு முழு எதிர்மாறாக, கிளின்ரன் தம்முடன் 12-க்கு மேற்பட்ட தடவைகள் முறைகேடான பாலியல் உறவுகொண்டிருந்தார் என்று மொனீக்கா தெரிவித்தார்.

இதனை அடுத்தே கடந்த திங்கட்கிழமை கிளின்ரன் சாட்சியம் அளித்து, தாம் உறவுவைத்திருந்ததை ஒப்புக்கொண்டார்.

### நவம்பரில் தேர்தல்

உலகிலேயே சிறந்த ஜனநாயக நாடான அமெரிக்காவில் நவம்பர் முதல்வாரத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. ஜனாதிபதித் தேர்தல் 2000ஆம் ஆண்டில் நடைபெறும்.

கடைசியாக எடுக்கப்பட்ட பொதுமக்கள் அபிப்பிராய கணிப்பீடுகள் கிளின்ரனுக்கு எதிராக இல்லை.

ஆகவே நாடாளுமன்றத் தேர்தலில் கிளின்ரனின் பாலியல் விவகாரம் ஜனநாயகக் கட்சியைப் பெரிதாகப் பாதிக்கும் என்று சொல்ல முடியாது.

ஏ.பி.சி. எடுத்த பொதுமக்கள் அபிப்பிராய கணிப்பீட்டில் கிளின்ரன் மீதான கெனத் ஸ்ராரின் விசாரணைகள் கைவிடப்படவேண்டும் என்று 60 சதவீதமான அமெரிக்கர்களும் —



மொனீக்கா லூவின்ஸ்கி

இந்த விவகாரம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று 69 சதவீதமான அமெரிக்கர்களும் கருதுகிறார்கள்.

தம்மீது சுமத்தப்பட்டுள்ள பாலியல் குற்றச்சாட்டுக்கள் தமக்கு எதிரான வலதுசாரிகளின் சதி என்று கிளின்ரன் கூறுகிறார்.

இந்த விவகாரம் கிளின்ரனை தலை குனிய வைத்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அமெரிக்க மக்கள் இதனைப் பெரிதாகப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. ★

வெள்ளைமாளிகையின் முன்னாள் பணியாளர் மொனீக்கா லூயின்ஸ்கியுடன் தாம் வைத்திருந்த முறைகேடான பாலியல் உறவை கிளின்ரன் ஒப்புக் கொண்ட போதிலும் அது கிளின்ரனினதும் அவரது மனைவி ஹில்லாரியினதும் தாம்பத்திய வாழ்வை பாதிக்க மாட்டாது என்று கிளின்ரன் தம்பதியரின் ஆத்மீகத்துறை ஆலோசகரான ஜெஸ்ஸே ஜாக்சன் சி. என். என்னுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

கிளின்ரனும் ஹில்லாரியும் மிகவும் அன்பான தம்பதியர். கடந்தகால நெருக்கடிகளின் போதெல்லாம் கிளின்ரனை தைரியப்படுத்தி வந்தவர் ஹில்லாரிதான் என்றும் ஜாக்சன் கூறினார்.

எனினும் மொனீக்காவுடனான முறைகேடான பாலியல் உறவை கிளின்ரன் ஒப்புக் கொண்டது ஹில்லாரிக்கு பெரும் அவமானத்தை ஏற்படுத்திவிட்டது என்பதை ஜாக்சன் ஏற்றுக் கொண்டார்.

மதபோதனையாளரும் மனித உரிமைக்காகக் குரல் கொடுத்து வருபவருமான ஜாக்சன், கிளின்ரன் சாட்சியம் அளிப்பதற்கு முன் வெள்ளை மாளிகை சென்று கிளின்ரன் தம்பதியருடன் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org